மாதப் பத்திரிகை

பொங்கல் வெளியீடு

ஆசிரியர் :

கா. வெ. ராமசந்திரன்

பஹுதான்ய வருஷம் முதல் வால்யூம் தைப்பகுதி

14—1—1939.

விஷய ஸூசிகை.

விஷயம்:		பக்கம்.
1 சில்பஸ்ரீ சித்திர விளக்கம் ...	பத்திரிகாசிரியர்	1
2 சில்பஸ்ரீ மாதப்பத்திரிகையின் நோக்கங்கள்	,, ...	2
3 சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்	,, ...	3
4 இளந்தமிழ்	இளந்தமிழன்	3
5 பாரதியும் சிற்பமும்	வே. நாராயணன் M.A., M.L., ...	4
6 கலைச்சுதந்திரம்	கௌண்டின்யன்	6
கவிதா விமர்சம்		
1 மனத்துள்ளான்	மாயக்கூத்தன்	9
2 காதலும் பக்தியும்	ஸ்ரீவாதூலன்	11
3 சோழநாடு	பண்டிதர் ச. சோமசுந்தர தேசிகர்	14
4 தமிழ் நங்கையின் தங்கையர்	R. P. சேதுப்பிள்ளை * M.A., B.L..	17
5 விஷமகவி	விசாரதன்	20
6 துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு	ராவ். ஸாஹிப். ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் எடுத்துதவியது.	22
புதுக் கல்பனைகள்		
1 மீன நிலயம்	மா. கிருஷ்ணன், M.A., B.L., ...	25
2 ஸ்வப்ன பார்யை	வம்பன்	30
3 அவல் நாடகம்	ய. மகாலிங்க சாஸ்திரிகள், M.A., B.L., ...	31
4 திருமஞ்சனக் காட்சி :ஒரு ப்ரேக்ஷணகம்	கா. வே. ராமசந்திரன், B.A. ...	41
5 வாழ்த்து (பாடல்)	பத்திரிகைப் பித்தன் ...	48
அனுஷ்டானப் பகுதி		
1 பிரதக்ஷிணம் என்றால் என்ன ? ...	Dr. வே. ராகவன், M.A. Ph.D. ...	49
2 ஸிம்ஹாசலத்தில் கண்ட ஒரு நூதன சில்பம்.	,, ,, ...	50

* இக்கட்டுரை, ஸ்ரீமான் பிள்ளையவர்களால் சென்னை அகில இந்திய ரேடியோவில் டிஸெம்பர் மாதம் 30-ம் தேதியன்று உபன்யாசம் செய்யப்பட்டு, ஷை அகில இந்திய ரேடியோ நிர்வாஹர்கள் அனுமதியின் பேரில், இப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டது.

விஷயம் : பக்கம்.

மொழி பெயர்ப்புப் பகுதி

1 கதைக் கடல் ... ... டாக்டர் வே. ராகவன், M. A. Ph. D. ... 51

2 மொழிபெயர்ப்புக்கலை ... ... மும்மொழியாளன் 58

நிருபம்

1 மஹேந்திர வர்மனும் மதராஸ்கார்ப்பரேஷனும் ... வே. ரா. 59

கீதப்பகுதி

1 ச்யாமா சாஸ்திரிகள் செய்த தமிழ்க் கீர்த்தனை ச்யாம சாஸ்திரிகள் 60

2 கானரஸமும் கவிதையும்— ... ... அகமர்ஷணன் 61

3 சங்கீதமும் சிற்பமும் ... ... ஸ்ரீமதி டாக்டர் ஸி. மீனாக்ஷி அம்மாள், M.A., Ph. D. ... 62

சில்பப் பகுதி

1 சிலாவதாரம் ... ... விசாரதன் 65

நாட்டியப்பகுதி

1 நாட்டியக் கலை ... ... தூகளன் 66

2 தமிழ்ப்பரதம் ... ... பண்டிதர் ச. சோமசுந்தர தேசிகர். 67

சித்திரப்பகுதி

1 சித்திர சக்தி ... ... கௌசிகன் 69

புஸ்தக விமர்சனம்

1 திருவாரூர்ப்பள்ளு ... ... அகஸ்திய தாஸன் 70

2 சொல் விளக்கம் ... ... பார்க்கவன் 71

பத்திரிகாசிரியர் குறிப்புகள் 71

அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் இப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒருபக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறும் பிரார்த்திக்கிறோம்.

இப்பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி அல்லர்.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி விலை அணு 6.

வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட) ரு. 4.



சில்பஸ்ரீ சித்திர விளக்கம்.

சில்பம் என்பது ஸகல கலைகளையும் குறிக்கும் ஒரு சொல். சவியின் பாட்டு காவ்ய சில்பம். பாடசரது பாட்டு கான சில்பம். நர்த்தசரது கூத்து நாட்ய சில்பம்.

சில்பங்களில் உறைபவளே சில்பஸ்ரீ. முத்தமிழ்த் தேவியும் அவள். வடசொல் தலைவியும் அவள். ஆரியம் தமிழொடு இசையுமானவள் அவள் மறை நான்குமே அவள் புஜங்கள். அவள் கையில் தங்கிய ஏட்டோலை ஸர்வ சாஸ்திரங்களையும், வீணை ஸர்வ ஸித்திகளையும், கலசம் அம்ருதமயமான ரஸத்தையும், அக்ஷமாலையின் மணிகள் சதுர் யுகங்களையும் குறிப்பன.

இவளது கற்பனாவேக வைசித்ரியம், ஹம்ஸத்தை வென்றதால் இவள் ஹம்ஸம் குற்றேவல் செய்யப்பெற்ற கலைமகள் ஆனாள். சங்கநிதி பத்ம நிதிகளைத் தன் தாளின் கீழிட்டுப் பூமகள் ஆனாள். கோலப்பிறையைக் குழலில் அணிந்து ஈச்வரி ஆனாள். வித்யாதனமே இவளுடைய இருநிதிக் குவைகள்.

எவர்கள் இவள் அருளைப் பெற்றார்களோ அவர்களே உலகில் மஹா கவிகள் என்றும், மஹா சில்பிகள் என்றும், மஹா நர்த்தகர்கள் என்றும் போற்றப்படுவர். இவளைப் பிரத்யக்ஷமாய்த் தரிசனம் செய்தவர் ஆதிகவியான வால்மீகி பகவான். இவளைக்கனவில் கண்டவன் காளிதாஸன். இவள் புன்சிரிப்பு கூத்தரையும், கடைக்கண்பார்வை கம்பரையும் சிருஷ்டி செய்தன. அன்றியும், ஹோமரும், ஷெல்லியும், கீட்ஸும், இன்னும் வேறுவேறு தேசத்து வேறு வேறு காலத்து மஹாகவி சில்பிகளும், இவளது மானஸீக புத்திரர்களே. இவளைக் கொண்டுதான் இவர்கள் சில்பம் என்ற மஹா யஞ்ஞத்தை நிறைவேற்றுகிறார்கள். இவளே அவித்யை என்ற வறுமையைத் தீர்ப்பவள் ஸகல கலா ஸம்பத்தையும் தருபவள். இவளை வழிபட்டு, நாமும் இவள் அருளைப்பெறும் வழியைத் தேடுவோமாக.

சில்பஸ்ரீ
மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்.

(பத்திரிகாசிரியர் எழுதியது.)

தற்சமயம் தமிழ் அபிமானிகளுள் பண்டிதர் என்றும் நவீனர் என்றும் இரண்டு கோஷ்டிகள் உள்ளன. பழந் தமிழ் நூலாராய்ச்சிகளால் பண்டிதரும், புதுக்கற்பனைகளால் நவீனரும், தமிழ்த் தொண்டு செய்து வருகின்றனர். பண்டிதரைப் போலப் பழந் தமிழிலும், நவீனரைப் போலப் புதுக்கற்பனைகளிலும் ஈடுபட்ட இன்னொரு கோஷ்டியார் உளர். பழந் தமிழை மோஹித்த போதிலும், இக்கோஷ்டியார் கடினமான தமிழ் நடையை அங்கீகரிப்பதில்லை. எழுதும் தமிழ் எளிதாயிருக்க வேண்டும் என்பதும் ஆனால் பேசும் தமிழ் போல இராமல், அழகும், இனிமையும், கற்பனாதிசயமும் நிரம்பி இருக்கவேண்டும் என்பதும், இவர்கள் கொள்கை. இக் கொள்கையினர் சிலரால் நடத்தப்படுவது சில்பஸ்ரீ என்னும் இந்த மாஸ ஸஞ்சிகை.

தமிழருக்குத் தமிழின் அருமை பெருமைகளை எடுத்துக்காட்டி ஆற்றுப்படை செய்வது, சில்பஸ்ரீயின் நோக்கங்களுள் ஒன்றாகும். ஆற்றுப்படையாவது ஒரு புலவன் இன்னொரு புலவனிடம் தன்னை ஆதரித்த பிரபுவின் செல்வப் பெருக்கையும், கொடையின் பெருமையையும் புகழ்ந்து பாராட்டி, அவனை அப்பிரபுவிடம் வழிப்படுத்துவதே. புலவர் செய்யும் குணகீர்த்தனம் மனப்பூர்வமாய் இருப்பினும் இருக்கும்; உபசார வகைப்பாக இருப்பினும் இருக்கும். சில்பஸ்ரீயை நடத்தும் நாங்கள் தமிழின் சுவையை அனுபவித்தராய், அப்படி அனுபவியாதவர்களையும் மனப்பூர்வமாக எம்முடனிருந்து தமிழை அனுபவிக்குமாறு அழைக்கிறோம். தமிழின் ரஸத்தை முற்றும் அறிந்தவர் இல்லை ஆகையால், நாங்கள் காணாத சொல் பொருள் நயங்களைக் கண்ட நீங்கள் அவைகளை அன்புடன் எங்களுக்கு எடுத்துக் காட்டுங்கள். இப்படி நாமெல்லாரும் கூடி மகிழ்ந்து ரஸானுபவத்தைப் பெருக்கிக் கொள்வோமாக. நால்வர் கூடி அனுபவித்த இன்பம் நான்மடங்காகப் பெருகுவதும், துன்பம் கால்பங்காகக் குறைவதும் இயல்பன்றோ?

லக்ஷ்மியும், நான்மறையும், ஸகல செல்வங்களும் கடலில் மறைந்தபோது, திருமாலும், ஈச்வரனும் உள்பட ஸர்வ தேவதைகளும் முயற்சி செய்து, அவைகளை மீளத் தோற்றுவித்தனர் அல்லவா? தேவர்களுக்கும் முயற்சி இல்லாமல் காரிய சித்தி இல்லை என்றால், காலம் என்றகடலில் மறையக் கிடக்கும் நமது கலைச் செல்வங்களை பிரயத்தின மில்லாமல் மீட்ப தெப்படி? இழந்த சில்ப தனங்களை மீட்கும் பிரயத்தினமும் சில்பஸ்ரீயின் நோக்கங்களுள் ஒன்றாம். இடையறா முயற்சி சிறப்புத் திருவினையும் ஆக்குமன்றோ? தமிழ்ப் பணி என்னும் மஹா விரதத்தை ஸங்கல்பித்துக் கொண்ட மஹா விரதிகள் சிலர் உளர். அந் நல்லோர்களை ஸங்கமாகச் சேர்த்து அவர்களுள் சில்பஸ்ரீ பிரசுர கர்த்தாக்களான நாமும் ஒருவர் ஆக இச்சை கொண்டோம்.

'ஜன ஸமூகத்திலிருந்து ஒருவன் எவ்வளவு நன்மையைப் பெறுகிறானோ அதற்குமேல் அந்த ஸமூகத்துக்கு மீளக்கொடுப்பவனே பெரியவன்' என்றார் பர்னார்டு ஷா. நான்மறைக்குச் சமானமான முத்தமிழைத் தமிழருக்கு உதவிய அப்பர், ஸம்பந்தமூர்த்தி மாணிக்கவாசகர், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரர் முதலான மஹோபகாரிகளும், சங்கத் தமிழையளித்த புலவர்களும், கவிச் சக்கிரவர்த்திகளான கம்பரும் ஜயங்கொண்டாரும் கூத்தரும், பாரதத்தையும் திருப்புகழையும் அளித்த வில்லிபுத்தூராரும் அருணகிரி நாதரும், இத்தகைய பெரியோர்களே. தமிழ்க் கடன் என்பது தமிழர் எல்லாருக்கும் பொதுவான போதிலும், அதைத் தீர்க்க முயல்வோர் ஒரு சிலரே. அச் சிலரை எம்முடன் சேர்ந்து உழைக்குமாறு பிரார்த்திக்கிறோம். ஊர் கூடியல்லவா தேர் இழுபடுவது? மொழி வளர்ச்சி என்பது நாம் எல்லாரும் ஒன்றுபட்டுக் கவனம் செலுத்தினாலல்லது நிறைவேறாது. பலரும் கலந்து கொண்டாலன்றிப் பயன்படாத இப் பெரு முயற்சியில் சிறுமைகளுக்கும் பகைகளுக்கும் மனஸ்தாபங்களுக்கும் இடமேது?

மஹாத்துமாவும் வீர சிகாமணியுமான சோழன் ராஜராஜன், துளம்பரையும், கங்கரையும், சளுக்கரையும், ஆந்திரரையும், கலிங்கரையும், வங்கரையும், த்வீபாந்தரங்களுள்ளோரையும், ஒரு குடை நிழலில் பாலித்து,

ஜயக்கொடி வீரக்கொடிகளுடன், தவக்கொடி யையும், கலைக் கொடியையும், உயர்த்தி, வேறெங்கும் காணப்படாத அற்புத சில்பங்க ளால் தமிழ் நாட்டை அலங்கரித்த அன்று, தமிழர் இரண்டுபட்டுத் தர்க்கித்தனரா? புத்தி யினுலும் மேதையினுலும் வேறு வேறு பாஷை பேசும் தென்னிந்திய வர்க்கத்தவருக் கெல்லாம் 'திராவிடர்' என்ற தம் பெயர் அளித்த தமிழ் மக்களுக்குள், இலக்கிய சில்ப வாயிலாக ஒற்றுமையைக் கோருவதும் சில்பஸ்ரீயின் நோக்கம். ஆராதனரூபமான இலக்கிய சில்பங்களை கலகத்துக்கு விஷய மாக்க வேண்டாம்.

வேத புருஷன் சொற்படி 'நாம் இனியன மொழிவோமாக; இனியன செய்வோமாக! பெருமொழி மொழிவோ மாக; பெருஞ் செயல் செய்வோமாக!'

சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்.

காவ்ய மீமாம்ஸை என்ற இலக்கியப் பகுதியே சில்பஸ்ரீயின் முதல் பகுதி யாம். ஜாக ஞானமும் தாள ஞானமும் எப்படிப் பாட்டின் அழகுகளை அறிவுறுத் துவனவோ, அப்படியே கவிகளின் காவ்ய நாடகங்களில் உள்ள அழகையும் இனிமையை யும் கண்டவுடன் உணரச்செய்யும் ஞானம் ஒன்று உண்டு. அந்த ஞானம் படைத்தவர் களுக்கு 'ஸஹ்ருதயர்' என்று பெயர். இவர்கள் கவியைப்போல கவனசக்தி வாய்ந்த வர் அல்லர் எனினும், காவ்ய ரஸத்தை அனு பவிப்பதில், கவிக்கு ஸமானமான யோக்யதை உடையவர். இவர்களுடைய பகுதியே சில்பஸ்ரீயின் முதல் பகுதி. காவ்ய நாடகங் களின் அழகுகளை யெல்லாம் வெளிப்படுத்து வதே இப்பகுதியின் நோக்கம்.

பழங்காவியங்களெல்லாம், தமிழ்த்தாயின் பழைய நகைகளாம். இப்போது கற்பிக்கப் படும் நவநவமான கட்டுரைகளும், கதைகளும், சரித்திரங்களும், வர்ணனைகளும், புது அணிகலன்களாம். இவைகளை விஷயமாகக் கொண்டது, இரண்டாவது பகுதி.

கீதம், நிருத்யம், சில்பம், சித்தி ரம், முதலிய கலைகளை விஷயமாகக் கொண் டது மூன்ருவது பகுதி. எல்லா சிற்பங்களை யும் எல்லாப் பிரதிகளிலும் வியவஹரித்தல் இயலாது. ஆனல் ஒவ்வொரு பிரதியிலும் இரண்டொரு சில்பங்களைப் பற்றி எழுதி வந்தால், நாளடைவில் ஸகல சில்பங்களையும் ஒருவாறு பூர்த்தி செய்யலாம் என்ற எண்ணம் கொண்டோம்.

நமது பழக்கவழக்கங்களுள், சில்பங்களை ஆதாரமாகக் கொண்ட அனுஷ்டானங்கள் பலவுள. இவைகளை விஷயமாகக் கொண்டது மற்ருெரு பகுதி.

வடமொழி, இங்கிலீஷ் முதலிய பாஷை களிலிருந்து, உயர்ந்த இலக்கியங்களை மொழி பெயர்ப்பதும், சிறந்த நூல்களை விமர்சனம் செய்வதும் எமது நோக்கம்; இவைகளுக்கும் தனிப்பகுதிகளுண்டு.

பத்திரிகாசிரியர்.

இளந்தமிழ்.

(இளந்தமிழன் எழுதியது)

வான்மீகியின் காலத்திலே வடமொழி இளமைப் பருவத்தில் இருந்தது. அணிக ளின் அழகின்றியே மனதை வசீகரிக்கும் தன்மையன்ருே இளமை என்பது? அவ்வி ளமை பாஸன் காளிதாஸன் முதலிய வட மொழி மக்களால் வளர்ந்து முதிர்ந்து திகழ்வ தாயிற்று. அதுபோலவே, தமிழ் மொழியும் ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்திலே இள மையோடிருந்தது. தமிழ்த் தாயின் இள மையைப் பாதுகாத்த மக்களாவர் கம்பர் முதலான தமிழ்க் கவிகள். பின்பு சில தமிழ் மக்கள் தோன்றித் தமிழைக் கிழவியாக்கி, தம்மால் நேர்ந்த கிழத் தன்மையை மறைப்ப தற்கேபோல பற்பல அணிகளை அவளுக்குப் பூட்டித் தம்மைத் தாமே சம்மதித்துக் கொண்டார்கள். இவ்வாறு செய்வதன்று உண்மை மக்களின் கடமை. தாய் இளமை மாருதவளாக இருப்பின் அன்ருே மக்களுக் குப் பெருமை? 'சந்ததம் இளமையோடு இருக் கலாம்' என்ருர் ஒரு தமிழ்ப் பெரியார்.

அவ்வாறு இளமையோடு இருப்பதற்கு நாம் நமது தாய்மொழிக்குச் செய்ய வேண்டும் காயகற்பம் தான் என்ன? கிழவியாக்கிய தோடு நில்லாமல் தாயை அனுதரித்து, சாக அடித்து, 'அணிகள் வேய் பிணை' மொத்த பின், பெருமை கொண்டாடிச் சிராத்தம் செய்வதோ முறை? பராசக்திபோல தமிழ்த் தாயும் என்றும் பாலாம்பிகையாய் சக்தி வாய்ந்தவளாய் 'புத்தம் புதிய கலை'களை உடுத்துத் திகழ்பவளாய், கேட்போர் மனதைப் பிணிக்கும்' இளமையின்பமுடையவளாய் வாழுமாறு செய்வதன்றோ முறை?

இவ்வாறு தாய் மொழிக்குச் செய்யும் தொண்டினை, காயகற்ப முறையை, ஆங்கில மக்கள் கையாண்டிருக்கிறார்கள். அதனுல் ஆங்கில மொழி இன்றும் இளமை மாறுது உலகத்தை யெல்லாம் வசீகரிக்கும் தன்மையோடு உலவிவருகிறது. அவர்கள் கையாண்ட முறையை ஆராய்ந்தறியவேண்டும். அவர்கள் பழமை கொண்டாடிச் சும்மா இருக்கவில்லை. தனித்து வாழ்ந்து தீண்டாமை கொண்டாடி வேறு மொழிகளை இகழ்ந்து பேசுவதும் தாய் மொழியின் பழைய பெருமைகளைப் பேசுவதுமே தொழிலாக இருந்து விடவில்லை. நாடெங்கும் சென்று தங்களுக்குச் செல்வம் தேடிய தோடு நில்லாமல், தாய் மொழிக்கும் செல்வம் தேடிக் கொணர்ந்தார்கள். தங்களுடைய ஆதிக்கத்தால் தாய்மொழிக்கும் ஆதிக்கம் அளித்தார்கள். பிற மொழிகளைப் பயின்று அவற்றின் அழியாச் செல்வங்களை யெல்லாம் தாய் மொழிக்கு அர்ப்பணம் செய்தார்கள். இன்னும் பலவிதங்களிலும் தாய் மொழியின் ஜீவசக்தி அதிகரிக்கும்படி செய்தார்கள். சக்தியே இளமையின் வனப்பு. சக்தியே இளமையின் வளமை. சக்தியே இளமையின் பெருமை. சக்தியின் அவதார மென்று தமிழைக் கொண்டாடுமாறு நாம் அனைவரும் பலபடியிலும் முயன்று இளந்தமிழ் என்ற பட்டத்தைத் தாய் மொழிக்குச் சூட்டி இளந்தமிழ் மக்களாய் வாழவேண்டும். அவ்வாறு முயலவும் வாழவும் தமிழன்னையின் அருளையே பிரார்த்திப்போம், "நின்பொருட்டு நின்னருளால் நின்னுரிமை யாம் கேட்டால் என்பொருட்டு நீதான் இரங்காதிருப்பதுவே" என்று.

பாரதியும் சிற்பமும்.

தேவிபராசக்தி ஒரு சிறந்த சிற்பி. அனந்த கோடி ஆன்மாக்களும் சிற்ப ஸாதனமான கற்கள். அவற்றுள் ஒன்றைத் தெய்வச் சிற்பி கடவுளின் வடிவமெனப் பலரும் கொண்டாடுமாறு அமைப்பார். மற்றொரு கல்லை எல்லோரும் யாதொரு கௌரவ நினைவு மின்றியே மிதிக்கும்படி படிக்கல்லாக அமைப்பார். இவை சிற்பியின் இஷ்டம். ஆனுல் ஒரு விசேஷம். சாதாரணச் சிற்பியிடம் கற்கள் பேசுவதில்லை. பராசக்தியாகிய சிற்பியிடத்தில் கல் பேசும்; முறையிடும். சுப்பிரமணிய பாரதியாகிய இருங்கல் முறையிட்டதைக் கேளுங்கள்:

> "யாங்கணே, எவரை, எங்ஙனஞ்
> சமைத்தற் கெண்ணமோ அங்ஙனஞ்
> சமைப்பாய்.
> ஈங்குனைச்சரணேன் றெய்தினேன்;
> என்னை இருங்கலைப் புலவனுக்
> குதியே."

பராசக்தியின் சிற்பத்திறமை பாரதியாரின் பாடல்களில் விளங்குகிறது. சிற்ப சித்திரத்திற்கு ஓர் சிறந்த நிலைகளனுகும் பாஞ்சாலி சபதம் என்னும் பாடல். துரியோதனன் பாண்டவர்களின் செல்வத்தையும் செல்வாக்கையும் கண்டு பொறுமை கொள்கிருன்.

'பலபல வெண்ணி ஏழையாகி இரங்குதலுற்றுன்.........கல்லெனும் நெஞ்சன்'. இவன் கல் நெஞ்சு உருகியது தண்ணளியால் அன்று, பொறுமை யென்னும் வெம்மையாலே. இதைச் சிற்பித்துக் காட்டுகிறார் பாரதி, ஓர் உவமையாலே. "குன்றமொன்று குழைவுற்றிளகிக் குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம் கன்று பூதலத்துள்ளுறை வெம்மை காய்ந்தெழுந்து வெளிப்படல் போல."

ஆம்; இப்பொழுது அறிந்தோம், எரிமலை குறிக்கும் தத்துவத்தை. காய்ந்து காய்ந்து கன்றிப்போன பூதலத்தின் உள்ளே புழுங்கிக் கொண்டிருந்த வெம்மை வெடித்துக் கொண்டு வெளிப்படுகிறது. 'நெஞ்சத்துள் ஓர் பொறுமையெனும் தீ நீள்வதால்,' உள்ளம் நெக்குருகிப் போய், ஆண்மை, திண்மை, மானம், வன்மை யாவற்றையும் மறந்து ஏங்கிப் பரிதவித்துப் புலம்புவதுபோல, எரிமலையானது புகையையும் தீயையும் உருகிய கல்லையும் கக்குகிறது.

உவமை கூறுவதில் ஒரு முறை உண்டு. உவமானம் சிறந்ததாக இருக்க வேண்டும்; உவமானம் உவமேயத்தைவிடத் தெளிவானதாக இருக்கவேண்டும். இம்முறையை பாரதி

பயன்படுத்திக் கொள்கிறார், சிற்பத்தின் வகைகளை நமக்கு நன்கு விளக்கிக் காட்டுவதற்கு. "கவிதையும் சிற்பம்; பாட்டும் சிற்பம்; நாட்டியமும் சிற்பம்; சித்திர மெழுதுவதும் சிற்பம்; கட்டிடங் கட்டுவதும் சிலைகளைச் செதுக்குவதும் மட்டுமே சிற்பம் என்று கொள்வது தவறு. இவை சிற்பத்தின் கீழ்ப்பட்ட பிரகாரங்கள்." இவ்வுண்மையைக்கூறும் காவியசிற்பத்தைக் காணுங்கள்:

"வல்லவனுக்கிய சித்திரம் போலும்
வண்மைக்கவிஞர் கனவினைப்போலும்
....
கல்லையும் மண்ணையும் பொன்னையுங் கொண்டு
காமர் மணிகள் சிலசில சேர்த்து,
சொல்லை யிசைத்துப் பிறர்செய்யுமாறே
சுந்தரமாமொரு காப்பியஞ் செய்தார்"

சித்திரமும் கவிஞர் கனவும் உவமானங்கள்; உவமேயத்தைச் சொல்லவே யில்லை; அதற்குள் உவமானத்தின் பெருமை கவியினது மனதைக் கவிந்து கொள்கிறது. உவமையணியாகத் தொடங்கியது ரூபக அணியாகப் பரிணமிக்கிறது. சிற்பிகள் செய்ததும் ஒரு சுந்தரமான காப்பியம்; சொல்லை இசைத்துச் செய்த காப்பியம் அன்று; கல்லையும் மண்ணையும் பொன்னையும் இசைத்து மணிகளைப் பதித்துச்செய்த சுந்தரக் காப்பியம் இவர்கள் கட்டிய மண்டபம். இவர்கள் செய்த கற்காவியம் வெறுங்கண்ணுக்கு இன்பம் தருவது. கவிகள் கட்டும் சொற்சிற்பமோ மனமாகிய அகக்கண்ணுக்கே யன்றி காதுக்கும் நாக்குக்கும் இன்பம் ஊட்டுவது; சிற்ப சக்தியால் கேட்போர் புறக்கண் முன்பும் சுந்தர வடிவாக்கிக்காட்டுவது; இவ்வாறு ஆறு கரணங்களுள் நான்கினுக்கு இன்பங் கொடுப்பது காவிய சிற்பம்; இவ்வாறே கான சிற்பமும் நாட்டிய சிற்பமும். சித்திரத் தொழிலிலும் சிற்பத்தொழிலிலும் மனத்தையும் கண்ணையும் அபகரிக்கும் அழகு அமைந்திருந்தாலும் அவற்றோடு காதும் நாக்கும் ஒருங்கே சேர்ந்து இன்புற இடமில்லையன்றோ? இதனாலன்றோ, காவிய சிற்பத்தையும் கான சிற்பத்தையும் நாட்டிய சிற்பத்தையும் காண இயலாதவர்கள் சித்திரத்திலும் வடிவரூபத்திலும் அவ்வழகுகளை அமைத்துப் பார்த்தும் திருப்தி யடையாமல் வருந்துகிறார்கள். இவர்கள் கவிதை முதலியவற்றிலே கண்ட இனிமையைப் படத்திலும் செம்பிலும் கல்லிலும் காணாததற்குக் காரணம் சிற்பியின் குற்றங் குறைகள் அன்று; படமெழுதும் தொழிலுக்கும் கற்சிற்பத்துக்கும் இயற்கையான குறைவுபாடு தான் காரணம்.

வாக்கு, செவி, மனம், கண் ஆகியவற்றிற்கு இன்பம் அளிக்கும் சொற்சிற்பம், கானசிற்பம் நாட்டிய சிற்பம், சித்திர சிற்பம், வடிவச் சிற்பம்—இவைகளைப் போலவே, உடலுக்கும் நாசிக்கும் இன்பமளிக்கும் சிற்பங்களும் இயற்கையிலும் செயற்கையிலும் உள்ளன. கந்த சிற்பம் ஒரு தனிக்கலை. ஸ்பரிசசுகம் தரும் மெல்லணைகளும் மாடமாளிகைகள் முதலியனவும் செயற்கைச் சிற்பங்களாம். மக்களும் மகளிரும் மந்த மாருதமும் இயற்கைச் சிற்பங்களாம்.

கலைச் சுதந்திரம்.

["கௌண்டின்யன்"]

உயிர்க்கலைகளை வளர்த்து தேசவாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுக்க வேணுமென்ற அவா எங்கும் பரவியிருக்கிறது. இம்முயற்சிகளில் ஈடுபடுவோரின் மனப்பான்மை எத்தகையதாக இருத்தல்வேண்டும் என்பது ஆராயத்தக்க விஷயம். தற்காலம் சீர்திருத்தத்துறைகளில் இறங்கியிருப்பவர்கள் யுக்தியினாலும் புத்தியினாலுமே சாசுவதமான தத்துவங்களை அறிந்துகொள்வதோடு கலைகளை அபிவிருத்தி செய்து ஆனந்தமடையலாமென்று எண்ணுகிறார்கள். இதற்கு முக்கியக் காரணம் மேல் நாட்டு நாகரீகத்தில் இருக்கும் பிரமையே எனலாம். அந்நாட்டாரின் ஐசுவரியத்திற்கும் வலிமைக்கும் அடிப்படையாயிருக்கும் விஞ்ஞானவளர்ச்சியானது, பிரத்யக்ஷமே பிரமாணம், புத்திக்கு அகோசரமான எந்தவிஷயமும் இல்லையென்றே வியவஹாரம் பண்ணுவதுதான் ஆராய்ச்சி தர்மம், என்ற கொள்கையையே ஆணிவேராகவுடையது. அதனாலேயே அந்நாடுகளில் தெய்வ நம்பிக்கை, அபரோக்ஷமான ஞானம் இவைகளை அடைவதற்கு விஞ்ஞானமும் அதனால் வளர்க்கப்பட்ட மனப்பான்மையும் முக்கிய இடையூறுகளாயிருக்கின்றன.

அனுபவத்தில் பார்த்தால் புத்திக்கு எட்டாத பலவிஷயங்கள் இருக்கின்றன என்பது யாருக்கும் புலப்படும். அவைகளின் மர்மங்களைக் கண்டுபிடிக்கமுடியவில்லையென்பதற்காக அவ்வித மர்மங்களே கிடையாது என்று வாதிப்பது புத்தியில் பெருமை பாராட்டுபவர்களுக்கு அழகா? வாதிப்பதோடு நிறுத்தினாலும் அவ்வளவு கெடுதியில்லை. ஆனால் அவ்வாதபூர்வமான விபரீத நம்பிக்கைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதோ ஆற்று வெள்ளத்தின் ஆழத்தைச் சராசரி பார்த்து இறங்கினவன் கதையை ஒக்கும். இப்படியிருக்க, நமது தேசத்தில் பெரும்பாலான ஜனங்கள் யுக்திக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதையெல்லாம் செய்வதற்குத் துணிவதில்லையென்றும், அப்படித் துணியாததற்குக் காரணம் பேடிமை யென்றும் பிராசீன ஆசாரங்களில் அவர்கள் வைத்த மூட நம்பிக்கை யென்றும், நமது நவ நாகரீக சிகாமணிகள் நிந்திக்கிறார்கள்.

நாம் புத்தியையும் யுக்தியையும் குறைத்துப் பேசுவதாக நேயர்கள் எண்ணலாகாது. சரியான புத்தியும் சரியான யுக்தியும் வேண்டுமென்று தான் மன்றாடுகிறோம். அஹங்காரமும் அபிமானமும் அறவே ஒழிந்தாலன்றி அந்தப் பரிசுத்த புத்தியை அடைவது இயலாது. சிறிய விஷயங்களில் இதன் உண்மையை

உணரலாம். மேல் நாட்டாரின் பழக்க வழக்கங்கள் அனேகம் நமக்கு வெறுப்பையுண்டாக்குகின்றன. ஜன நெருக்கமான டிராம்களிலும் 'பஸ்' களிலும் பலர் புகைபிடிக்கிறார்கள். அப்புகை அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு அருவருப்பையும் சிலசமயங்களில் வாந்தியையும் கூட உண்டுபண்ணுகிறது. இவ்விடங்களில் புகைபிடிப்பது சட்ட விரோதமாயிருப்பினும் பிறருக்குத் துன்பம் விளைப்பினும் அந்தக் காரியத்தை நிந்திப்பதற்குச் சாதாரணமாய் யாரும் துணிவதில்லை. ஏனெனில் இது மேல்நாட்டு தர்மம் என்று ஏமாறுகிறார்கள். இப்படியிருக்க, பத்துப்பேருக்கிடையில் எவனாவது ஏப்பம் விட்டாலோ, தலையைச் சொரிந்தாலோ அவனை நாகரீகம் தெரியாதவன் என்று அலக்ஷியம் செய்யும் புது வழக்கமும் நம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. புகையைப் பிறர் மூக்கில் ஏற்றுவதை விட தேக தர்மத்தை யொட்டின ஏப்பம் விடுதல் கேவலமான காரியமல்ல. ஆனால் மேல் நாட்டார்கள் அதை நிந்திப்பதால் நாமும் நிந்திக்கிறோம். இவ்விதம் சொந்த புத்தியை இழந்து பிறர் அனுஷ்டானங்களையும் பழக்க வழக்கங்களையும் கையாண்டு, நமது தொன்று தொட்டு வந்த சம்பிரதாயங்கள் மேல் நாட்டாரால் ஒப்புக் கொள்ளப் பட்டால் மட்டும் மதிக்கத் தகுந்தவை என்று எண்ணும் ஆங்கிலத் தேர்ச்சியடைந்தவர்களே புத்தியின் பிராமாண்யத்தையும் சாஸ்திர நம்பிக்கையின் அசட்டுத்தனத்தையும் உத்கோஷிக்கிறார்கள் என்றால் இதுவும் ஒரு வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

இந்த மேல் நாட்டு நாகரீகத்தில் உள்ள மோஹம் ஸ்வராஜ்யம் கிடைத்தால் மட்டும் மாறாது. அதுவும் ஒருவகை அஞ்ஞானமானதால் விவேகத்தாலேயே மாறவேண்டும். அஞ்ஞானம் விருத்தியானதற்குக் காரணம், தங்கள் ஆட்சியெங்கும் குலையாமல் இருப்பதற்காக மேல் நாட்டாரால் இடைவிடாது செய்யப்பட்டுவரும் தீவிரப் பிரசாரமே. காற்றுக் கூடப் புகாதவிடங்களில் புகுந்து கிளம்பும் இந்தப் பிரசாரத்தின் வலிமையையும் சூழ்ச்சியையும் பற்றி ஆங்கிலப் பேராசிரியரான அல்டேஸ் ஹக்ஸ்லி என்பவர் வெகுசாய் எடுத்துரைத்திருக்கிறார். பயத்தையும், அசூயையையும், அகங்காரத்தையும் உண்டாக்கும் பிரசாரமே லக்ஷக்கணக்கான ஜனங்கள் மாளும் கோர யுத்தங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கிறது. அது தேசங்களையும் ஸமூகங்களையும் அடிமைப் படுத்துவதோடு நிற்பதில்லை. தனிமனிதனின் மனதை ஆக்ரமித்து ஏமாற்றி, விவேகத்தினால் உண்டாகும் நிஜமான சுயேச்சையை அவன் அடையமுடியாமல் செய்து விடுகிறது. எந்த விஷயமாகிலும், நம் மதத்தைப் பிறர் அனுஷ்டித்தே தீரவேண்டும் என்ற பிடிவாதம் ஒருத்தனுக்கு ஏற்பட்டால், நியாயம் எது, சத்தியம் எது, தர்மம் எது என்ற விசாரணைகளை முற்றிலும் மறந்து விடுகிறான். அப்பேர்ப்பட்டவன் சொல்லும் தத்துவங்களும் செய்யும் சட்டங்களும் நன்மையைக் கொடுக்குமா? அவ்வப்பொழுது, ஸம்ஸ்காரங்களால் சுத்தியடையாத மனதுக்கு எதெல்லாம் சரியென்று தோன்றுகிறதோ அதையெல்லாம் தான் செய்வதோடு மட்டுமில்லாமல் பிறரும் செய்யும்படி வற்புறுத்துவதனாலும் நிர்பந்திப்பதாலும் எல்லையில்லாத தீங்கு நேரிடும். பிறகு தான் செய்தது தவறு என்று உணர்ந்தாலும், விளைந்த தீங்கு விளைந்ததே. இதை யுணர்ந்த நம்முன்னோர்கள் பிறரைச் சீர்திருத்த முயலுபவன் முதலில் தன்னையே சீர்திருத்திக் கொள்ள வேணுமென்றும், மனதைக் கட்டுப்படுத்தி நடு நிலையில் வைத்தவனே அதிகாரி என்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்தக் கொள்கைகள் ஒரு காலத்தில் உலகம் முழுவதும் வியாபித்திருந்தன. ஐரோப்பாவில் மத்தியகாலங்கள் என்று சொல்லப்பட்ட காலம் வரையில் தொன்று தொட்டு வரும் தர்மத்தைக் கடைப்பிடிப்பதே இகங்களுக்கும் பரங்களுக்கும் சாதகம் என்றும், வெறும் புத்தியினால் மட்டும் உலக ரகசியத்தைத் தெரிந்து கொள்ள முடியாதென்றும், ஆத்ம விவேசனமில்லாத வரையில் எவ்வித ஞானமும் பயன் படாதென்றும் பூர்ணமாக நம்பியிருந்தார்கள். அக்காலங்களில் கலைவிருத்தியும், காவியச்சிறப்பும், தத்துவ ஆராய்ச்சியும் எப்படி ஓங்கி நின்றன என்பதை அப்பொழுது கட்டப்பட்ட அத்யத்புதமான கிரிஸ்தவ ஆலயங்களினாலும் அவைகளில் வரையப்பட்ட சித்திரங்களாலும், டாண்டே என்னும் மகாகவியின் டிவைன் காமெடி என்ற மேன்மை வாய்ந்த காவியத்தாலும் ஸெயிண்ட் அகஸ்டின் முதலிய கிரிஸ்தவ தத்துவ ஞானிகளின் கிரந்தங்களாலும் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். அக்காலத்துக் கலைகள் நமது இந்திய தேசத்தின் பிராசீனக் கலைகள்போல சம்பிரதாயத்தை யொட்டினவை

யாயிருந்தன. கலைஞன்—சிற்பியானாலும் சரி, ஓவியக்காரனானாலும் சரி, கவியானாலும் சரி—ஆத்ம சக்தியை வளர்த்துத்தன் கலைக்கு உயிர் கொடுத்தான். ரினேஸான்ஸ் என்று வழங்கும் மாறுதல் ஏற்பட்ட பிறகே, சம்பிரதாயத்தை யிகழ்வதும், தம் புத்தியையும் ராஸிக்யத்தையுமே பிரமாணமாகக் கொண்டு கலைகளைக் கையாளுவதும் கலைஞர்களுக்கு சகஜமாயிற்று. இந்த 400 ஆண்டுகளாகக்கலைகள் ஐரோப்பாவில் பலவிதத்தில் விருத்தி யடைந்திருப்பினும் மத்திய காலங்களில் கலைகளுக்கிருந்த புஷ்டியும் விரிவும் அதிகாரமும் இல்லையென்று மேல் நாட்டுக் கலைஞர்களே பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். கலைஞன் தன் மனப்போக்கே நிர்ணயமென்று எண்ணி வந்ததின் பயனாக கலைகளில் அர்த்தம் பாவம் என்ற அம்சங்கள் அநேகமாக மறைந்து விட்டன. இதற்கு உதாரணமாக ஆங்கில ஆசிரியரான ஜேம்ஸ் ஜாய்ஸ் என்பவரின் 'உலிஸிஸ்' என்ற புஸ்தகத்தையும், ஓவியத்தில் க்யூபிஸம் என்ற நடையையும் எடுத்துக் கொள்ளலாம்.

அர்த்த புஷ்டியும் பாவ மேன்மையும் வாய்ந்து நிஜமான சுதந்திரத்தைக் கொடுக்கக் கூடிய கலைகளை விருத்தி பண்ண வேணுமானால் நம் நாட்டில் படிப்பு அடிப்படையாய்ச் சீர்திருத்தப் படவேண்டும். நம் முன்னோர்கள் தேடி வைத்திருக்கும் அளவற்ற கலைகள் நமக்குச் சொந்தமாக வேண்டும். அவைகளை ஆதாரமாகக் கொண்டு புதுக் கட்டடங்களை நாம் கட்டவேணுமே யொழிய அந்தரத்திலோ அந்நிய நாகரீகமாகப்பட்ட புதை மணலிலோ கட்ட முயலுவது முழு முட்டாள்தனம். நமது பிராசீனக் கலைகளில் ஊறி ஊறி, புத்தி பரிபாகம் அடைந்து புது சிருஷ்டிகளில் இறங்கினால் அவை அழியாத ஆனந்தத்தைக் கொடுக்கும். இல்லையேல் எந்த லோகாயதிகர்களைப் பார்த்து "புத்திம் ஆன்வீக்ஷிகீம் ப்ராப்ய நிரர்த்தம் ப்ரவதந்தி தே" என்று ஸ்ரீராமன் நிந்தித்தாரோ அவர்கள் கதியே நமக்கும் ஏற்படும். ஆகையால் பிறர் துணியை எடுத்துப் போர்த்துக் கொள்வதுபோல், நமது நாகரீகத்தை முற்றிலும் மறந்து பிறர் நாகரீகத்தில் மோஹமடைந்து வீண்காலம் கழித்ததை மாற்றி, நமக்குச் சொந்தமான ஆரிய தர்மத்தைக் கைப்பிடித்தால் ஸ்வராஜயம் கிடைப்பதோடில்லாமல் "ஆப்நோதி ஸ்வாராஜ்யம்" என்ற சுருதியின் பொருளையும் இந்திய மக்கள் அனுபவ சித்தமாகச் செய்து கொள்ளலாம்.



கவித்ரா விமர்சம்.

மனத்துள்ளான்.

(மாயக்கூத்தன் எழுதியது.)

முதலாழ்வார்கள் மூவருள் முதல்வரான பொய்கையார்,

உளன் கண்டாய் நன்னெஞ்சே!
 உத்தம னென்றும்
உளன் கண்டாய் உள்ளுவாருள்ளத்து—
 உளன் கண்டாய்
வெள்ளத்தினுள்ளானும்
 வேங்கடத்து மேயானும்
உள்ளத்தினுள்ளானென்று ஓர்

என்று பாடுகிறார். அதுபோலவே, பேயாழ்வாரும்,

உளன் கண்டாய் நன்னெஞ்சே!
 உத்தம னென்றும்
உளன் கண்டாய் உள்ளுவாருள்ளத்து—
 உளன் கண்டாய்
விண்ணெடுங்கக் கோடுயரும்
 வீங்கருவி வேங்கடத்தான்
மண்ணொடுங்கத் தானளந்த மன்

என்கிறார். திருமழிசை யாழ்வாரும்,

உளன் கண்டாய் நன்னெஞ்சே!
 உத்தம னென்றும்
உளன் கண்டாய் உள்ளுவாருள்ளத்து—
 உளன் கண்டாய்
தன்னொப்பான் தானாய்
 உளன்காண் தமிழ்டேற்கும்
என்னொப்பார்க்கீசன் இமை

என்கிறார்.

இவ்வாழ்வார்களை அடியொற்றிய நம்மாழ்வார் எப்பொழுதும் உத்தமனையே உள்ளுவாராகி, தன் உள்ளத்தின் உள்ளே அவ்வுத்தமன் புகுந்து நீங்காதிருக்கிறான் என்பதைப் பிறர்க்கு விளக்குகிறார். அவ்வுத்தமனுடைய இருப்பிடங்களாகக் கருதப்படுவன வேங்கடம் என்னும் மலையும் 'வெள்ளை வெள்ளம்' என்னும் பாற்கடலும் வைகுந்த வானாடும். 'அந்த இடவகைகளை இகழ்ந்திட்டுத் தன்பால் திருமால் இடவகை கொண்டு விட்டான்' என்று நினைக்கிறார் நம்மாழ்வார். பாவம்! வேங்கடமும் பாற்கடலும் வைகுந்தமும் தங்கள்

சோதியை இழந்தன, அடியேனது உள்ளத்திலேயே ஸ்திரப்பிரதிஷ்டிதனாய் புருஷோத்தமன் இருக்கிறான் ஆதலால்.

கல்லும் கனைகடலும்
வைகுந்தவானாடும்
புல்லென்றொழிந்தன கொல் ?
ஏ பாவம் !—வெல்ல
நெடியான் நிறம் கரியான்
உள்புகுந்து நீங்கான்
அடியேனது உள்ளத்தகம்

என்று கல்லையும் கடலையும் வைகுந்த நாட்டையும் நினைந்து வருந்துகிறார்.

இப்படித் தன்னுள்ளே என்றும் உள்ளவனான திருமாலை உட்கண்ணால் நோக்கி கர்விதராய், “திருமாலே! நீ பெரியவனா? நான் பெரியவனா? தெரியவில்லை. உன்னுள்ளே உள்ளன பூவுலகும் விண்ணுலகும் ; நீயோ, நான் உன்னுடைய குணங்களைக் கேட்டு அவற்றை நினைக்கத் தொடங்கிய காலம் முதல் எனது மனதை விட்டு அகலாது இருக்கிறாய். ஆகையால் நீயே யோசித்துப்பார், யார் பெரியவன் என்று.” இவ்வாறு இவ்வாழ்வார் கூறும் பாடல் வருமாறு:—

புவியும் இருவிசும்பும்
நின்னகத்த நீயென்
செவியின் வழிபுகுந்து
என்னுள்ளாய்—அவிவின்றி
யான் பெரியன் நீ பெரியை
என்பதனை யாரறிவார்
ஊன்பருகு நேமியாய் ! உள்ளு.

இவ்வாறு அனவரத சிந்தனையாலே திருமாலைத் தம் மனதிலே குடிபுகுத்தின ஆழ்வார் அங்கே முன்னே குடியேறியிருந்த வல்வினைப் பயன் வெருண்டு வெளியேறுவதைச் சில வெண்பாக்களாலே சித்திரித்துக் காட்டுகிறார். இதுவரையும், வல்வினையார் இவருடைய மனதிலே கர்வத்தோடு ராஜாஸனத்திலேபோல வீற்றிருந்தாராம் ; இப்பொழுது அவ்வாறு வீற்றிருப்பதற்கான இடத்தைக் காணாமல் ஏங்கிக் கதறுகிறாராம்.

காலே போதத்திரிந்து
இந்நாள் கத்துவராம்
மாலார் குடிப்புகுந்தார்
என் மனத்தே—மேலால்
தருக்கு மிடம்பாட்டினோடும்
வல்வினையார்தாம் வீற்
றிருக்கு மிடம் காணா திளைத்து.

இவ்வாறு தமது மனதிலே இருக்க இடம் காணாது ஆடையாடம்பரங்களை யெல்லாம் ஒடுக்கி ஒருபுறமாய் ஒதுங்கும் வல்வினையாரைப் பார்த்துப் பரிகசிக்கிறார் நம்மாழ்வார்: “ஐயா, வல்வினையாரே! சுகமாக வீற்றிருப்பதற்கு அகன்ற இடம் அகப்பட்டது என்றிராதேயும் ; முன்போல அன்று இப்பொழுது ; திருமாலின் சீரியகுணகணங்களை நினைப்பதற்கும் இடம் போதாது என் உள்ளத்திலே ; ஆகையால், திருமாலின் குணங்களால் நிரம்பிய என் உள்ளத்திலே ஒடுங்கி ஒதுங்கிப் பதுங்கவேண்டாம்; வெளியேறிவிடும்” என்று சொல்லும் பாட்டே ஒருதனியழகு வாய்ந்தது.

இங்கில்லை பண்டுபோல்
வீற்றிருத்தல் என்னுடைய
செங்கண் மால் சீர்க்கும்
சிறிதுள்ளம்—அங்கே
மடியடக்கி நிற்பதனில்
வல்வினையார் தாம் மீண்டு
அடியெடுப்பதன்றோ அழகு ?

ஆயினும் ஸாமத்தால் பயனுண்டோ வல்வினையாரிடத்தில்? தானமும் பேதமுங்கூட உபாயங்கள் அல்ல; தண்டமே நல்ல உபாயம் ஆகும்; ஆதலின் வல்வினையாரை வெருட்டுவதற்கு ஒருதடி தா என்று திருமாலை வேண்டிப்பெறுகிறார் ஆழ்வார். அதைக்கொண்டு அடித்தால் வல்வினையார் காட்டையும் மலையையும் பார்த்து ஓடிப்போவார். இறைவனுடைய அருளே வினைப்பயனைப் போக்கும் தண்டாயுதம். இவ்வாறு தாம் இறைவனருளைப் பெற்று வல்வினையை அடித்தோட்டுவதைப் பகிரங்கப்படுத்துகிறார் கீழ்வரும் வெண்பாவினாலே :

யானும் என் நெஞ்சும் இசைந்
தொழிந்தோம்; வல்வினையைக்
கானும் மலையும் புகக்கடிவான்—தானோர்
இருளன்ன மாமேனி எம்மிறையார் தந்த
அருளென்னுந் தண்டால் அடித்து.

இதுவரையும் ஆழ்வார் தம்மை, ‘வினையேன்’ என்றும் ‘வல்வினையேன்’ என்றும் கூறித் தம் மனதிலே வல்வினை குடிக்கொண்டிருந்ததை விளக்கினார். இப்பொழுதோ, அடியார் ஆகிவிட்டார். அவருடைய மனதிலே குடிக்கொண்டிருப்பன திருமாலின் திருவடிகள் இரண்டும். அவை எவ்வளவு பெரியன! கடல் சூழ்ந்த உலகுமுழுவதும் பற்றாதாயிற்று ஒரு

திருவடியின் பெருமைக்கு. அவ்வளவு ‘பெருப் பெருத்த’ திருவடிகள் இப்பொழுது ஆழ்வாரின் நெஞ்சுக்குள் ஒடுங்கி விட்டன. இப்படி நெருக்குண்டும் அவை அங்கேயே இருக்கின்றன. ஏன்? மீண்டும் வல்வினையாரை அங்கே புக விடக்கூடாது என்றும் வெந்நரகத்திற்கு வல்வினையார் ஆழ்வாரை இழுத்துச் செல்லாதபடி தடுக்க வேண்டும் என்றுமே.

சென்று அங்கு வெந்நரகில்
சேராமல் காப்பதற்கு
இன்று இங்கு என் நெஞ்சால்
இடுக்குண்ட—அன்று அங்குப்
பாருருவும் பார்வளைத்த
நீருருவும் கண்புதைய
காருருவன் தான் நிமிர்த்த கால்.

பகவானைச் சிந்தித்திருப்பதே வினைப் பயனைப் போக்குவதற்கு உபாயம் என்னும் உண்மையை உருவகப் படுத்தும் இக்கவிகளில் காணப்படும் சிற்பத் திறமை சொல்லாமலே விளங்கும். ஆழ்வாரின் மனம் ஒரு பெரிய மாமணிமண்டபமாகத் தோன்றுகிறது. அங்கே ‘வல்வினையார்’ என்னும் குறும்பரசன் அதிக்கிரமித்து அதிகாரம் பண்ணுகிறான். இவனுக்கா ஏற்றது இவ்வழகிய ஆஸ்தான மண்டபம்? மனதுக்கு இனியானையன்றோ இம்மண்டபத்திலே அமர்த்த வேண்டும். அவனுடைய சீரையன்றோ புகழ்ந்து பாடிக்கொண்டு அத்தாணிச் சேவகம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள் ஆழ்வாரும் அவருடைய சிந்தையாகிய நண்பரும். இருவரும் இறைவனை வேண்டி அவனுடைய அருளாகிய சுக்குமாந்தடியைப் பெறுகிறார்சள். பெற்றுக்கொண்டு அந்த மண்டபத்திலே வந்து இறைவனுடைய கல்யாண குணங்களைப் பாடுகிறார்கள். அது கேட்டுப் பயந்து மெதுவாக ஒதுங்குகிறான் வல்வினை என்னும் கொடியவன். “அங்கே ஒதுங்கி நிற்காதே! இனி இங்கு இருப்பது அழகு அன்று; மெல்ல நட” என்கிறார் ஆழ்வார். வல்வினையார் மீசையை முறுக்குகிறார். “கெஞ்சினாற் போவாயோ நீ’ இதோ பார். என் கையிலே என்ன இருக்கிறது என்று?’ என்று ஆழ்வார் கதையை ஓச்சுகிறார். வல்வினையாரைக் காட்டிற்குத் துரத்தி விட்டு, அந்த அழகிய சிம்மாசனத்திலே பகவானுடைய திருவடிகளை அமர்த்திப் பட்டாபிஷேகஞ் செய்கிறார்; இவை எவ்வளவு மேலான நிலையிலே இருக்கத் தக்கவை; என் மனமாகிய சிறு இடத்திலே இவை இப்பொழுது இடுக்குண்டுண்டனவே” என்று சற்று வருந்துகிறார். பிறகு அவை ஸ்திரமாக அங்கேயே இருக்கக் கண்டு மகிழ்ச்சி கொள்கிறார். அந்த வைகுந்தத்தையும் பாற்கடலையும் திருவேங்கட மலையையுமே மறந்து பகவான் என் உள்ளத்தின் உள்ளேயே வீற்றிருக்கிறான் என்று கர்வங் கொள்கிறார். பகவானைப் பிரிந்து அவையெல்லாம் வருந்துமே என்று அவற்றை நினைந்து பச்சாத்தாபப்படுகிறார். இவையெல்லாம் கேட்போர் கண்முன் ஒரு நாடகம்போல விளக்கமாகத் தோன்றுகின்றன, ஆழ்வாருடைய கவிதையின் வன்மையாலே.

காதலும் பக்தியும்

(ஸ்ரீ வாதூலன் எழுதியது.)

கமலாலயப் பொய்கையைச் சூழ்ந்த உலகம் விழிப்புற்றது. விபூதி ருத்ராக்ஷம் அணிந்த ஒருவர், எல்லோருக்கும் முன்னமே எழுந்து கமலாலயத்தில் இறங்கி எதையோ இழந்து தேடுபவரைப் போன்று மூழ்கி மூழ்கி எழுகின்றார். இவர் யார்?

தெய்வத் தொண்டரன்றோ இவர்? காலை முதல்—ஏன்? பஞ்சபஞ்ச உஷ: காலத்தில் ஸ்நானம் செய்யவந்த இவர் இப்பொய்கையில் எதைத்தேடிக் கொண்டிருக்கக் கூடும்? உலகப் பற்றற்றுப் பரம் பொருளிடத்துப் பேரன்பு பூண்ட இவர் அணிவன ருத்ராக்ஷமாலைகள் தாமே! அவைகளும் அவர் கழுத்தில் தொங்குகின்றனவே! பாவம்! இப்பொய்கையில் அவர் எப்பொருளை இழந்திருக்கக் கூடும்? அஃது அவருக்கு அரும்பொருளாயிருக்கலாமோ? நீரில் மூழ்கியதும் மண்ணை

மேலெடுத்து ஆவலுடன் நோக்குவதும், ஏமாற்றத்தால் வெறுப்புடன் அம்மண்ணை அப்பால் வீசி யெறிந்து, பின் மூழ்குவதுமே இவரது தொழிலா என்ன? பக்திவெறி, தலைக்கேறிய பித்தரா? பித்தராயிருக்க முடியாது; ஏனெனின், தம்மை ஆட்கொண்ட தியாகேசனையே "பித்தன்" என்ற பக்தி உள்ளம், பித்தத்தால் குழம்பி இச்செய்கையைச் செய்யத்தூண்டுமா? 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்ற முதுமொழி அவர் கருத்தில் தோன்றியிராதோ? இடைவிடா முயற்சியால் தம்மைச் சிறை செய்திருக்கும் உள்ளமுடைய அத்தொண்டரை இறைவன் ஏன் இங்ஙனம் சோதனை செய்ய வேண்டும்?

கதிரவனும், குணதிசை நங்கை களிக்க. இவ்வதிசயத்தைக் காண்பிப்பவன்போல் மேலெழுந்து வருகின்றானே! திருக்குளத்தைச் சூழ்ந்த சோலையினின்றும் பறவையினங்கள் தம்மின்னிசைகளால் தொண்டரைக் கேலி செய்கின்றனவே! ஒருவர் பின் ஒருவராக நீராடவருவோர் அப் படித்துறையில் கூடிவிடுகின்றனர். உலகும், அதன் இயல்பும் நம் தொண்டரின்கண்களுக்கு வெறுப்பை அளிக்கின்றன. சுந்தரர் என்னும் அப்பெரியாரின் பெருமையை உணர்ந்த மக்கள் அவர் நிலைக்கு இரங்கி, அக்குளத்திலிறங்கித் தாமும் அவருக்கு உதவியாகத் தேடுகின்றனர். வெற்று மண்; ஒருவர் முகத்தை ஒருவர்பார்த்து ஏமாற்றமடைகின்றனர். "இழந்த பொருள் யாது" என்று கேட்க அவர்களுக்குத் தைரியமில்லை. ஏன்? தம்மனைவி பரவையின் ஊடல் தீர்க்கத் தியாகேசனையே. தூதாக அனுப்பிய தொண்டரல்லரோ ஆரூரர்? அவருக்குமா பொருள் நஷ்டம் உண்டாகக்கூடும் என்பதே அவர்கள் எண்ணம்போலும். சுந்தரருடன் இரவில் இன்பமுற்று அமைதிகொண்ட வதனமும், சரிந்த கூந்தலும், தளர்ந்த ஆடையுமுடையவராய் அழகின் பிம்பமேபோன்ற பெண்ணணங்கு ஒருத்தி அப்பொழுது தான் படித்துறைக்கு வருவதை அம் மக்கள் காண்கின்றனர். அவள் யார்? தியாகேசருடன் நேருக்கு நேரே ஆரூரனைப்பற்றி அளவளாவினவள்—பரவை என்றும் பெயரினள் அவள். பரவையின் அழகிய உருவெளியைக் கண்டு மூங்கையராய் மக்கள் நிற்கின்றனர். அக்குழுவின் திகைப்பிற்கிடையே, "என்ன! இன்னமுமா அகப்படவில்லை?" என்னே நமது இறை பக்தி? என்று புன்சிரிப்போடு — பழகியதொரு அன்புக்குரல் சுந்தரர் செவியில் கேட்கிறது. வியப்புடன் அவர் பரவையின் முகத்தை நோக்குகின்றார். கள்ளங்கவடற்ற அவள் முன்னிலையில்—ஏன் உலகின்கண் முன்—ஆரூரர் தம்மைக் கைவிட்டு விடுவாரோவென அஞ்சுகின்றது அவர் உள்ளம்.

சுந்தரர், கீழ்த்திசை நோக்கிக் கைகூப்பி, "பொன் செய்த மேனியினீர்! எம்மானே! காதலி பரவையின் முகம் கருகாமே, நான் சிறப்புற மணிமுத்தா நதியில் இட்ட பொன்னை இக்குளத்தில் அருளுவீராக" எனத் தொழுது பாடிக்கொண்டே நீரில் மூழ்குகிறார். அவருக்குக் கிடைப்பதென்ன? கமலாலயத்து மண்ணே!

பரவையாரின் புன்முறுவலும், சுந்தரரது குழம்பிய உள்ளமும் மக்களுடைய கண்களுக்குக் காட்சிப் பொருள்களாகின்றன. நீராட வந்த மக்கள் இதுவும் கடவுள் சோதனைகளுள் ஒன்றாகும்! எனக்கூறிக் கொண்டே கரையேறி வியப்புற்று நிற்கின்றனர்.

குளத்திலே சுந்தரர் ஒருவர் தாம் தேடுகிறார். பொன்னாவது? சுந்தரர், மண், பொன், பெண், ஆகியவற்றுள் ஆசையற்ற பக்தரல்லரோ? பரவையார் ஊடலில் உருவானது அப்பொன்! "பொன்பெற்று வந்தாலன்றிப் பரவையாரின் இன்முகம் காணலரிது" என்று மதுரமொழிகள் இன்னமும் அவரது செவிகளில் எதிரொலி செய்கின்றன. ஆம்! ஆரூரை நீங்கி முதுகுன்றத்திலே விளங்கும் இறைவனை வேண்டி பாடிப்பெற்ற பொன்னன்றோ இப்பொழுது இக்குளத்திலே தேடுவது? மணிமுத்தா நதி எங்கே? கமலாலயப்பொய்கை எங்கே? ஆண்டவனையே பித்தன் என்று கூறிய பெரியாரல்லவா இவர்? அப்பொன்னைக் கையிலேயே கொணர்ந்திருந்தால் இவ்வளவு அவஸ்தைகள் நேரிட்டிரா அன்றோ? பாவம்! சுந்தரருள்ளமும் பரவை முன் குன்றி விடுகின்றது. கலகலவென நகைக்கும் பரவையாரின் முன் சுந்தரர் பக்தி பயன்படவில்லை. ஏன் இவ்வளவு கஷ்டம்? இது வரையிலும் அவர் ஈசனை மறந்தவரல்லர். நினைவு தோன்றியது முதல் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும்—அணுவும் அவரறியாதனவல்ல. பொருளின்ப வடிவாய பரவையின் முன்னர் தம்மை இறைவன் பரிபவப்

படுத்துவது ஏன்? இதோ! அவர் ஒன்பதாம் செய்யுளாகத் திருவாய்மலர்வதைக் கேளுங்கள் :—

"ஏத்தாதிருந்தறியேன்
இமையோர் தனி நாயகனே!

என்றதும் அவரது முகம் புத்தொளி பெறுகிறது. ஆம்! தூதராய் இருமுறை பரவையிடம் சென்றவன் தியாகேசன் எனினும் அவன் விரும்பிய பொன்னை ஏன் அவன் கிடைக்கச் செய்யவில்லை? முதுகுன்றத்தீசர் அல்லரோ அருளியவர். ஆம், ஆரூரரை அடிமை கொண்ட பெம்மானு அவர்? இல்லை. அவரது நாவினின்றும் வெளியாகும் அடுத்த அடிகளைப்பாருங்கள்—

மூத்தா யுலகுக்கெல்லா
முதுகுன்றமமர்ந்தவனே!"

தோழராகப் பழகிய திருவாரூர்ப் பெருமான் எங்கே? முதுகுன்றமர்ந்த முதுமையோன் எங்கே? இப்பொழுதன்றோ ஈசன் தனி நாயகம் நன்கு விளங்குகின்றது சுந்தரருக்கு? அன்புருவாய பரவைக்கும், தனக்கும், உலகுக்கும்— ஏன் உலகுக்கே 'மூத்தவன்' என்று விளிக்கிறார். காலத்தில் முதியவன் அல்லனோ? அல்லாவிடில் அவன் கோயில் கொண்ட கோலக்குன்று முதுகுன்று (பழைய குன்று) என வழங்குமா? அங்கும் அவரை மறந்து சுந்தரர் அறிவுறுத்தப் பட்டார். தொண்டரை ஈசன் சோதிப்பதில் சளைப்பதில்லை. ஒன்பதாம் செய்யுளில் முதுகுன்றத்தீசன் மூத்தவன் எனச் சுந்தரரது உள்ளத்தை உருக்கி விட்டனன்—அப்பெம்மான். பக்திவெறியில் நெக்குருகிய சுந்தரர் கரைமீது கர்வத்துடன் நிற்கும் பரவையாரைக் காணுகிறார். தன்னை—நம்பி அன்புடன்வாழும் அவளையும் அவர் விட்டுவிடவில்லை. கீழ்வரும் அடியைப் பாருங்கள்—

"பூத்தாருங் குழலாள்
பரவையிவள் தன்முகப்பே"

சுந்தரர் இன்பத்தைப் பெறவே கயிலையிலிருந்து இம்மண்ணுலகுக்கு வந்தவர். ஒன்று காதலின்பம், மற்றொன்று இறையின்பம். தெய்வ இன்பம் பலசோதனைகளால் உலகில் நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆனால் காதலின்பமோ? அவ்விறையின்ப மில்லாத இடத்துப் பயனற்றதாம் என உறுதி கூறுகின்றது அவருள்ளம். அம்முறையில் தெய்வ இன்பம் தம்மிடம் இல்லையா என்ன? என ஐயுறுகிறது அவர் மனம். ஈசனை இடைவிடாது துதிக்கும் தாம், காதலி—பரவையாரின் முகப்பில் வெட்கமடைவதினும் வேறு கொடுமை இல்லை யெனத் தேறுகிறார். தியாகேசன் அணிந்த நிர்மால்ய மலர் பரவையாரின் கூந்தலைப் பெற்று நந்தொண்டரின் கண்களைப் புண்படுத்துகின்றது. அதனாலன்றோ பரவையின் பெருமிதம் புன்னகையில் வெளிப்படுகின்றது? அம்மட்டோ? ஈசனுடன் தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்திய பெருமையை அவளது கடைக்கண்கள் குறிப்பிக்கின்றன. "இவ்வழகி—உத்தமி பரவை முன்னர்" எனக் கூறி அவ்வடிகள் விரும்புவது யாது?

"கூத்தா தந்தருளாய்
கோடியேனிட்டளங்கெடவே"

மக்கள் முன்னரும் பரவைமுன்னரும் ஆட்டுவிக்கும் பெம்மானைக் கோபத்தால் "கூத்தா" என விளிக்கிறார். உலக மன்றிலே ஆடும் பெருங்கூத்தனல்லனோ இறைவன்? ஆடுவதில் களைப்பையோ, சோம்பலையோ தெரிவித்தால் பெருங்கூத்தன் கண்டிப்பது இயல்பன்றோ? காதலிக்கும் தன்னை ஆட்கொண்ட பெம்மானுக்கும் இடையில் தாம் ஒருவரே கொடியராக விளங்குகிறார். ஆம்! பதிகம் தொடங்கியதும் உவந்து அளிக்கும் ஆண்டான் இன்று ஒன்பது செய்யுள் முடிந்தும் வாளாவிருப்பது தன்னை ஒரு கொடியவன் என்றே கருதச் செய்கிறது. அவரது உள்ளம் பரவை விரும்பிய பொன்னைப்பற்றி முன்னிரவில் தாம் கூறிய செய்தி பொய்யாகி விடுமோ என்று அவர் அஞ்சுகிறார். இரண்டுபேருக்கும்—இருவித இன்பத்திற்கும்—தகுதியில்லாத தம்மைப் போன்ற துரதிர்ஷ்டசாலி இவ்வுலகில் வேறு ஒருவரும் இரார் என்பதே அவரது துணிபு. "கொடிய தன்மை தம்மிடமிருந்து நீங்கவேண்டுமாயின் பரவை விரும்பிய காதற் பொன்னை இறையின்பத்தால் யான் இப்பொழுது பெறுவேன்" எனக் கூறி மூழ்கித் திருக்குளத்தினின்றும் அப் பொன்னுடன் வெளிப்படுகிறார். முதற் பாட்டிலேயே ஈசன் பொன்னைத் தொண்ட

ருக்கு அளித்துவிட்டால் காதலியையும் தம்மையும் இணைத்துப்பாடிய ஒன்பது செய்யுட்களையும் உலகம் சுவைக்கமுடியுமா? ஈசன் கருணை இவ்வொன்பதாம் செய்யுளில் உள்ளது—

"ஏத்தாதிருந்தறியேன்
இமையோர் தனி நாயகனே!
மூத்தா யுலகுக் கெல்லா
முதுகுன்றமமர்ந்தவனே!
பூத்தாருங் குழலாள்
பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய்
கோடியேனிட்டளங்கேடவே"

என்பதாகும்.

சோழ நாடு

(இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை ச. சோமசுந்தர தேசிகர்.)

தண்ணிருங் காவேரி தார்வேந்தனுஞ் சோழன்மண்ணாவதுஞ் சோழ மண்டலமே[1] என்று சோழநாட்டைப் புகழ்ந்து பாடியவர் அவ்வை மூதாட்டியாராவர். நம் மூதாட்டியார் அந்த நாட்டை அவ்வளவு சிறப்புப் பொருந்தும் படியாகக் கூறக் காரணமாக இருந்தது வற்றாத நீர் வருவாயினையுடைய காவேரியாறாகும். மிகமிகப் பழங்காலத்திலேயே புலவர் ஒருவர் 'குற்றமற்ற புகழினையும் மிக்க ஒளியினையுமுடைய மழைக் கோளாகிய வெண்மீன் என்னும் சுக்கிரன் தான் இயற்கையாகச் செல்லும் கிழக்கு மேற்கு வழியை விட்டுத் தெற்கே செல்லினும் மழைத்துளியையே உணவாகக் கொண்டு அம்மழையைக் கொடுக்கும் வானத்தைப் பாடுதலினாலே வானம்பாடி எனப் பெயர்பெற்ற புள் தேம்பும்படியாக மழை வாய்ப்பினும் தன்னிடத்தே நீரானது எந்தக் காலத்திலும் வற்றாது ஓடும்படியான செயலையுடையது காவேரியாறு[2] என்று கூறியுள்ளார். காவேரியாற்றில் நீர் வற்றாது ஓடும். குடகுமலையிலே பெய்யும் மழைநீரானது பல காடு மலைகளின் வழியாக ஓடிவருதலினாலே அது பல வகையான வயலுக்கு உரந்தரும் பண்டங்களைக் கரைத்து ஈர்த்துக்கொண்டு வருகிறது. இவ்வாறு வரும் காவேரியாறு பல கணக்கற்ற சிறிது பெரிதுமான கால்களாகப் பிரிந்து

---

[1] தமிழ் நாவலர் சரிதை, 14.

[2] வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி

பட்டினப்பாலை 1—6.

செல்லுகிறது. அக்கால்களின் வழியாக வரும் நீர் புலங்களிற் (வயல்களிற்) பாயும் போது அந்த நீரிலுள்ள வளப்பந்தரும் சத்துள்ள பண்டங்கள் நிலத்திற் புகுந்து அந்தப் புலங்களை வளம்பெறச் செய்யும்.[3] அதனாலே நிலங்களின் விளைவு ஒன்றுக்குப் பன்மடங்கு அதிகமாகிறது. அந்த நாட்டு மக்களும் மிகுதியான விளைவினால் இலம்பாடு, இல்லாமை, தரித்திரம் இவைகள் இன்ன படித்து என்று அறியாது பலவிதமான போகபோக்கியங்களை அனுபவிக்கின்றனர். பலவகைப் பட்டதான சுகங்களையும் அங்ஙனம் அனுபவித்தலினாலே மக்கள் மிக்க நாகரிக முடைய்வர்களாக விருக்கின்றனர். அவர்கள் வந்த விருந்தினரை வரவேற்று, அவர்களை இன்புற உணவருத்திச் செல்லச்செய்வர். இவ்வாறான உபசாரங்களாலன்றோ நம் முன்னோருள் ஒருவர் இதைச் 'சோணாடு சோறுடைத்து'[4] என்று கூறினார். இவ்வளவுக்கும் காரணமாக விருப்பது நீரின் வளப்பமல்லவா ? அந்த வளப்பம் காரணமாக அந்த நாடு புனல்நாடு என்ற பெயரை அடைந்தது.

நீர் வளப்ப மிகுதியினாலே பெற்ற பெயரையுடையதான புனல்நாட்டை ஆண்டவர் சோழர் என்ற சாதியினராவர். அவர்களுடைய பெயரால் அந்த நாடு சோழநாடு எனவும் பெயர் பெறும். இந்தச் சோழர்கள் சோழநாட்டை ஆளத் தொடங்கிய காலம் இதுவெனத் திட்டமாகக் கூறக்கூடிய ஆதாரம் ஒன்றும் காணப்படவில்லை. ஆயினும் இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதான காலத்தைச் சங்ககாலமென்று பெரியோர் கூறுவர் ; அக்காலத்திலேயே சோழருடைய பெயரும் கேட்கப்படுகின்றன ; நூல்களிலும் கூறப்பட்டுள்ளன.

சங்ககாலத்திலுள்ள இலக்கிய நூல்களில் சோழர்களுள்ளே முதல்வனாகக் காணப்படுபவன் வீரைவேண்மான் வெளியன் தித்தன் என்பவனாவான். இவன் காவேரி யாற்றின் கரையிலுள்ள உறந்தை என்ற உறையூரைச் சேந்தன் என்ற ஒரு தலைவனிடமிருந்து கைப்பற்றினான். அந்தச் சேந்தன் என்பவன் சோழர் குடியைச் சேர்ந்தவனன்று என்பது அறிவாளருடைய கொள்கை. ஆதலினாலே இந்தச் சேந்தனுடைய ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருந்த திருசிராப் பள்ளி ஜில்லாவைச் சார்ந்த ஒரு பகுதி சோழநாடு என்ற பெயர் பெறவில்லை என்று ஏற்படும். எனினும் தித்தன் என்ற தலைவன் ஆண்ட நாடு சோழநாடு ஆதல் வேண்டும். இந்தத் தித்தனே பிற்காலத்தில் மிச்க சிறப்போடு வாழ்ந்த கரிகாலப் பெரியோன் முதலாயினார்க்கு முதல்வனாக (மூல புருஷனாக)க் காணப்படுகின்றான். இவனது தலை நகர் வீரை என்ற ஊராகும். 'இது கீழ்க் கடற்கரைக்கண் உள்ளதோரூர்' என்பர். இவ்வூரைத் தலை நகராகவுடைய நாடு சோழநாடு ஆகல் வேண்டும்.

தித்தன் தனது நாட்டிற்கு மேற்கிலுள்ள உறந்தை நாட்டைக் கைக்கொண்டபின் உறந்தை நாடு என்பது மறைந்து போக, அதுவும் சோழ நாடு எனப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும். ஆகவே இந்தத் தித்தனுடைய அரசாட்சியினிறுதியில் சோழநாடு உறையூருக்குச் சிறிது மேற்கே தொடங்கிக் கிழக்கில் கடற்கரைவரையில் நீண்டிருந்தது என்று கூறுவோம்,

தித்தனுக்குப் பல தலைமுறை பின்வந்த சோழனான கரிகாற் பெருவளத்தான் வடக்கிலிருந்த காடுகளை யழித்து நாடாக்கி நற்குடிகளைக் கொண்டுவந்து குடியேற்றினான் என்று பட்டினப்பாலை[5] என்ற நூல் கூறும். அருவா அருவாவடதலை என்று பேருடைய நாடுகளையும் கரிகாலன் தன்னுடைய நாட்டோடு சேர்த்துக் கொண்டான் என்று அந்த நூலே கூறும்.[6] அருவா நாடு என்பது செங்கற்பட்டு

---

3 இது பொழுது காவேரியில் தெளிந்த தண்ணீரே வருகிறது. அதனில் உரப்பொருள்களில்லை என்பது பலரது கருத்து.

4 ஒளவையார் தனிப்பாடல்.

5 பட்டினப் பாலை என்பது பத்துப்பாட்டு என்று கூறப்படும் தொகை நூலில் அகவற்பாவால் யாக்கப்பட்டது.

6 பல்லொளியர் பணிபு ஒடுங்கத்
தொல்லருவாளர் தொழில் கேட்ப
வடவர் வாட,
பட்டினப்பாலை. 273—275.

ஜில்லாவிலோடும் பாலாற்றுக்குத் தெற்கிலும் பெண்ணையாற்றுக்கு வடக்கிலுமுள்ள திருக் கோவிலூருக்குக் கிழக்கிலுமுள்ள நிலப்பகுதி. இது ஒய்மாநாடு என்றும் சொல்லப்படும். பாலாற்றுக்கு வடக்கிலுள்ள நிலப்பரப்பு அருவா வடதலை எனப்படும். இங்குக் கூறிய நிலப்பரப்பு சோழரால் கவரப்பட்டதாயி னும், ஒரு பொழுதும் சோழநாடு எனப் பெயர் பெறவேயில்லை. இந்த இரண்டு நாடு களும் பின்னும் சில பகுதியுஞ் சேர்ந்து தொண்டை மண்டலமெனப் பெயர் பெற்றன. அந்தத் தொண்டைமண்டலமே பின்னொரு காலத்தில் செயங்கொண்ட சோழமண்டலம் எனப் பெயர் பெற்றது. அக்காலத்தி லும் அது சோழ நாடு ஆகவேயில்லை. இங்கு இதுவரையில் கூறியவைகளாலே சேரருடைய ஆளுகையில் இந் நிலப்பரப்பு இருந்ததாயினும் சோழ நாடு எனப் பெயர் பெறாமை கவனிக்கத் தக்கதாகும்.

சோழ நாட்டின் எல்லையைக் கூற வந்த பெரியோர் ஒருவர் சோழநாடு கடலைக் கிழக் கெல்லையாகவும், கரைகளை உடைத்துச் செல் லும் வெள்ளாற்றைத் தெற்கெல்லையாகவும். கோட்டைக் கரை என்ற பெரிய மண்கரையை மேற்கெல்லையாகவும் பெண்ணையாற்றை வடக் கெல்லையாகவுமுடையது[7] என்று கூறினர் இவ்வெல்லை எக்காலத்துக்கும் பொருந்து மொரு எல்லையாகும்.

ஆகவே இதுகாறும் கூறியன கொண்டு ஒரு காலத்தில் நீர்நாடு, புனல் நாடு என்ற பேர்பெற்ற நிலப்பரப்பு அதனையாண்ட சோழரது பெயரால் சோழநாடு என்ற பெயரை அடைந்தது என்பதும், அது காவிரி யின் நீர்பாயும் நிலப்பரப்பு என்பதும் அறி கின்றோம்.

7 கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.

இச் செய்யுளைச் சிலர் கம்பர் வாக்கு என்றும் சிலர் அவ்வையார் வாக்கென்றும் கூறுவர்.

தமிழ் நங்கையின் தங்கையர்.

(R. P. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.,)

பாரத தேசத்திலுள்ள தென்னாட்டை ஆள்கின்றாள் ஒரு மங்கை; பொன் நாட்டை ஆள்கின்றாள் ஒரு மங்கை; ஆந்திர நாட்டில் அரசு புரிகின்றாள் ஒரு மங்கை; மலை நாட்டில் வீற்றிருக்கின்றாள் ஒருமங்கை. இம்மங்கையர் நால்வரும் விந்த மலைக்குத் தென்பாலமைந்த நிலத்தைத் தமக்குரிய நிலமாகக் கொண்டுள்ளார்கள். இவர்களது பிறப்பைக் குறித்துப் பேசாது, இவரிடம் அமைந்த சிறப்பிற் சில கூறுகளைப் பற்றிப் பேசுவோம். தென்னாட்டு நங்கை பால்போல் இனிய வாசகம் பேசுவாள். ஆந்திர நாட்டரசி தேன்போல் இன்னிசை பாடுவாள். கன்னடப் பாவை பாகுபோல் பழமொழி பேசுவாள். மலைநாட்டு மங்கை மழலை மொழி பேசுவாள். பாலும், தெளி தேனும், பாகும் கரும்பும் இவை நாலும் கலந்தாற் போன்ற நங்கையர் நால்வரும் ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள்.

இந் நால்வரும் நல்ல பெயர் பூண்டு நானிலத்தில் விளங்குகின்றார். தென்னாட்டு நங்கையின் பெயர் தமிழ் என்பதாகும். பொன்னாட்டுப் பூவையின் பெயர் கன்னடமாகும். ஆந்திர தேவியின் பெயர் தெலுங்கு என்பர். மலைநாட்டு மங்கையின் பெயர் மலையாளம் ஆகும். இந்நான்கு நங்கையரையும், இவர் தங்கையராய்த் தவழ்ந்து திரிகின்ற மதலைகளையும் திராவிடம் என்னும் குடும்பப் பெயரால் குறித்தலும் உண்டு. சேர்க்கை முறையாலும் பழக்க முறையாலும் இந் நங்கையரது நடையிலும், உடையிலும் வெளிப்படையான் வேற்றுமையிருப்பினும், அடிப்படையிற் காணப்படும் ஒற்றுமை, இவர் பிறப்புமுறைமையைக் குறிப்பதாகும். இதற்குச் சான்றாக ஓர் அடையாளம் காட்டுவோம். இவ்வுலகிலுள்ள வேறெந்த மொழியிலும் இல்லாத இனிய எழுத்து ஒன்று இத் திராவிட குடும்பத்தில் உண்டு. இதனைச் சிறப்பெழுத்து என்பார்கள். இவ்வெழுத்தைத் தமிழ் என்னும் பெயரிலே காணலாம்; கண்ணுக்கினிய அழகிற் காணலாம்; நாவுக்கினிய பழத்திலும், செவிக்கினிய குழலிலும், யாழிலும், மக்கள் பேசும் மழலையிலும் இவ்வெழுத்து வழங்குகின்றது.

"குழல் இனிது யாழ் இனிது என்ப
தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

என்னும் திருக்குறளிலும்,

"குழலும் வீணையும் யாழும் என்றினை
யன குழைய
மழலை மென்மொழி கிளிக்கிருந் தளிக்
கின்ற மகளிர்"

என்ற கம்பர் பாட்டிலும் இவ்வெழுத்தின் இனிமை ததும்பக் காணலாம். இவ்வெழுத்தின் நீர்மையை உணர மாட்டாத அயல் நாட்டார் இதனைப் பாழாக்கினார்கள். பழங்காலத்தில் தமிழகத்தாரோடு வியாபாரம் செய்த யவனர்கள் 'தமிழகம்' என்னும் சொல்லைத் 'திமிரிகா' என்று குறித்துவைத்தார்கள். கேரள தேசத்திலுள்ள 'ஏழில்மலை' அவர்கள் வாயில் நுழையாமையால் எலிமலை என்று எழுதி வைத்தார்கள். இன்னும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்நாட்டில் வியாபாரம் செய்ய வந்த போர்ச்சுகீசியர் இச்சிறப்பெழுத்தையுடைய பல தமிழ்ச் சொற்களைச் சிதைத்தார்கள். 'சோழ மண்டலம்' என்னும் சொல்லைச் 'சோரமண்டல்' என்றார்கள். அவர்களுக்குப் பின் வந்த ஐரோப்பிய தேசத்தார் 'சோரமண்டலை'க் 'கோரமண்ட'லாக்கினர். இப்பொழுது சோழமண்டலக் கரை ஆங்கிலத்தில் 'கோரமண்டல் கோஸ்டு' ஆயிருக்கிறது.

இவ்வெழுத்திற்கு நேர்ந்த இழுக்கைக் குறித்துப் பிற நாட்டாரைக் குறை கூறுகின்றோமே! தமிழ் நாட்டிற் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருகின்ற தமிழர்களே இச்சிறப்பெழுத்தைச் சரியாக வழங்காமல் வழுக்கி விழும் பொழுது, பிறரைக் குறை கூறுதல் முறையாகுமோ? முற்காலத்தில் சேர, சோழ, பாண்டியர்களால் ஆளப்பட்ட மூன்று நாடுகளுள் நடுவே யமைந்த சோழ நாட்டில் இச்சிறப்பெழுத்து நடுநாயகமாக வுள்ளது. இத்தகைய தனிப் பெருமை வாய்ந்த காவிரி நாட்டில் வாழும் மக்களே பெரும்பாலும் இவ்வெழுத்தைச் சரியாக ஒலித்து வருகின்றார்களென்று சொல்லலாம். நல்ல தமிழ் வழங்

கும் நாடு என்று பல்லோர் புகழும் பாண்டிநாட்டின் அங்கங்களாய திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் நாடுகளில், பொது மக்கள் பேசும்பொழுது இவ்வெழுத்தின் தனிச் சிறப்பைப் பெரும்பாலும் காண முடியாது. 'வாழைப்பழம்' அவர்கள் நாவில் 'வாளப்பளம்' ஆகும். சீர்மை வாய்ந்த சிதம்பரத்தைத் தன்னகத்தேயுடைய நாட்டில் 'ழ' கரம் ஷகரமாகின்றது. தில்லையில் மார்கழித் திருவிழா ஓராண்டு வியாழக் கிழமையில் வந்து சேர்ந்தது. அப்பொழுது அது பட்டபாடு, சிவனே, எண்ணத்தான் படுமோ சொல்லத்தான்படுமோ? மார்கஷித்திருவிஷா வியாஷக்கிஷமை என்ற கோஷமே வீதிகளில் நிறைந்து நின்றது. இவ்வாறு திருவிழாவைத் திருவிஷா என்று பேசுவதற்கு ஈடாகத் தமிழ் மாணவர்கள் சிலர், தமிழ்ப் பாஷையைத் தமிழ்ப்பாழை என்றெழுதித் தம் சமரசப் பான்மையை விளக்குகிறார்கள். தில்லையை விட்டுச் சென்னையை நோக்குவோமாயின், அம்மகாநகரில், வழக்கம் வயக்கமாகும்; பழக்கம் பயக்கமாகும்; குழந்தை கோந்தையாகும்; கிழவி கேவியாவாள். இவ்வாறு சிறப்பு ழகாரத்தைச் சிதைத்து வழங்கும் சிறுமை ஒருபுறமிருக்க, அவ்வெழுத்தை நழுவ விடும் பழக்கமும் தமிழ் நாட்டில் உண்டு. வீட்டின் தாழ்வாரத்தைத் தாவாரம் என்போம். தென்னாட்டில், வாழ்வரசியை வாவரசி என்பர். நடுநாட்டார் தொழும்பனைத் தொம்பன் என்பார்; கேழ்வரகு கேவரகாய் கூவரகாயிற்று. சிறப்பு ழகாரத்தை இழந்த தமிழ்ச் சொற்கள் இன்னும் பல உண்டு.

இங்ஙனம் தமிழில் சிதைந்தும் அழிந்தும் அலமருகின்ற சிறப்பெழுத்தைத் தமிழின் தங்கையர் எவ்வாறு ஆதரிக்கின்றார் என்று பார்ப்போம். மழலை மொழி பேசும் மலையாள மங்கை இவ்வெழுத்தை இன்றளவும் நன்றாகப் போற்றி வருகின்றாள். எழுத்து நடை, பேச்சு நடை என்னும் இருவகை நடையிலும் 'ழகரம்' சிறிதும் தளராது மலையாள மொழியில் வழங்கி வருகின்றது. கன்னடமாது முன்னாளில் இவ்வெழுத்தைப் போற்றி வாழ்ந்தாள். பழங்கன்னடம் என்று சொல்லப் படுகின்ற பாஷையில் சிறப்பு ழகரம் அமைந்த பல சொற்களைக் காண்கின்றோம். இக்காலத்தில் வழங்கும் புதுக் கன்னடத்தில் இவ்வெழுத்து வழங்குவதில்லை. திராவிட குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறந்த பாஷைகளிற் காணப்படும் சிறப்பெழுத்து தெலுங்கிலும் ஒருகாலத்தில் இருந்திருத்தல்வேண்டும் என்று கருதுவது தவறாகாது. ஆயினும் இதுவரையும் கிடைத்துள்ள தெலுங்கு நூல்களில் ழகாரத்தையுடைய சொற்கள் வழங்கக் காணோம். ஆதலால் திராவிட குடும்பத்திற்குரிய தனி உடைமையாயிருந்த எழுத்தை முன்னே இழந்த நங்கை தெலுங்கென்றும், அதன் பின்னே இழந்த நங்கை கன்னடம் என்றும் தோற்றுகிறது. இவ்வெழுத்தை இதுகாறும் பறிகொடாதிருக்கின்ற இருமொழிகளுள் மலையாளமே இதனைச் சிறப்பாக ஆதரித்து வருகின்றதென்று சொல்வது மிகையாகாது.

பழம் பெருமை வாய்ந்த இந்நான்கு நங்கையரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதை நெடுங்காலம் நாம் அறியாதிருந்தோம். சென்ற நூற்றாண்டில் கிருஸ்து மத போதகர்களாகவும், அரசியலாளர்களாகவும் இந்நாட்டிற்கு வந்த மேல்நாட்டு அறிஞர் சிலர், இந்நான்கு மொழிகளையும் கற்றுணர்ந்து அவற்றின் கூறுகளையும், நலங்களையும் ஆங்கிலத்தில் வெளியிட்டார்கள். கன்னடத்தைக் கற்று அதன் நலங்களை வெளியிட்டவர் கிட்டல் என்னும் ஜெர்மானியப் பாதிரியார். தெலுங்கிற்குத் தொண்டு செய்தவர் பிரௌன் என்னும் ஆங்கில அரசியலாளர். மலையாளத்திற்கு நன்மை புரிந்தவர் குந்தார்த்தர்* என்னும் ஜெர்மானியப் பாதிரியார். இம்மூவரும் காலத்திற் செய்த உதவியைத் துணைக் கொண்டு கால்டுவெல் என்னும் மேலை நாட்டுப் பெரியார் தமிழை ஆராய்ந்தார். திருநெல்வேலியிலுள்ள இடையன்குடியென்னும் சிற்றூரைத் தம் இருப்பிடமாகக் கொண்டு, பல்லாண்டு தென்னிந்திய மொழிகளை வருந்திக் கற்று, அவற்றின் அடிப்படையாயமைந்த ஒற்றுமைகளைத் தெளிவாக விளக்கித் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் பெயரால் ஆங்கிலத்தில் ஒரு சிறந்த நூல் செய்துதவினார். அதுவரை தென்னிந்திய மொழிகளைக் குறித்துச் சரியாக ஒன்றும் தெரியாதிருந்த மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்க்கு இந்நூல் அரியதோர் விருந்தாக அமைந்தது. சென்ற ஐம்பது ஆண்டுகளாக மேல் நாட்டிலும் கீழ்நாட்டிலும் தென்னிந்திய மொழிகளைக் குறித்து நடைபெறும் ஆராய்ச்சிகளுக்கெல்லாம் கால்டுவெல் எழுதிய ஒப்பற்ற நூலே அடிப்படையாக அமைந்

* Dr. Gundert.

துள்ளது என்பதில் ஐய மில்லை. இப்பெரியாரைத் "திராவிட மொழி நூலின் தந்தை" (Father of Dravidian philology) என்று அறிஞர் உலகம் போற்றுகின்றது.

இவ்வாறு திராவிட குடும்பத்தைத் துலக்கிய கால்டுவெல் ஆசிரியர், நீலகிரி, தென்மலை முதலிய மலைகளிலும், கொண்டவனம் முதலிய காடுகளிலும் தவழ்ந்து திரிந்த திராவிட மதலைகளையும் கண்டறிந்து அவரினத்தொடு சேர்த்தார். இன்னும் இவர், பாரத தேசத்தின் வடமேற்கிலுள்ள பெலுச்சிஸ்தானத்தில் பேசப்படுகின்ற பிராகி என்னும் நங்கையிடம் திராவிட அங்க அடையாளங்கள் அமைந்திருக்கக் கண்டார். இந் நங்கை எப்பொழுது தன் இனத்தினின்றும் பிரிந்தாள்; எப்பொழுது பெலுச்சிஸ்தானத்திற் சென்று சேர்ந்தாள் என்று தெரியவில்லை. நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக பெலுச்சிஸ்தானத்திலுள்ள பெலுச்சி பாஷையோடும், பாரசீக பாஷையோடும் கலந்து உறவாடினாலும், தமிழின் தங்கையாகிய பிராகி இன்றளவும் தன் நீர்மை குன்றாதிருக்கின்றாள். இம்மங்கையின் நிலையைக் குறித்து ஆராய்ச்சியாளர் என்னென்னவோ சொல்லுகிறார்கள். திராவிடம் முற்காலத்தில் பாரத நாட்டிற்கு வந்த வழியினைக் காட்டும் நங்கை இவள் என்பார் சிலர். முன்னாளில் எத்திசையும் புகழ் மணக்க, பாரததேச முழுதும் தன்னரசு செலுத்திய திராவிடத்தின் எல்லை காட்டும் பூங்கொடி இவள் என்பார் சிலர். பத்தாண்டுகளுக்கு முன்பு சிந்து நதி தீரத்திலே கண்ட பழைய நாகரிகத்திற்குரியவர்கள் இன்னார் என்றறிவதற்கு பிராகி நங்கை எவ்வகையிலேனும் உதவி செய்யக் கூடுமோ என்று பார்க்கின்றார் சிலர். அம் முயற்சி எவ்வாறாயினும், தமிழின் ஒரு தங்கை, பல நாடுகளுக்கும் ஆறுகளுக்கும் மலைகளுக்கும் அப்பாலுள்ள வேற்று நாட்டிலே இன்றும் தவழ்ந்து விளையாடுகின்றாள் என்றறியும்பொழுது தமிழ் நாட்டார் உள்ளம் தழைக்கின்றதன்றோ?

திராவிட இனத்திற் சிறந்து விளங்கும் நங்கையர் நால்வரையும் ஆதரிக்க இந்நாளில் முடியரசும் குடியரசும் முனைந்து நிற்கின்றன. நாட்டு மொழிகளுக்கு ஏற்றமும் தோற்றமும் அளிக்கத் தொண்டர் பல்லாயிரவர் பாடுபடுகின்றார். இரண்டரைக் கோடிக்கு மேற்பட்ட தெலுங்கர் வணங்கும் தேவியைத் தொழும் கோவிலாக ஆந்திர சர்வகலாசாலை அமைந்துள்ளது. ஒருகோடிக்கு மேற்பட்ட கருநாடர் போற்றும் தெய்வமாகிய கன்னடப்பாவையை அலங்கரிக்க மைசூர் சர்வகலாசாலை முன்னிற்கின்றது. ஒருகோடி மலையாளிகள் வழுத்தும் மாதரசியை மேம்படுத்தத் திருவிதாங்கூர் சர்வகலாசாலை தோன்றியுள்ளது. இரண்டு கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழும் தென்னாட்டின் கண்ணெனத் திகழும் தில்லையின் எல்லையில் தமிழ் வளர்க்கும் அண்ணாமலைச் சர்வகலாசாலை நடைபெறுகின்றது. இக் கலாசாலைகளின் நற்பணியாலும், ஏனைய நல்லறிஞர் செய்யும் அரும்பணியாலும் நாட்டு மொழிகள் தழைத்தோங்கி வளரும் என்று தோன்றுகின்றது.

> தந்தை அருள் வலியாலும்—இன்று
> சார்ந்த புலவர் தவவலியாலும்—
> ....புகழ்
> ஏறிப் புவிமிசை என்றுமிருப்பேன்

என்று தமிழ்தாயும் உறுதிமொழி கூறுகின்றாள்.

நம் தமிழ் மொழி தழைத்தோங்கி வளர வேண்டுமாயின், இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழில் இயற்றல் வேண்டும் என்று பாரதியார் பணித்தார். புத்தம்புதிய கருத்துக்களை வெளியிடுவதற்குப் புதிய சொற்கள் வேண்டும். நவ நவமாகப் பதங்களை உண்டாக்கி வழங்குந் திறம் நம் தாய் மொழிக்கு உண்டு என்பதைத் தமிழறிந்தார் எவரும் மறுக்கமாட்டார்கள். ஆயினும் பண்டைக் காலந்தொட்டுப் பிறமொழிகளோடு பழகி, அம்மொழிகளினின்றும் பல சொற்களை ஏற்றுத் தமிழ்த்தாய் தன் சொற்செல்வத்தைப் பெருக்கி வந்திருக்கின்றாள். அன்று முதல் இன்றளவும் தமிழ் நாட்டாரோடு பண்டமாற்றுச் செய்தவர்கள் தமிழ் மொழியிடம் கொண்ட சொற்களும் உண்டு, கொடுத்த சொற்களும் உண்டு. இன்று ஆங்கிலம் சிறந்த மொழியாக இவ்வுலகில் வழங்குகின்றது என்பதை எல்லோரும் அறிவர். அம் மொழியில் நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட சொற்கள் உண்டு. நானிலத்திலுள்ள நானாவித மொழிகளினின்றும் ஆங்கிலம் தயக்கமின்றி நாணமின்றிச் சொற்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. தென்னிந்தியச் சொற்கள் ஆங்கில மொழியில் வீற்றிருத்தலை அறியாதார் யாவர்? இந்நாட்டு நாரங்காய் தானே ஆங்கிலத்தில் ஆரஞ்சா யிருக்கிறது. மலையாளத்தில் பலாவைக் குறிக்கும் சாக்கா என்னுஞ் சொல்லே ஆங்கிலத்தில் ஜாக் (Jack) ஆயிருக்கிறது. இவ்வாறு நாலு லட்சம் சொல்லு

டைய ஆங்கிலம் பிற மொழிகளிடம் கூசாது கடன் வாங்கிப் பெருமையோடு வாழும் பொழுது, ஒரு லட்சம் சொல்லுடைய தமிழ் ஏன் பிற மொழிச் சொற்களை ஏற்பதற்குத் தயங்க வேண்டும்? தமிழர் சிலர் தயங்கினாலும் தமிழ் தயங்காது பல சொற்களை விருந்தாக ஏற்றுக்கொண்டேயிருக்கின்றது. பிறமொழிச் சொற்கள் முதலில் பேச்சு நடையிற் கலந்து, பின்வாசகநடையில் ஏறி, அப்பால் பாட்டில் பதிந்து விடுதல் இயல்பு. இவ்விதம் படிப்படியாக ஏறிப் பதிவுற்ற பதங்களைப் பாரதியார் பாட்டில் பார்க்கின்றோம். 'நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்' என்றெடுத்து, 'சிப்பாயைக் கண்டஞ்சுவார்' துப்பாக்கி கொண்டொருவன் தூரத்தில் வரக்கண்டு வீட்டில் ஒளிப்பார்,' என்று அவர் பாடிய பாட்டில் பதிந்துள்ள சிப்பாய் பாரசீகப் பதம்; துப்பாக்கி துருக்கிப்பதம். இனி 'ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்' என்ற பாட்டிலுள்ள ஆயுதம் வடசொல், காகிதம் பாரசீகச் சொல். 'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்' என்னும் அடியிலுள்ள சிலுவை சிரிய மொழிச்சொல்லாகும்.

இன்னும் பிறமொழிப் பதங்கள் என்ற உணர்ச்சி யில்லாமலே நாள்தோறும் நூற்றுக் கணக்கான சொற்களை நாம் வழங்குகின்றோம். நாகரிகத் தமிழுலகில் சட்னியும் சாம்பாரும் இல்லாமல் பொழுது விடியுமா? அணாவும் பைசாவும் இல்லாமல் அன்றாட வாழ்க்கை நடக்குமா? அத்தரும் சவ்வாது மில்லாமல் அந்தஸ்து வாழ்வுண்டா? அடித்துத் தூரத்தினாலும் அல்வாவும் மிட்டாயும் நம் பிள்ளைகளை விடுமா? கேசரியில்லாத நல்விருந்தும் பேசரியில்லாத மாதர் மூக்கும் சிறக்குமா? ஆயினும் சட்னியும் சாம்பாரும், அணாவும் பைசாவும், அத்தரும் சவ்வாதும், அல்வாவும் மிட்டாயும், கேசரியும் பேசரியும் பிறமொழிச் சொற்களல்லவோ? உண்மையில் நம் தமிழ்மொழி பெரியதோர் ஆறு போன்றது. பெரிய ஆற்றில் ஊற்று நீரும் உண்டு. ஆயினும் ஊற்று நீரே போதும் என்று எண்ணி, அது வேற்று நீரை மறுப்பதில்லை. தன்பால் வந்து சேர்கின்ற சிற்றாறுகளையும் ஏற்றுத் தன்னீர்மை குன்றாது நடந்து செல்கின்றது. அவ்வாறே நம் தமிழ்த்தாயும் அவள் தங்கையரும் தம் அகத்தினின்று பிறக்கும் சொற்களையும் ஏற்றுக் கொள்வார்கள்; புறத்தினின்று வரும் சொற்களையும் ஏற்றெடுத்தணைத்துத் தம் மயமாக்கிப் பழமைக்குப் பழமை காட்டிப் புதுமைக்குப் புதுமை காட்டி என்றென்றும் சிறந்து வாழ்வார்கள்.

விஷமகவி.

(விசாரதன் எழுதியது.)

கவிச்சக்கரவர்த்தி கூத்தனை ஒட்டக்கூத்தன் என்று சொல்வது வழக்கம். ஒட்டக்கூத்தன் என்பது சிதம்பரத்திலே கோயில் கொண்டுள்ள சிவபெருமானின் திருநாமம். ஒட்டத்துக்கு, அதாவது போட்டிக்கு, காளியோடு நடமாடியவன் என்பது இப்பெயரின் பொருள். சிறந்த சிவபக்தராதலால் கவிச்சக்கரவர்த்திக்கு இப் பெயர் வழங்கப் பெற்றது போலும். இவர் சைவமதப் பெருமைகளை நன்கு விளக்கிப் பாடிய நூல்களுள் ஒன்று தக்கயாகப் பரணி. இவர் இந்நூல் பாடியது இரண்டாவது இராஜராஜ சோழன்காலத்திலே. அம்மன்னவனுக்கு முக்கிய மந்திரியாகவும் இராஜகாரிய நிர்வாஹகனாகவும் விளங்கிய பல்லவராயன் என்பவன் தன் பெயரால் விளங்கும் பல்லவராயன்பேட்டை என்னும் ராஜராஜபுரத்திலே ஒரு சிவாலயம் கட்டினன். அவ்வாலயத்திற்கு அவ்வரசன் ஆட்சியின் பத்தாவது ஆண்டிலே இறையிலிநிலமும் அளிக்கப்பட்டுள்ளது. அங்கேயே யாகஸம்

ஹார மூர்த்தியை எழுந்தருளப் பண்ணிய போது, கவிச்சக்கரவர்த்தி எழுந்தருளி தக்க யாகப் பரணியைப் பாடி நடித்துக் காட்டச் செய்து அரங்கேற்றினர். அந்த நாடக நூலிலே யுள்ள ஒரு தாழிசையை அதன் உரையாசிரியர் விஷமகவி என்று குறித்துள்ளார். அதனை இங்கே விமர்சனம் செய்வது பொருந்தும். அக்கவி வருமாறு :—

நேரியன் பதாகையிற் புலியேன
நேரியன் தராதரப் புயமேன
மேருவும் பொறுவயப் பொறையது
மேருவின் பராரையிற் பெரியதே.

சோழ அரசர்களின் குன்று நேரிமலை. அதனல் சோழன் நேரியன் என்று பெயர் பெற்றான். சோழ மன்னனின் கொடியிலே புலி எழுதப்பட்டிருக்கும். இதுபோலவே, பாண்டிய மன்னனின் கொடியிலே மீன் எழுதப்பட்டிருக்கும். பாண்டிய மன்னருள் ஒருவன் மேருமலையிலே தன் மீன் கொடியை வரைந்தான் என்று சொல்லுவதுண்டு; புலிக் கொடி அவ்வாறு மேருமலையிலே பொறிக்கப் படவில்லை. அதற்குக் காரணம் அப்புலியின் பலத்தையும். கனத்தையும் பூதரங்களுள் சிறந்த மேருமலையாலும் தாங்க முடியாது என்பதாம். மலைகளைப் பூதரங்கள் என்று சொல்வதுண்டு; அவைகள் பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன என்பது ஐதிஹ்யம். தராதரம் என்றாலும் பூமியைத் தாங்குவது என்பது தான் பொருள். சோழனுடைய தோள்கள் அகில பூமியையும் தாங்குவன; ஆதலால் அவைகளை மலைகளுக்கு ஒப்பாக்கி, 'மால் வரை யொக்கும் தோள்' என்று பாடுவது முறை. மால்வரையாகிய மேருவும் ஒப்பாகாது சோழமன்னனின் தோளுக்கு என்பது கவிச் சக்ரவர்த்தியின் கருத்து. மற்று எதற்கு இவனது துணைத்தோளை ஒப்பிடலாம் என்றால், தேவி பள்ளி கொள்வதற்கு அமைந்த அரவாசனது புஜத்திற்கு ஒப்பிடலாம். இவ்வாறு சோழனைச் சிறப்பிக்கும் முறையிலே அமைந்துள்ளது இப்பாடல். கவிச் சக்கரவர்த்தி இதனல் தேவிக்கு அமளியான நாகராஜனை வருணிக்கிறார். மேருபர்வதம் உலகத்திற்கு அச்சாணி போன்று உலகத்தை நிலை நிறுத்துவது என்று சொல்வதுண்டு; அது உண்மையன்று. ஆதிசேஷன் அன்றோ இவ்வுலகங்களைத் தாங்குகிறான்? அவனே தேவியின் ஓலக்க மண்டபத்தையும் தேவியுள்ளிட்ட எல்லோரையும், அம்மண்டபத்தின் அடிப்படையாக அமைந்து தாங்குகிறான். அதனல் அவன் மேருமலையினும் வயப்பொறை யுடையவன். மேருவின் மலையடிப்பாகத்தைவிடப் பெரியது அவனுடைய சரீரம்.

மேருவும் ஒப்பாகாது என்றால், எதை ஒப்புமையாகக் கூறலாம் என்ற வினவிற்கு விடையளிக்கிறார் கவிச்சக்ரவர்த்தி. அரவாசனுக்கு முற்றும் ஒப்பாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை; ஆயினும், நேரியனுடைய புலிக்கொடியை அந்த அரவாசனுடைய பொறைக்கும் நேரியனுடைய புஜத்துவயத்தை அவனுடைய பெருமைக்கும் உவமையாகக் கூறலாம். ஏன் என்றால், இவை இரண்டும் அந்த அரவாசனைப் போலவே பொறுமையிலும் பெருமையிலும் மேருவை வென்று விளங்குகின்றன. நேரியென்னும் 'சிறு காடு' கொண்டே மஹா மேருவை வென்ற அகடித கடனு சாமர்த்தியமுள்ளவன் என்னும் கருத்தை விளக்கவே கவிச்சக்ரவர்த்தி சோழனை 'நேரியன்' என்கிறார். நேரியனுடைய பதாகையிலே யுள்ள புலியைப் போலவே, மேருவும் பொறாத வயப் பொறை யுடையது அரவாசு; தரையெல்லாம் தாங்கும் நேரியனது புஜத்துவயம் போலே, மேருவின் அடிவாரத்தைக் காட்டிலும் அதிகப் பெருமை வாய்ந்தது நாக ராஜனுடைய நீண்ட புஜம். இரண்டாவது மூன்றாவது அடிகளை மாற்றிக் கூறுவதாலும், தான் சொல்லும் பொருளை நேராகச் சொல்லாது திருகலாகச் சொல்வதாலும், இக்கவி விஷமகவி எனப்பட்டதுபோலும். இவ்வாறு மாற்றியமைத்து இரண்டு உபமானங்களையும் சேர்த்துச் சொன்னல்மட்டுமே உவமேயப் பொருளின் பெருமை விளங்கும் என்பது போலும் கவிச்சக்கரவர்த்தி இப்படி விஷமமாகப்பாடிய தன்கருத்து.

துறையூர் சிவப் பிரகாச : : : : சுவாமிகள் வரலாறு.

கர்னல் மெக்கன்ஸி என்பார் சேகரித்த கையெழுத்துப் புஸ்தகங்களில் (Mackenzie Manuscripts) ஒன்றிலே யிருந்த 'துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு' என்பது சுவாமிகளின் பெருமைகளையும் சித்திகளையும் நேரில் கண்ட அவர்களது சிஷ்யர்களுள் ஒருவர் சொன்ன பிரகாரம் சுமார் 200 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டு, அக்காலத்துப் பேச்சு நடைக்கும் நல்ல உதாரணமாக இருப்பதால், அது இங்கே பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதனை எடுத்தெழுதி உதவியவர்கள் ஸ்ரீ ராவ் சாகேப், ச. வையாபுரிப் பிள்ளையவர்கள்.

பத்திராகாசிரியர்.

சுவாமி கைலாசத்திலே நந்திகேசுர சுவாமிக்கு அனுக்கிரகம் பண்ணின முறைமையைத் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளி சனகாதியர் நால்வருக்கும் அனுக்கிரகம் பண்ணினது. சனகாதியர் பிரும்ம சோதி மாமுனிக்கு அனுக்கிரகம். பிரம்மசோதி மாமுனிவர் பூலோகத்தில் திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்ட சிவாசாரியார் சுவாமிக்கு அனுக்கிரகம். மெய்கண்ட சிவாசாரியார் சுவாமி அருணந்தி சிவாசாரியாருக்கு அனுக்கிரகம். அருணந்தி சிவாசாரிய சுவாமி பரஞான தேசிக சுவாமிக்கு அனுக்கிரகம். பரஞான தேசிக சுவாமி கொற்றவன்குடி சுவாமி நமசிவாய சித்தருக்கு அனுக்கிரகம். நமசிவாய சித்தர் சுவாமி சிவபிரகாச சித்தர் சுவாமிக்கு அனுக்கிரகம். சிவபிரகாச சித்தர் சுவாமி நமசிவாய மூர்த்திக்கு அனுக்கிரகம். நமசிவாய மூர்த்தி சிவப்பிரகாச சுவாமிக்கு அனுக்கிரகம்.

இந்தக் காலத்தில் பூலோக கைலாசமாகிய சிதம்பரத்தில் நடனம் பண்ணுநின்ற சபாநாதர் ஆத்மார்த்தமாகிய அழகிய சிற்றம்பலத்துடையவரும் பரார்த்தமாகிய சபாநாதரும்...... எழுந்தருளப் பண்ணி கட்டளையிட்டுக் கொடுத்தது: அதை யெடுத்துக் கொண்டு திருவாடுதுறைக்கு எழுந்தருளி மாசிலா மூர்த்தி ஸந்நிதானத்தில் ஸ்தோத்திரஞ் செய்கிற போது ஒசை கேட்டே கூடத்தக்கதாகப் போய்த்தான் அந்தக் கட்டளையிட்டுக் கொடுத்தது. அப்படித் திருவாவடுதுறையில் சில காலம் எழுந்தருளி யிருக்குங் காலத்தில், சிதம்பர க்ஷேத்திரத்தில் சபா நாதருக்கும் தில்லை கோவிந்தராஜருக்கும்......யற நிமித்தமாய் தில்லை மூவாயிரவர்க்கும் வைஷ்ணவர்களுக்கும் இரண்டு பேருக்கும் விரோதமாய், சபாநாயகருக்குப் பூசை முதலாகியது தடங்கலாய் நின்றபடியினாலே, அது நிமித்தமாக அநேகமாய் வியாச்சியங்கள் வந்து, அது முன்னிலையாகத் திருவாவடுதுறையில் எழுந்தருளி யிருக்கிற சிவபிரகாச சுவாமியார் சைவ...... னமானபடியினாலேயும் சபாநாதர் தில்லை மூவாயிரவர்களுக்கு துறையில் சிவபிரகாச சுவாமிகளாலே இது காரியஞ் ஜெயமாகுமென்று அவர்களுக்குக் கட்டளை யிட்டபடியினாலேயும், அவர்கள் திருவாவடுதுறைக்குச் சமாசாரம் அனுப்புவித்தார்கள். அந்த சமாசாரம் வந்த நாழிகைக்கு, சிவப்பிரகாச சுவாமிகள் அநேகந் திருக்கூட்டத்துடனே எழுந்தருளி வருகிறபோது, தில்லை மூவாயிரவர்கள் சபாநாதர் கட்டளையிட்ட உத்திரவுப்படிக்கு சபாநாதருக்குண்டான முத்துச்சிவிகை முதலாகிய சகல பிருதுகளுங் கொண்டு எதிரே போய்க்கொடுத்து, அழைத்துக் கொண்டுவந்து சபாநாதரையும் தெரிசனஞ் செய்து வைத்தார்கள். அப்படி அநேக உபசாரத்துடனே ஆநந்த பாஷ்பகரம் பொங்கும்படியாய்த் தெரிசனம் செய்யக் காலையில், சிவபிரகாச சுவாமிகளுக்கும் பின்னும் அவிடத்தில் இருக்கபடாநின்ற பேருகள் அனைவருக்கும் ஆநந்த நிர்த்த நடனம் தெரியும்படியாய்த் தெரிசனங் கொடுத்து அதனால் அவ்விடத்திலே ஆனந்தமாய் பக்ஷி? அடைந்து பதஞ்சலி வியாக்கிரபாதரிஷி இவர்களுக்குத் தரிசனங் கொடுத்தது. சப்தார்த்தத்தினாலே சாஸ்திரங்களிலே கண்டதே தவிர, நேரே உச்சவமாய்த் தெரியும்படியாகச் சுவாமிகள் முன்னி......லேக்கி தெரிசினங் கண்டோமென்று மிகுதியுஞ் சந்தோஷமாய்ச் சபாநாதர் பூசை காரியமும் திருவிழா ரதோச்சவ கைங்கரியமும் இரண்டும் நிறைவேறும்படியாய் சர்வசமஸ்தமான பேரும் அனுப்புவித்தார்கள்.

அது முன்னிலையாக ராயவேலூருக்கு ராயரவர்கள் சமஸ்தானத்துக்கு எழுந்தருளி அவிடத்திலே இருக்கப்படாநின்ற மந்திரி ஸ்தானாதிபதி முதலாகிய பேருகளும் மனோ தர்மம் விசாரிக்கு மிடத்தில் மந்திரி ஸ்தானா திபதிகளுக் கெல்லாம் தலைவனாகிய லிங்கண பத்தர் அவர்களுடைய மனோதர்மம் விசாரித் மிடத்தில் வீரசைவத்துக்கு உடையவரான படியினாலேயும் அவர்கள் சங்கமமே தெய்வமா யெண்ணுகிறபடியினாலேயும் அந்த சங்கம வடிவும் அங்கலிங்க சையோக வடிவமா யிருந்தால் அவர் எதிர் கொண்டுவந்து அவர்களையே சிவ மாக எண்ணி அவர்களைத் தெரிசனஞ் செய்து கொண்டு அவர்கள் திருவாக்குப்படி நடந்து கொண்டு வருகிறவரானபடியினாலேயும், மற்ற அங்கலிங்க சையோகமிடத்திலே திறை போட்டுக் கொண்டு சுகுரவரானபடியினாலே அவரிடத்தில் முகதாவிலே போய்ப் பேசின துக்காக இந்த உ௰அ ஆகமமும் எடுத்து விசாரணை செய்யுமிடத்தில் ஆகமத்துக் கெல்லாம் முடிவான சிவ ரகசியத்தில் அங்கலிங்க சையோகம் எல்லாவற்றிற்கும் முதலே யென்றும் எல்லாவற்றிற்கும் சைவ மென்றும் வீர சைவ மென்றும் வேறில்லாதபடிக்கு இருக்கும்படியாக யிருக்கிற தென்றும் அறிவினாலே தெரிந்து சபாநாதர் கட்டளையிட்ட உடைய வரைத் தானே சபாநாத சற்குரு மூர்த்தமாய் ஆகாசவாக்காய் அனுக்கிரகம் பண்ணினபடியினாலேயும் அந்த உடையவரைத் தானே சிரசின்பேரில் எழுந்தருளச் செய்துக் கொண்டு லிங்கணபத்தர் அவர்களிடத்திலே யெழுந்தருளிப் போரபோது, அவர் எதிர் கொண்டு நம்முடைய தெய்வம் இப்படியாக எழுந்தருளி வந்ததே யென்று வெகு ஆனந்தத்தை அடைந்து ஷோடஸோபசாரத்துடனே சரணஞ் செய்து கொண்டு தன்னுடைய அரண்மனைக்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய் சிவ பூஜை மகேசுர பூஜை முடியும்படி செய்து பூலோக கைலாசமாகிய சிதம்பர க்ஷேத்திரத்தில் சபா நாதருடைய கைங்கரியம் விசாரணை செய்து கொடுக்க வேணுமென்று உத்தாரங் கட்டளையிட அந்த உத்திரவுப்படிக்கு விசாரணையுஞ் செய்து சபாநாதர் பூஜை கைங்கரியமும் ஆனி மாசத்தில் ரதோச்சவமும் எப்பேர்ப்பட்ட உச்சபமுஞ் செய்து வைக்கச் சொல்லி உத்தரவு செய்து அந்த திருவிழா நடப்பித்து பதில் சமாசாரம் வந்த பிறகு தாம் பூசை செய்து நைவேதனஞ் செய்தார். பின்பு இது காரியங்களெல்லாம் ராயரவர்களிடத்திலே இது சமாசாரம் அறிக்கை பண்ணினார். அவர் அந்த சமாசாரத்தைக் கேட்டு இங்கே ஆர் வந்திருக்கிறார்கள் என்று ராயரவர்கள் கேட்டார்கள். கேட்டவுடனே, சிதம்பர ஸ்தலத்திலிருந்து மகாத்துமாக்கள் வந்து என்று சொல்லிக் கொண்டார்கள். அரமனைச் செங்கோல் என்னிடத்தில் கட்டளை யிட்டிருக்கிறபடியினாலே அவர்களுடைய காரியத்தைத் திட்டப்படுத்திக் கொடுக்கிறே னென்று சொன்னார். சொன்ன தற்குச் சமுஸ்தானத்துக்கு நிற்போ......ச்சு வரும்படியாய் அது காரிய சீரிட்க் கொடுத்து வெகு நன்மை ஆச்சு தென்று சந்தோஷப் பட்டுக் கொண்டார்.

அப்போது ஆறு வருஷகாலமாய் மழை யில்லாமல் சீமைகளில் அந்தாலப்பட்டுப் போகிறதென்று வந்த மகாத்துமாக்களுடனே சொல்லி மழை அழைப்பிக்க வேண்டுமென்று சொன்னார். அது சமாசாரம் சிவப்பிரகாச சுவாமிகள் கிட்ட வந்து சொன்னார். அது சமாசாரங் கேட்ட மாத்திரத்திலே அடியார்களை அழைப்பிவித்து தேவாரத்தில் மேகராகக் குறிஞ்சியென்கிற திருவையாற்றுத் தேவாரம் ஓதச்சொல்லிக் கட்டளை யிட்டது. அந்தப் படிக்கு மழையும் நன்றாக வருஷித்து ஆறு குளங்கள் நிரம்பிச் சீமைகள் சௌக்கியப் பட்டது.

இப்பேர்க்கொத்த மகாத்துமாக்களண்டையில் நாம் தெரிசனம் பண்ணிக் கொள்ள வேணுமென்று வந்தார். தெரிசனம் பண்ணிக் கொண்டு ஞான அனுக்கிரகங் கட்டளை யிடவேணுமென்று கேட்டார். அப்போதை கிருபை வந்து ஞான அனுக்கிரகங் கட்டளை யிட்டது.

அப்படி யிருக்க, திருவண்ணாமலை தன் பட்டணத்துக்கு அடித்தானமானபடியினாலே மடங் கட்டி வைத்து அதிலே எழுந்தருளி யிருக்கும்படி செய்தார்கள்.

அப்படி யிருக்குங்காலத்திலே யாத்திரையாகி உடுப்பி சுப்பிரமணியத்தில் எழுந்தருளினவிடத்தில், அவ்விடத்தில் தடாகக்கரையில் நிஷ்டை பொருந்தியிருந்த விடத்தில்,

சுப்பிரமணியர் அந்த வூரிலேயிருக்கும் ஸ்தானீகர்களுக்குச் சொல்லி அன்னங் கொண்டு போய்ப் படைக்கச் சொல்லி, அதனாலே அவர்கள் அன்னம் படைத்து, சுவாமி தெரிசனம் பண்ணி வைத்தார்கள்.

மறுபடி இருக்கப்படாநின்ற ஸ்தலங்களுந் தெரிசனம் பண்ணிக் கொண்டு திருச்செங்கோட்டுக்கு வந்தவிடத்தில், கேதாரி உடையவர் மகேசுவ்ரர் பூசை செய்து வைத்தார்கள். அடியார்க்குத் தானம் மகேசுவரபூசை செய்து வைத்தீர்களே! இந்த நந்திகேசுரருக்கு என்ன மகேசுரபூசை செய்து வைத்தீர்களென்று திருவுளம்பற்ற அதற்குக் கடலை கொண்டு வந்தால் மகேசுரபூசை நிறைவேறுமென்று சொல்ல, அந்தப் படிக்குக் கடலை கொண்டுவந்து வைத்த மாத்திரத்துக்குள்ளாக அந்த சன்னிதானத்துக்கு முன்னிதா யெழுந்தருளியிருந்த நந்திகேசுரர் எழுந்தருளிக் கடலையை நைவேதனஞ் செய்தது. அந்த மகாத்மியத்தைக் கண்ட மாத்திரத்திலே, அந்தக் கேதாரி உடையவர் சிவிகை சுமந்தார்.

அவ்விடத்திலிருந்து திரிசிரபுரத்துக்கு எழுந்தருளின விடத்தில் தீவட்டிக்கு எண்ணெய் யில்லாமல், காவேரித் தீர்த்தத்தைக் கொண்டுவரச் சொல்லிப் பந்தம் எரிய விட்டார்கள்.

அவ்விடத்திலிருந்து திருவண்ணாமலைக்கு எழுந்தருளுகிறபோது, பெண்ணையாறு இருகரையில் பாரித்து வருகிற சலந் தான் அந்தியே வடிய விட்டது.

அவ்விடத்திலிருந்து அண்டாநல்லூருக்கு எழுந்தருளும் போது ஒரு பிராமணனுடைய புத்திரன் நாகந் தீண்டி ஆத்துமா நீங்கிப்போக, அந்தப் புத்திர சோகத்தினாலே தாய் தகப்பன் மெத்தத் தயாரப்பட்டுக்கொண்டு இருக்கிறதைக் கண்டு, போன ஆத்துமா மறுபடியும் அதுவா நிலை அந்தத் தேகத்தில் வரும்படியாய் முடித்தது.

அவ்விடம் விட்டு, திருவாரூருக்கு எழுந்தருளிப்போனபோது, வலங்கமானில் ஒருவன் குஷ்டரோகத்தினால் கைகால்கள் தேகமாதியந்தம் குறைந்து அழுகிக் கிருமிகளாலே மிகவும் நாற்றமாயிருக்கிறதினாலே அந்தக் கிராமத்தார் சாலைக்கரையில் எடுத்துப் போட்டு விட்டார்கள். அப்போ சுவாமிகள் எழுந்தருளும்போது அவன் கண்டு நமஸ்காரஞ் செய்யுமளவில், தமது அஸ்தத்தினாலே விபூதி கொடுக்க, அந்த விபூதியை வாங்கி உள்ளுக்குப் போட்டுக் கொண்ட மாத்திரத்திலே அந்தக் குஷ்டரோகம் நீங்கி வச்சிர தேகமாய் விட்டது.

அவ்விடத்திலிருந்து பட்டீச்சுரத்துக்கு எழுந்தருளும்போது, அந்த ஊரிலிருக்கப்பட்ட ராசாவுக்குப் பிரமஹத்தியாகிய தோஷம் வந்து பிடித்துக் கொண்டிருந்ததை, அது தீரும்படியாக அனுக்கிரகம் செய்தது.

அந்த மகிமையோடுங்கூடி எழுந்தருளியிருக்கும்போது, இந்தத் துறையூரிலிருக்கும் லிங்கதுரையவர்கள் அடிமையாகச் சிவலிங்க தாரணமும் தீக்ஷை முதலாகியது செய்து கொண்டு தன்னுடைய அரண்மனைக்கு முன்னிதாய்க் திருமடம் கட்டிவைத்து, குரு தெரிசனம் எத்தேசகாலமுஞ் செய்யவேணு மென்கிறதாய் எழுந்தருளச் செய்து, அதிலிருக்கப்பட்ட தம்பிரான்கள் திருக்கூட்ட முதலாகிய சுவாமிகள் அனைவருக்கும் சிவபூசை மகேசுரபூசை நடக்கும்படியாக நாள்தோறும் தம்முடைய உக்கிராணத்திருந்து நித்தியப் படியாய்ப் பத்துப்படி காலாங்காலம் அமுதுபடியும் அமுதாக்குண்டான மேற்செலவுகளும் பூசைத்திரவியங்களும் பிறதான செலவுக்கும் துரை அஞ்சு பொன்னும் கொண்டு வந்து பாதத்திலே வைத்து நமஸ்காரம் பண்ணிக் கொண்டு தினந்தோறும் நடப்பித்து வந்தார்கள்.

இப்படி வெகுநாளாய் நடந்து கொண்டு வருங்காலத்தில் ஞானக்கூத்து சிவப்பிரகாச சுவாமிகளுக்கு அனுக்கிரக முறைமை செய்து பட்டாபிஷேகஞ் செய்து கொண்டு பத்துத் தலைமுறை வரைக்கும் இந்த உக்கிராணக் கட்டளையும் பூசைத்திரவியமும் நித்தியம் அஞ்சு பொன்னும் அவர்கள் கொடுக்கச் சிவ பூசை மகேசுவர பூசையை நிறைவேற்றி வந்தது.

புதுக் கல்பனைகள்.

"மீன நிலயம்"

(ஸ்ரீமான். மா. கிருஷ்ணன், M.A., B.L., எழுதியது.)

சாமிநாதையர் வீடுகட்டத் தொடங்கி சுமார் பத்து மாதங்களாயின. வீடு இன்னமும் முடிந்தபாடில்லை. முதலில் அவர் குறித்த படி கட்டிய சிறு வீட்டிற்கு மேன்மேலும் கூடங்களும் அறைகளும் சேர்த்துக் கட்டிக் கொண்டே வந்தார். நான்கு பக்கங்களிலும் பூச்செடிகள் நிறைந்த தோட்டத்தின் நடுவில், தன் தனியிருப்புக் கேற்றபடி சிறிய வீடொன்று கட்டுவதென்று அவர் எண்ணியிருந்தார். இப்பொழுதோ, கொல்லையில் ஒரு கீரைப்பாத்திக் கன்றி வேறெங்கும் தோட்டம் போட இடமில்லை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக இந்த நூதன வீடு வளர்ந்து வந்தது. ஒரு விஷயத்தில்தான் அது முதலில் கட்டியபடி இருந்தது. வாசலில் 'மீன நிலயம்' என்ற பெயர் கறுப்புப்பளிங்கில் பொன்னிற எழுத்துக்கள் கொண்டு எழுதப்பட்டிருந்தது. இந்த 'மீன நிலயம்' மட்டும் மாறாமல் 'மீன நிலய'மாகவே இருந்தது.

ராவ் பகதூர் கணபதிபுரம் சாமிநாதையருக்கு ஐம்பது வயதிருக்கலாம். என்றுமே பணக்குறைவோ தேக உழைப்போ அறியாதவர். செல்வாக்குடனும் அநாயாசமாகவும் வளர்ந்தவர் என்று அவரைப் பார்த்தாலே தெரியும். பட்டுச்சட்டை; பருத்த தொந்தி; தளதளவென்று தொங்கும் சதைப்பற்றுள்ளவர். கோழை மனதுள்ளவர்—எதையும் நீண்ட பரியாலோசனையுடனும் சந்தேகத்துடனுமே செய்வார்; முடிந்தால் செய்யவே மாட்டார். எவரையும் நம்பி அவர்களின் அபிப்பிராயத்தையோ உதவியையோ கேட்பதில்லை. உள்ளதை உள்ளபடி சொல்லுவது சாமிநாதையருக்குப் பிடிக்காது. எல்லாவற்றிலும் ரகசியத்தை விரும்பியவர். இவருக்கு ஒரு விதமான தந்திர யுக்தியும், விடாமல் புத்தகங்களைப் படிக்கும் திறமையும் உண்டு. இப்பேர்ப்பட்டவர், தான் இளமையில் புகுந்த வக்கீல் தொழிலில் மிகப் பிரசித்தி பெற்று விளங்கி ஏராளமாகப் பணத்தையும் சேர்த்து விட்டார் என்று சொல்லவும் வேண்டுமா? இவர் வெளிப்படையாக எதையும் சொல்லாததனால் இவருக்குப் பகைவர்கள் கிடையாது. எல்லோரும் இவரிடத்தில் நல் மதிப்புடனும் மரியாதையுடனும்—சிற்சில வேளைகளில் அன்புடனும் கூட—நடந்து கொள்வார்கள்.

இத்தனை அதிர்ஷ்டசாலியாக விருந்தும், பலவருஷங்களாக இவருக்கு ஒரு குறையுண்டு. பால்யத்தில் தனக்கு வாழ்க்கைப்பட்டு என்றுமே தன்னுடன் அன்னியோன்னியமாகப் பழகிய மனைவி அவளுடைய ஆசை தீராமல் இறந்து விட்டாளே என்று வருத்தப்பட்டார்.

சாமிநாதையரின் மனைவி மீனாக்ஷி இறந்து போய் நான்கு வருஷங்களாயின. இவர்களுக்குக் குழந்தைகள் இல்லாததனால் வேறு பற்றின்றித் தன் இல்லாளை மிக அன்புடனும் ஸிநேகத்துடனும் அவர் பாராட்டி வந்தார். சில வேளைகளில் தன் ரகசிய எண்ணங்களைக்கூட அவளிடம் சொல்லுவார். அவளோ அவர் சொல்வதற்கெல்லாம் இணைந்து ஒப்புவாள்: ஒரு விஷயத்திலும் அவருக்குக் குறுக்காக அபிப்பிராயப் படுவதில்லை. "இதைச் செய்" என்று அவரிடம் சொன்னதே யில்லை. ஆனால் தன் கடை நாட்களில் இந்த மீனாக்ஷி வாடகை கொடுத்துக் குடியிருப்பது சாமிநாதையரின் பதவிக் கேற்றதில்லை யென்றும், சொந்த வீடொன்று கட்டிக்கொள்ள வேண்டுமென்றும் அடிக்கடி சொல்வதுண்டு.

இந்த ஆசை நிறைவேறுவதற்கு முன் அவள் இறந்து விட்டதனால், ஒரு சிறிய அழகிய வீடுகட்டி அதற்கு அவள் ஞாபகார்த்தமாக 'மீன நிலயம்' என்று பெயரிட வேண்டுமென்று சாமிநாதையர் ஆவல் கொண்டார். இந்த ஆவலே அவர் வீடுகட்டத் தொடங்கியதற்கு காரணம்; வீடு வளர்ந்து பெருகியதற்குக் காரணம் வேறு.

* * *

கக்ஷிக்காரர்களுடன் பேசுவதிலும், நீதிஸ்தலத்தில் பேசுவதிலும், மிகுந்த வேளைகளில் படிப்பதிலுமாக சாமிநாதையரின் பொழுது போய்விடும். வீடு கட்டுவதைக் கவனிப்பதற்கு அவருக்கு நேரமில்லை. ஆதலால், இன்னின்ன படியாக வீட்டைக் கட்ட வேண்டுமென்று ஒருவரிடமும் குறிப்பிட்டு, அவரையே பொறுப்பாக விருந்து 'மீன நிலய'த்தைக் கட்டிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். அஸ்திவாரம் கட்டி முடிந்த பிறகு ஒரு நாள் சாயங்காலம் சாமிநாதையர் தன் இல்லத்தைப் பார்க்க வந்தார். வந்தவர், கட்டிடத்தைச் சுற்றிப் பார்க்காமல், வேலை முடிந்து வீடு போகும் கூலிகளை உற்று நோக்கிப் போய் விட்டார். மறுநாள் காலையில் திரும்பவும் கட்டிடத்தைப் பார்க்க வந்தார்: மாலையிலே தான் அங்கு விட்டுப்போனார். மறுநாளும் அப்படியே. நீதிஸ்தலத்திற்குப் போவதையும், கக்ஷிக்காரர்களின் சகவாசத்தையும், பணம் சேகரிப்பதையும் விட்டு விட்டார். தினமும் கட்டிடத்தை மேல் பார்வையிடுவதிலேயே காலத்தைப் போக்கினார். காலையில் ஏழுமணிக்கே 'மீன நிலய'த்திற்கு வருவார்; பொழுது சாயும் மட்டும் அங்கேயே இருப்பார்.

சாமிநாதையர் தன் வீட்டில் எடுத்துக் கொண்ட அபார சிரத்தையை எல்லோரும் வியந்து பேசினார்கள். "அவர் எப்பொழுதும் அப்படிதான்—ஒரு கடமையை ஏற்றுக் கொண்டால் அதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்" என்று அவர் நண்பரொருவர் மற்றொரு நண்பரிடம் சொன்னார். "அந்த அம்மாளிடத்தில் என்ன வாஞ்சை பாருங்கள்! அதினால்தானே இதே வேலையாக வெயிலில் நின்று கொண்டு வீடு கட்டிக் கொண்டே யிருக்கிறார்" என்று அவர் பதில் சொன்னார். சாமிநாதையரின் வீடு கட்டும் ப்ரேமையோ பெருகிக் கொண்டே வந்தது.

* * *

காதலினால் என்னதான் ஆகாது? தங்கள் வாழ்நாட்களை இதற்கென்றே சமர்ப்பித்து, எவ்வளவோ அற்புதமான கட்டிடங்களைத் தங்கள் காதலின் அழியாச் சின்னமாக இதற்குமுன் எவரும் கட்டவில்லையா? ஆனால் 'தாஜ் மஹாலை' விட அழகிலும் அபூர்வத்திலும் மிகக் குறைவாயிருந்தபோதிலும் மற்றொரு விஷயத்தில் 'மீன நிலயம்' அதிலும் மேன்மை யானது. இவ்விரண்டு கட்டிடங்களையும் தொடங்கிய ஆசை ஒன்றே: 'மீன நிலய'த்தை விருத்தி பண்ணிய காரணம் வெறும் காதலின் நினைவல்ல—காதலே.

என்றுமே சாமிநாதையருக்குப் பணம் சேகரிப்பதில் தவிர மற்றெதிலும் ஆழ்ந்த விருப்பம் கிடையாது. பால்யத்தில் கூட அவர் உற்சாகத்துடன் எதையும் விரும்பியதில்லை. வயது ஆக ஆக அவருக்கு சந்தேகமும் நிதான குணமும் அதிகரித்தன. "இதை நாம் செய்யலாமா? செய்தால் நமது பதவிக்கு ஏதாவது கெடுதல் உண்டாகுமா?" என்று அநேக யோசனைகள் செய்து முடிவில் அது என்னவாயிருந்தாலும் அதைச் செய்ய மாட்டார். இப்படிப் பட்ட 'மத்யமகுண திலகம்' ஒரு உப்பரவப் பெண் மீது ஆசை கொண்டு விட்டார். இந்தப் பெண்ணுக்கு

இது தெரியாது. யாருக்கும் இது தெரியாது. சாமிநாதையரின் ரகசிய உள்ளத்தை மட்டும் இந்த ஆசை அரித்துக்கொண்டே வந்தது.

முதல் முதல் 'மீன நிலய'த்திற்கு விஜயம் செய்த நாள் இந்தப்பெண்ணை அவர் கண்டார். 'மீனநிலய'த்தின்பேரில் தனக்குப் புதிதாக ஏற்பட்ட வாஞ்சை இன்ன காரணத்தினுல் என்பது அவருக்கே சில நாட்கள் மட்டும் தெரியவில்லை. பின் ஒருநாள் கட்டிடத்தைச் சுற்றி வருகையில் மீண்டும் அவளைக் கண்டார். அவள் ஒரு காலை ஏணியில் ஊன்றி, அடுக்கடுக்காக ஓடுகளை வாரி கூரை மேலிருக்கும் கொல்லனிடம் வீசிக் கொண்டிருந்தாள். அவன் ஏதோ சொல்ல, "ஐயர்" பக்கத்தி லிருப்பதை கவனியாது அவள் கொல்லென்று சிரித்தாள். சாமிநாதையர் ஒரு புது நுட்பத்துடன் அந்தப் பெண்ணை உற்றுப்பார்த்தார். அப்பொழுதுதான் அவருக்குத் தன்னை தினம் 'மீன நிலய'த்திற்கு வரவழைக்கும் சக்தி இன்னதென்று புலப்பட்டது. அவளுக்கு இருபது வயதுகூட இருக்காது. யாரும் அவளை அழகியென்று சொல்லமாட்டார்கள். ஆனுல் அழகுதான் காதலுக்கு ஆதாரமா? அவள் பேசுவது, நடப்பது, இருப்பது எல்லாவற்றிலும் ஒரு யௌவனமும் தைரியமும் குதூகலமும் விளங்கின. திரும்பவும், அந்தக் கொல்லன் ஏதோ சொல்லச் சிரித்தாள்; சிரித்துக் கொண்டே என்னமோ பதில் சொன்னுள். அவர்கள் தெலுங்கில் பேசிக் கொண்டார்கள். சாமிநாதையருக்கு இந்த பாஷை தெரியாது. திடீரென்று அவருக்கு தெலுங்கின் மீது தீரா வெறுப்பு ஏற்பட்டது. அன்றிரவு அவருக்கு சரியாகத் தூக்கம் வரவில்லை. ஏணிமேல் ஒரு காலை ஊன்றி, சிரித்துக்கொண்டே ஓடு வீசுமொரு உப்பரவப் பெண்ணின் ஞாபகம் திரும்பவும்; திரும்பவும் அவருக்கு வந்தது.

அன்று முதல் வீட்டை மேல் பார்வையிடுவதைச் சாக்காகக் கொண்டு எதையோ உற்றுப்பார்ப்பவர்போல் இந்தப் பெண்ணையே கவனிக்கலானுர். முதலில் தன் இயல்புக்கேற்றபடி தன் ப்ரேமையை மிகச் சந்தேகத்துடனேதான் பாராட்டினுர். "என்ன இருந்தாலும் இவள் கேவலம் ஒரு உப்பரவச்சி; நாமோ சமூகத்தின் பிரதானிகளில் ஒருவர்.. இது சுத்த அசட்டுத்தனம். இதற்கு இடம் கொடுத்தால் நமக்கு வீண் அவமானமே ஏற்படும். வெளியிலே தெரிய வந்தால்...... ...." என்றெல்லாம் சில வேளைகளில் யோசனை செய்வார். மறு நிமிஷம் அவளைப் பார்த்தவுடன் இந்த எண்ணங்களெல்லாம் எங்கேயோ ஓடிப்போய் விடும். என்றுமே யௌவனத்தையும் உற்சாகத்தையு மறியாத சாமிநாதையரை அந்தப் பெண்ணின் இளமை முடிவில் பரவசப் படுத்திவிட்டது. எப்படியாவது அவளை அடைய வேண்டுமென்று தீர்மானித்தார். இந்தத் தீர்மானத்தை எப்படி மேல் நடத்துவது என்றுதான் அவருக்குத் தெரியவில்லை. "பகிரங்கமாகக் கலியாணம் செய்து கொள்வது உசிதமில்லை—ஆனுல் கலியாணம் செய்து கொள்வானேன்? நமது இஷ்டத்தை அவளிடம் தெரிவித்தால் போதும்—எல்லாம் கை கூடிவிடும். அவளென்ன இத்தனை மென்மையும் செல்வாக்கும் பொருந்தியவரின் காதலை மறுக்கவா போகிருள்? ஆனுல், ஒரு வேளை மறுத்து விட்டால்? பெண்களைப்பற்றி உறுதியாக என்ன தான் சொல்ல முடியும்! அடாடா, அவளுக்கு ஏற்கனவே கலியாணமாய் விட்டதோ என்னமோ........."என்று சஞ்சலப்பட்டார். உற்றுப் பார்த்ததில் அவள் கழுத்தில் ஒன்றுமே இல்லாததால் திரும்பவும் சந்தோஷப் பட்டார்: அவர் மனதில் மறுபடியும் அவள் தன் ரகசிய வைப்பாட்டியாய் விட்டாள். அவளுக்குத் தன் காதலை எப்படித் தெரிவிப்பதென்று பல யோசனைகள் செய்தார். "யாரையாவது விட்டு அவளிடம் சொல்லும் படி ஏற்பாடு...........சீ சீ! அது கூடாது: ஊரெல்லாம் பரவி விடும். மேலும் நிஜமாகவே நாம் அவளை விரும்புகிறேம் என்று அவளுக்குப் புலப்படாது. இத்தனை பெரிய மனுஷன் ஒரு உப்பரவச்சியின் மீது ஆசை கொள்வாரா ...கேலிக்காக சொல்கிருர்கள் என்று நினைத்து விடுவாள்." என்று தூது விடுவதையும் 'உசிதமில்லை' என்று முணுமுணுத்தார். எப்பொழுதுமே வெளிப்படையாக ஒன்றை சொல்வதற்கு சங்கோசமாக விருந்தால் அவர் அதை மழுப்பி எழுதி விடுவது வழக்கம். "நாமே நேரில் அவளிடம்........." ஆனுல் 'நேரில் அவளிடம்' சொல்லுவது சாமிநாதையரால் முடியாத காரியம். இது அவர் இயல்புக்கு மாறுனது. கடைசியில் அவசரப்பட்டு ஏதேனும் செய்தால் அவமானமே வருமென்றும், காத்திருந்து தனியாகவிருக்கும் பொழுது எப்படியாவது தன் ஆசையை அவளுக்குக் குறித்து விடுவதென்றும் தீர்மானித்தார்.

அவளோ என்றும் தனியாயிருப்பதில்லை. சிற்றாள் வேலை செய்பவர்க்குத் தனி நேரம் வேறு உண்டா? எப்பொழுதும் அவளுடன் ஒரு கொல்லனோ, உப்பாரவனோ, மற்றொரு உப்பாரவப் பெண்ணோ இருந்து கொண்டே வந்தார்கள். எத்தனை பிரயாசைப்பட்டும் அவர் விரும்பிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. விடாமல் அவளை 'மேல் பார்வை' யிட்டதின் பயனாக அவள் பெயரை மட்டும் தெரிந்து கொண்டார். 'குப்பி' என்று அவளை மற்றொரு உப்பாரவப் பெண் அழைக்கவே அவள் பெயர் 'குப்பி' என்று அறிந்தார்.

நாள் ஆக ஆக அவர் ஆசைமட்டும் பெருகிக் கொண்டே வந்தது. ஒரு நாள் அதைப் பொறுக்க மாட்டாமல் அவளைத் தனியாக அழைத்துப்போய் தன் காதலை வெளிப்படுத்துவதென்று திடீரென்று நிச்சயித்தார். சற்று நிதானித்தால் எங்கே இந்த நிச்சயத்திற்குத் தன் மனதில் தடை உண்டாகுமோ வென்று பயந்து உடனே அவளைத் தேடிச்சென்றார். அவள் சுண்ணாம்பையும் மணலையும் ஒரு கொம்பால் கலக்கிக் காரை சேர்த்துக் கொண்டிருந்தாள். பக்கத்தில் ஒரு கொல்லன் சுவர் கட்டிக் கொண்டிருந்தான். அவனுக்குக் கேட்காத குரலில் அவளை அழைக்க முடியாது; மேலும் ரகசியமாக மெல்ல அழைத்தால் அது அவன் சந்தேகத்தையே கிளப்பும். என்றுமில்லாத வைராக்கியத்துடன் "ஏ குப்பி, இங்கே வா!" என்று சொன்னது அவர் தொண்டையிலேயே நின்று விட்டது—யாரோ கமறுவது போலிருந்தது. அவள் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. கொல்லன் தன் வேலையை விட்டு சாமிநாதையரை நோக்கி ஒரு புந்நகையுடன் திரும்பினான். தன் உள்ளத்தை அறிந்து தனக்கு 'குப்பி' என்று சொல்ல வராததைப் பற்றித்தான் நகைப்பதுபோல் அவருக்குத் தோன்றிற்று. "எந்த மடையன் இந்த சுவரைக் கட்டினான்.........முழுதும் கோணல்" என்று அவனிடம் எரிந்து விழுந்தார். கொல்லனுக்கு இன்ன செய்வதென்று புரியவில்லை: சுவரின் கோணல் அவனுக்குத் தென்படவில்லை. "நல்லவேளை அவளிடம் ஏதாவது உளறி மானத்தை யிழந்து விடவில்லை.........இனிமேல் தனியாயிருந்தால் தான் பார்க்கவேண்டும்" என்று எண்ணிக்கொண்டே அங்கிருந்து விலகினார். அன்று சாயங்காலம் வேலை யாட்கள் வீடு போகையில், அந்தக் கொல்லன் குப்பியை விளையாட்டாக முதுகில், தட்டினதைப் பார்த்து விட்டார். மறுநாள் ஏதும் காரணம் சொல்லாமல் அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார்.

நாள் ஆக ஆக வீடும் முடிந்து கொண்டே வந்தது. சாமிநாதையருக்கு இத்தனை நாட்களாக இல்லாத ஒரு கவலை ஏற்பட்டது. வீடு முடிந்து விட்டால் வேலையாட்கள் நின்று விடுவார்கள்.........பிறகு குப்பியைப் பார்க்கக்கூட முடியாதே என்று தயங்கினார். ஒரு நாள் அகஸ்மாத்தாக அங்கு வந்த நண்பரொருவர் "வீடு மிகவும் அழகாக விருக்கிறது, ஆனால் அவ்வளவு விஸ்தாரமாகக் காணவில்லையே............இன்னுமொரு கூடமும், முன் முற்றமும், கிழக்கே மற்றொரு அறையும் கட்டினால் நன்றாயிருக்கும்" என்று சொன்னார். அதற்கு சாமிநாதையர் "ஆமாம், நன்றாகத்தானிருக்கும்; ஏகத்துக்குப் பணத்தை யிழுக்குமே" என்றார்.

அன்றிரவு தன் நண்பர் உதவிய அபிப்பிராயத்தைப் பற்றி யோசிக்கலானார். "இன்னமொரு கூடமும் முற்றமும் அறையும் கட்டினால்தான் வீடா? தவிரவும் இதெல்லாம் முடிப்பதற்கு சரியாக ஒரு மாதமாவது பிடிக்கும். ஒரு மாதத்தில் எவ்வளவோ ஆகலாம்—இத்தனை நாளாய் நம்மை ஏமாற்றின சந்தர்ப்பம் வாய்க்கலாம். அவளை வசப்படுத்த வேறு யுக்திகளும் தோன்றலாம்.........கட்டாயம் அவளை அடைந்து விடலாம்" என்றெல்லாம் நினைக்கலானார். சில நாட்களாக அவரை வாட்டும் ஏக்கம் நீங்கவே நடு நிசியில் உரக்கச் சிரித்தார்; மனக்கோட்டை கட்டலானார். கிழக்கே புதிதாகக் கட்டும் அறையையே அவளுக்கு இருப்பிடமாகக் கொடுத்து விடுவதென்று நிச்சயித்தார். 'மீன நிலயம்' என்ற பெயரை மாற்றி அவளைக் குறிப்பிட்டுப் பெயரிடலாமா வென்று உத்தேசித்தார். ஆனால் சாமிநாதையரின் மையலிருண்ட மனதிற்குக் கூட 'குப்பி நிலயம்' என்ற பெயர் பிடிக்கவில்லை. காலையில் தன் நண்பர் சொன்னபடி வீட்டை விஸ்தரித்துக் கட்ட ஏற்பாடுகள் செய்தார்.

இப்படியே வீட்டை வளர்த்துக்கொண்டே போனார். முதலில் சிறிதாகவும் அழகாயுமிருந்த வீடு மூலைக்கு மூலை வந்தது ஏதோ

ஒரு சத்திரம் போலாயிற்றே யொழிய வேறொன்றும் நடக்க வில்லை. குப்பியைத் தன் வசப்படுத்தப் புதிதாக ஒரு யோசனையும் சாமிநாதையருக்குத் தோன்றவில்லை. முன் போலவே தினமும் அவளைத் தூரத்திலிருந்து பார்வையிட்டுக் கொண்டு பயனில்லாத தன் காதலால் ஏங்கிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் அவள் வேலைக்கு வரவில்லை. சாமிநாதையருக்கு அன்று பொழுதே போக வில்லை: ஆனால் அவர் கவலைப்படவில்லை. "ஏதாவது தலைவலியாக விருக்கும்; நாளைக்கு வருவாள்" என்று நினைத்தார். ஒரு வாரங் கழித்தும் அவள் வாராமலிருக்கவே அவர் மிகவும் விசாரப்படலானார். அவளுக்கென்ன ஆய்விட்டதோ வென்று விசனப்பட்டார். "யாரைக்கேட்டால் அவளைப் பற்றி செய்தி கிடைக்கும்? அவளுடன் வேலை செய்யும் உப்பரவச்சிகளுக்குத் தெரிந்திருக்கலாம்...... ஆனால் நாமெப்படி அவர்களை நேரில் கேட்பது?" என்று தயங்கினார். முடிவில் இந்த விசாரத்தைப் பொறுக்க முடியாமல் மேஸ்திரியைக் கூப்பிட்டு அவள் ஏன் வேலைக்கு வர வில்லை யென்று கேட்டார். அவனுக்கு அதன் காரணம் தெரியவில்லை........."ஐயர்" இதில் எடுத்துக்கொண்ட ஊக்கத்தின் காரணமும் தெரியவில்லை. அவனை விட்டு மற்ற உப்பரவப் பெண்களை விசாரிக்கச் சொன்னார். அவர்களுக்கும் தெரியாதென்றும், ஒரு கூலியாள் நின்று விட்டால் வேலை நின்று விடாதென்றும் அவன் பதில் சொன்னான். இன்னுமொரு வாரம் பொறுத்துப் பார்த்தார்...... அவர் இந்த வாரத்தில் பட்டபாடு கொஞ்சமல்ல. வீடோ அவர் சொன்னபடியெல்லாம் விஸ்தரித்துக்கட்டி முடித்தாய் விட்டது. வாசலில் ஒரு திண்ணை கட்டுவதில் மற்றொரு நாள் கழிந்தது. இதுடன் 'மீன நிலயம்' கட்டி முடிந்து விட்டது.

* * * *

இரவு பத்து மணி யிருக்கலாம். 'மீன நிலய'த்தின் மாடியில் ஒரு நார்க்கட்டிலில் படுத்துக் கொண்டு சாமிநாதையர் யோசனையில் ஆழ்ந்திருந்தார். "என்ன விநோதம்! ஈசன் நம்மைப் பரிசோதிக்கவே இப்படிச் செய்தான் போலும்! ஆனால் நாமொன்றும் கேவலமாகச் செய்து விடவில்லையே" என்று அவர் எண்ணினார். ஆமாம்! துர்மார்க்க வழியில் போவதற்கு அவர் எவ்வளவோ ஆசை காட்டியும், தன் அருமை மனைவி மீனாக்ஷியின் மீது கொண்ட அன்பிற்கு மாறாக தான் ஒன்றும் செய்யவில்லை. மேலும், இதெல்லாம் நடந்திராவிட்டால் 'மீன நிலயம்' தன் மனைவியினிடத்தில் தனக்குள்ள வாஞ்சைக்கும் போதுமான குறிப்பாயில்லாமல் ஒரு சிறு குச்சிலாக விருந்திருக்கும். சாமிநாதையரின் முகத்தில் ஒரு புன்னகை தோன்றிற்று. பல நாட்களாக இல்லாதபடி அன்றிரவு அவர் சுகமாகத் தூங்கினார்.

ஸ்வப்ன பார்யை.

(வம்பன் எழுதியது.)

"அடியே! நான் நீ ஆகி விட்டால், என்ன ஆகும், தெரியுமா" என்றான் ஒரு பிரம்மசாரி தான் கனவிற் காணும் மனைவியைப் பார்த்து; "நான் நீ ஆனால், என்ன செய்வேன்' என்று நினைக்கிறாய்? அதிகாலையிலே, நீ விழிக்கு முன்னே எழுந்திருந்து உன்னைத் துயிலெழப் பாடுவேன்; பிறகு, நாம் பள்ளியெழுச்சிபாடி ஈசனைத் துதிக்கும் போது நம் இருவர் இருதயமும் விண்ணகத்தை நாடிப் பறந்து எழும்; நீ கை கால் சுத்தி செய்து கொண்டு சந்திசெபங்களை முடித்ததும், உனக்கு இனிய உணவு அளித்து இன்சொல்லால் உன்னை உபசரிப்பேன். காலைப் பொழுதிலே உன் வேலையிலே நீ ஆழ்ந்திருக்கையிலே, உனக்கு உகப்பான உணவுகளைச் சித்தப் படுத்துவேன்; நீ வேலைமேற் சென்றால், உன் வரவை எதிர் பார்த்தும், உன்னை வருத்தும் சிறு தொல்லைகளை யெல்லாம் எப்படி நீக்குவது என்று சிந்தித்தும் பொழுது போக்குவேன்; நீ வீடு திரும்பியதும் வீட்டில் எல்லாம் ஒழுங்காயிருப்பதைக் கண்டு மகிழுமாறு செய்வேன்; உனக்குக் கையாளாக இருந்து உன் சங்கடங்களை யெல்லாம் தீர்த்து வைப்பேன்; வெளிவேலை முடிந்து நீ வீட்டிற்குத் திரும்புவாய்; 'கிளப்'பிற்குப் போகமாட்டாயே, நான் வீட்டிலே காத்திருக்கையில். நாம் இருவரும் உலாவப்போவோம்; அல்லாவிடின், பாட்டுக் கச்சேரி, நாடகம், 'டாக்கி' — ஏதாவது நன்றாக இருந்தால் அங்கே போவோம்; திரும்பி வந்து, உண்டு இனிது உறங்குவோம். இப்படி யெல்லாம் நிகழும், நீ நானாகி நானும் நீ யானால்" என்றான் பிரம்மசாரி.

அது கேட்டு, அவனுடைய ஸ்வப்ன பார்யை சொல்லுவாள்:—

"நான் நானாகவே இருந்தால் என்னமாயிருக்கும், தெரியுமா? உஷக்காலத்திலேயே என் படுக்கையை விட்டு எழுந்து உன்னைத் தழுவி முத்தமிடுவேன். நீ மெல்லக் கண் திறந்து பார்க்கும் அளவிலே உன் காதலை முழுவதும் கவர்ந்து கொள்வேன். சிற்சில சமயங்களில் உன்னைக் கோபமூட்டி இதழ் துடிப்பதைக் கண்டு மகிழுவேன். நீ கோபங் கொள்ளாவிடில் நான் மனம் வருந்துவேன்; அடிக்கடி நம்மிடையே சச்சரவுகள் நிகழும்; அவை யெல்லாம் அழுகையிலே ஆரம்பித்து முத்த மிடுவதிலே முடியும். "இப்பொழுதன்றோ அறிந்தேன், கடவுள் ஏன் சச்சரவுகளையும் துக்கங்களையும் படைத்தார் என்று. இவற்றைக் கொண்டன்றோ அவர் நமக்கு அளித்துள்ள இன்பங்களை முழுதும் அனுபவிக்கிறோம்" என்று சொல்லுவாய் நீ; 'நீ போதும் எனக்கு; வேறு எதையும் ஒரு போதும் நினைக்கமாட்டேன்' என்றாயே, இப்பொழுது கடவுளைப் பற்றிப் பேசுகிறாயே என்று நான் சிணுங்குவேன். நீ கற்பனவற்றை யெல்லாம் எனக்கும் கற்றுக்கொடுத்து இருவருமாக இன்புற வேண்டுமென்று முயலுவாய் நீ; நானோ உன் குரலின் இனிமையிலே மெய் மறந்து நீ சொல்லிக் கொடுப்பதைக் கவனியாமல் இருப்பேன். அப்படியாவது நீ எப்பொழுதும் எனக்குச் சொல்லிக்கொடுத்த வண்ணமாயிருந்தால், உன் குரலைக் கேட்டுக் கொண்டேயிருக்கலாமே என்று தோன்றும்.

நீ வேலையாய் வெளியேபோய் விட்டால், எனது துன்பத்தை மறப்பதற்காக, ஏதாவது பாடிக்கொண்டிருப்பேன். நீ திரும்பி வந்ததும், 'நான் இல்லாத போதெல்லாம் பாடுகிறாய்; நான் வந்ததும் சட்டென்று நிறுத்தி விடுகிகிறாய். நான் இருந்தால் பாடக் கூடாதா?' என்று கோபிப்பாய். எனக்கோ இன்பம் தலைக்கேறி விடும். என் குரல் சிதிலமாகும். "என்ன கேள்வி இது? நான் என்ன தாசியா?" என்று கூறிவிட்டு உன் அழகிலே சொக்கிக் கிடப்பேன்.

முன்னிலாவிலே நாம் இருவரும் பொருளிலாப் பேச்சுக்கள் பேசி இன்புறுவதைக் காணும் சந்திரன் மூவேழு மனைவிகளையும் முற்ற மறந்து, தன் முகத்தை மேகத்திடையே மறைத்துக் கொள்வான். கொடிபோல் நுடங்கும் என் சஞ்சலத் தன்மையானது உன் புத்திக்கு எட்டாததாய், நிலையின்மைக்கு ஓர் உதாரணமாகவே உனக்குத் தோன்றும். மையிருட்டிலே வெளியே சோவென்று மழை பெய்யும்போது, உன்னை நோக்கி, உன் கண்

களில் ஜ்வலிக்கும் காதலை நோக்கி, உன்னருகே மெல்ல அமருவேன். அப்பொழுது நீ ஒரு ஞானியாய் விடுவாய். "மானுட வர்க்கத்தினிடம் அன்பு கொள்வதைக் கடவுள் கற்றுக் கொண்டது பெண்களிடமிருந்தே என்று உறுதியாய்ச் சொல்லுவேன்; பெண்ணின் செயலைப் போலவே ஈசன் செயலும் புத்திக்கு எட்டாததாய் நிலையற்றதாகத் தோன்றுகிறது; ஆனாலும் அவளது இதயம் போலவே கடவுளின் இதயமும் அன்பால் நிரம்பி யிருக்கிறது" என்றெல்லாம் நீ வேதாந்தம் பேசுவாய்; நானும் உள்ளன்பின் திறத்தை நினைத்து வியந்திருப்பேன். இவை யெல்லாமும் பிறிதும் நிகழும், நான் நானாகவே விளங்கினால்.

அவல் நாடகம்.

பிரும்மஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.,

[குறிப்பு:—இந்நாடகம் இவ்வாசிரியராலேயே வடமொழியில் இயற்றப்பட்ட 'கௌண்டின்ய பிரஹஸன'த்தின் மொழி பெயர்ப்பு. இதைப்பற்றிய எல்லாவித காப்பிரைட் பாத்யங்களும் இந்நாடகாசிரியர்க்கே உரியன.]

(ஜிம்மளையும் க்ருத்ரநாஸனும் பிரவேசம்.)

க்ருத்ரநாஸன்:—ப்ரியே! ஜிம்மளே! இன்றைக்கு த்வாதசி என்று அதிகாலையிலேயே போஜனம் செய்து விட்டபடியால் எனக்கு ஏதாவது கொஞ்சம் சிற்றுண்டி செய்து கொடுத்தால் தேவலை.

ஜிம்மளை:—நாதா! நானும் அதைப் பற்றித்தான் யோஜித்துக் கொண்டிருச்கிறேன். ஆகையால் சொல்லுங்கள். தோசை வார்த்தால் தேவலையா? அல்லது குழக்கட்டை பண்ணலாமா? உளுத்த வடை தட்டலாமா? ஸத்துமா போதுமா? அல்லது சுகியன் பண்ணட்டுமா? இல்லாவிட்டால் லாடு உண்டை பிடிக்கட்டுமா முறுக்கு சுற்றலாமா? போளி தட்டட்டுமா? பேணி பிழியட்டுமா? சர்க்கரைப் பொங்கல் பொங்கட்டுமா? அல்லது இட்லி வார்க்கட்டுமா? உங்களுக்குப் பிடித்த சிற்றுண்டி என்னவென்று சொல்லுங்கள். அப்படியே செய்கிறேன்.

க்ரு:—பிரியே! பக்ஷணவகைகளை யோஜித்துப் பார்த்தால் என்னைப்போல் ருசி கண்டு சாப்பிடக் கூடியவன் நிலைமையானது பலபெண்டாட்டிக்காரனின் நிலைமையைப்போல் இருக்கிறது. எதை விடுகிறது எதை எடுத்துக் கொள்வது என்று பெரிய சங்கடத்தில் வந்து முடிகிறது. இருந்தாலும் ஒரு விதமாய்ப் பிரித்துச் சொல்கிறேன், கேள். அண்டிக் கிடக்கும் போலி நேசனைப்போல் உளுந்துவடை ஆரம்பத்தில் ருசியாயிருந்தாலும் முடிவில் ஜீரணமாகாமல் வெகு தொல்லைப் படுத்திவிடும். சத்துமா கிடக்கிறது! சத்துமா! அதிகம் பழகினபேரிடத்தில் அவா குறைந்து விடுகிறதல்லவா!

தித்திப்புப் பண்டங்கள் உயர்ந்தவைகள் தான்; ஆனால் என்றும் ஆதரவுடன் பரிந்து பேசுபவரின் இனிய மொழிகளைப்போல் ஜல்லியில் திகட்டிப்போய் விடுகின்றன.

முறுக்கா? சி! சி! அதை வளைத்துக்கொண்டு யார் கடிக்கிறது? அப்படிக் கடித்தாலும் அதில் என்ன ருசி யிருக்கிறது. அறிவினர்களின் காவ்யத்தைப்போல் அது சுற்றிச் சுற்றித் திருகுபோட்டுக் கொண்டிருப்பது ஒன்றுதான் மிச்சம். பிரியே! உனக்கு ஏன் தெரியவில்லை. துவாரகா நாதனை ஸாக்ஷாத் அந்த கிருஷ்ணபகவானுக்கு எதில் நிரம்பப் பிரியமோ அதில் எனக்கும் நிரம்பப் பிரியமல்லவா?

ஜிம் :—ஏன் நன்ருய்த் தெரியும். தெரியாமலென்ன அவல் தானே. அவல் என்ருல்தான் நீங்கள் உயிரை விட்டுவிடுவீர்களே?

க்ரு :—அப்படிச்சொல்லு என் கண்மணி! (சற்று சமீபத்தில் நகர்ந்து கொண்டு) ஆகையால் சொல்லுகிறேன் கேள்.

நெய்யிலே சற்றுப் புரட்டித்
தேங்காயும் துருவிப் போட்டு
ஏலமும் பொடித்துத் தூவி
நல்லதோர் திராக்ஷை சேர்த்து
துள்ளிவரும் மான் விழியாளே!
துரிதமாய்ச் செய்து கொடுப்பாய்
உன் கையால் வெல்ல அவலை.
கண்மணி கார்த்திருப்பேன்!

(என்று கொஞ்சிக்குலாவ நினைக்கிருன்.)

ஜிம் :—(முகத்தைத் திருப்பிக் கொண்டு கையால் தடுத்துவிட்டு) அதிருக்கட்டும். இன்றையதினம் வேலைக்காரிகூட வரவில்லை, கடைக்குப்போய் ஏலம் திராக்ஷை இரண்டும் வாங்கி வரவேண்டுமே, யார் போவார்கள்?

க்ரு :—அடி! நான் வேறு என்ன புரட்டுகிறேன், இதோ கடைக்குப் புறப்பட்டு விட்டேன். தவிரவும், இந்தக் காரியத்தை மூன்ருவது மனுஷ்யர்களிடத்தில் ஒப்புவிப்பது தகாது. நாமே ரகசியமாக நடத்திவிட வேண்டும், ஏனென்ருல் நாம் ஆரம்பித்திருக்கிற காரியத்தின் ஜாடைகூட அந்த பிரும்மசாரி தடிப்பயல் கௌண்டின்யன், ஊரார் வீட்டுச்சோற்றுக்கு லோலோவென்று அலைபவன்—அவனுக்குத்தெரிந்து விடும்படி நாம் விட்டுவிடக்கூடாது. நாம் கடைக்குப் போவதையும் வருவதையும் பார்த்துவிட்டு ஓகோ! ஏதோ இவர்கள் வீட்டில் விசேஷமான பக்ஷணம் செய்கிருர்கள் போலிருக்கிறது, என்று அவன் ஊகித்துவிடுவானே யானல் இங்கு வாசலிலே வந்து பழி கிடந்து விடுவான் மானங்கெட்டவன். பிற்பாடு, வாழைப்பழக்கடைக்குள் கழுத்தை நீட்டிக்கொண்ட கோவில் காளையைப் பிடித்துத் தள்ளினுலும் தள்ளலாம் இவனை வெளிப்படுத்துவது அசாத்தியமாய்விடும். அவனுக்கு கொட்டித் தொலைத்து விடுவோமென்ருலோ, அவன் வயிற்றுக்கு யாரால் கொட்ட முடியும்? சமுத்திரத்தில் இருக்கும் வடவாக்னியை அவன் வயிற்றில் வைத்துக் கொண்டிருக்கிருன். எவ்வளவு போட்டாலும் போதும் என்று சொல்லுவது கிடையாது. பாத்திரத்தில் ஒரு அணுவளவு மிகுதியானுலும் கூட அவன் சகிப்பதில்லை. இட்டவன் பாடு திண்டாட்டம்தான். நான் என்ன அதிதிகளுக்கு போஜனமிடாத பாபியா? அல்லவே அல்ல. பெரியோர்களே சொல்லி யிருக்கிருர்கள், பொழுது விடிந்தால் பிறர் வீட்டுப் பிண்டத்திற்கு வேறு யாதொரு ஜோலியும் இல்லாதவனுய் லோல்பட்டு அலையும் சோம்பல் சாவடியாகத் திரிபவன், பிராம்மணனுக இருந்தால் கூடக் கவனியாமல் அவனுக்கு அன்னமிடவும் தங்குமிடமும் கொடுக்கவும் மறுத்து விடுவதில் யாதொரு தோஷமும் இல்லை, என்று. ஆதலால் சாமார்த்தியமாக ஏதோ வயல் வெளிகளைச்சுற்றி வருபவன்போல் வந்து வழியில் நடராஜ செட்டி கடையில் வாங்க வேண்டியதை வாங்கி யெடுத்துக் கொண்டு சீக்கிரம் திரும்பி வந்து விடுகிறேன். நீயும் அதுவரையில் ஜாக்கிரதையாய் இரு.

(புறப்படுகிருன்)

ஜிம் :—இப்பொதே கதவைத் தாளிட்டு விட்டேன்.

(இருவரும் போகிருர்கள்)

முதலாவது களம் முற்றிற்று.

இரண்டாவது களம்.

(கௌண்டின்யன் பிரவேசம்)

கௌண்டின்யன் :—ஆஹா! பரான்ன போஜனமென்பது மனிதனுக்கு இப்புவியிலே அனுபவிக்கத்தக்க ஸ்வர்க்க போகமே தவிர வேறில்லை. அதிதிகளைப் பூஜிப்பதையே உயர்ந்த தர்மமாகக் கொண்டாடி யிருக்கும் ஸ்மிருதி புராண

கர்த்தாக்கள் என்போன்றவர்களுக்கு காமதேனு, சிந்தாமணி, பாரிஜாதம் இவைகளைச் சுளுவில் கைவசப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். பாருங்கள் சாமான்கள் வாங்கிப்போட வேண்டுமென்ற கவலை எனக்குண்டா? சமையல் செய்ய வேண்டியதற்காக எள்ளளவேனும் பரபரப்பை அடைய வேண்டியதுண்டா? தேசகாலங்களை மட்டும் அனுசரித்து, இலை போட்டவுடன் போய் உட்கார வேண்டியது என் ஜோலி. இவ்விதம் பரான்ன போஜனத்தையே விரதமாக வைத்துக் கொள்வதைப் பற்றி எவனுகிலும் சிறிதும் அவதூறு கூறுவதற்கு இடமில்லை. ஏனெனில் இந்த விரதமுடையவர்கள் அர்த்தத்தைச் சம்பாதித்துச் சேர்ப்பதில் லோபத்தை அடைவதில்லை. நாள்தோறும் செல்வம் பெருகிச் செழித்து வரும் கிரஹஸ்தர்களிடத்தில் அஸூயைப் படுவதில்லை. தன்னுடையதென்பதும் பிறருடையதென்பதும் கிடையாது. ஆதித்யம் ஒன்றில் மட்டும்தான் அபேக்ஷை; ஆனால் தன் வீட்டில் ஒரு பொழுதுகூட அடுப்பை மூட்டுவதில்லை என்ற ஊர்ஜிதம் கொண்ட இந்த பரான்ன போஜன விரதமானது சாதரணமாக இந்திரிய நிக்ரஹம் இல்லாத எவனும் அனுஷ்டிக்கத் தக்கதல்ல. ஏனெனில் கிடைத்தால் இரண்டு மூன்று வேளைச் சாப்பாட்டை ஒரே மூச்சிலும் இறுக்கி விடுவோம்; மற்றுமொரு சமயம் தெய்வத்தின் மனமிரங்காமல் போய் விட்டாலும் இரண்டு மூன்று தினங்கள் உபவாசமிருந்து விடுவதிலும் ஒன்றும் சிரமமில்லை. மேலும் இந்த தர்மமானது எனக்குப் பரம்பரையாக வந்துள்ளது. க்ஷேமத்தை கோருபவன் குல தர்மத்தை விட்டுவிடலாகாதல்லவா? என் சிறிய தகப்பனர் உளுத்தம் வடை உமாமஹேச்வரதீக்ஷிதரைத் தெரிந்து கொள்ளாதவர் யார்? நூறு உளுத்தவடைகளை ஒரே மூச்சில் தின்று விடுவதாய்ப் போட்டியில் இறங்கி 99 வடைகளையும் தின்று, விழிகள் பிதுங்கத் தொண்டை அடைக்க, பிராணன் வெளிக் கிளம்பச் சித்தமாயிருக்கும் தருணத்தில் கூட மிகுதியான ஒரு வடையை அவர் எடுத்து உட்கொள்ள அவாவுடன் கை நீட்டிய பெருமையை இன்றைக்கும் நினைத்து நினைத்து உருகாத பெரியோர்களும் உண்டா இவ்வுலகில்?............ (கண்களில் நீர் ததும்ப) மஹான்கள் தான் அத்தகைய உக்ரமான விரதங்களை ஏற்றுக் கொள்ள வல்லவர்கள், ஏற்றுக் கொண்ட பிறகும் தன் பிராணனைக்கூட ஒரு பொருட்டாக எண்ணுமல் விரதத்தையே நிறைவேற்றுபவர்கள். இதன் பெருமையை அறிஞர்கள் அறிவர், அல்பர்கள் இதை யறியாமல் பழிப்பார்களே யானல் அதனல் நமக்கு ஒன்றும் ஹீனமாகி விடாது. ஏனெனில், பிக்ஷையினல் ஜீவிப்பதில் சந்திரசேகரனை அந்த பகவானையும், கொண்டமட்டும் தின்று களிப்பதில் அந்த கணநாதரையும் நாம் உதாரணமாய்க் கொண்டிருக்கிறேமல்லாவா? ஆனல் வெகுவாக ஈகைப்றியாத வயிற்று வலிக்காரர்கள் பரான்ன போஜனத்தையே விரதமாகக் கொண்டவர்களுக்கு மிக்கக் கொடிய......ஜன்மவைரிகள்!

(முன்னேக்கி)

அடா! கிருபணர்களை நினைத்த க்ஷணத்தில், "நான்தான் அவர்களுக்குள் முதன்மையானவன்" என்று தன்னைச் சுட்டிக் காட்டிக் கொள்பவன்போல் என் முன் தோன்றுகிறன் க்ருத்ரநாஸன். ஆம்,...... ஏனிவன் என்னைப் பார்க்கச் சகியாதவன் போல் அப்புறம் திரும்பி வெகு துரிதமாய் நடந்து செல்கிறன்? வேறு என்ன, தெரிந்த விஷயம்தானே. தர்மசீலரென வேஷம் பூண்ட வஞ்சகர்களுக்குக் கபடமற்ற ஸாதுக்களிடம் ஐயமுண்டு. செய்ந்நன்றி மறப்பவர்கள் பேருதவி செய்தவரைத் திரும்பிப் பார்க்கச் சகியார். கடன் பட்டவன் கடன் கொடுத்தவரைக்காண நடுங்குகிறன். ஈயமாட்டாதவர் அல்லும் பகலும் அதிதிகளை வீட்டடியில் கண்டு விட்டால் அரண்டு கொள்வார்.

க்ருத்ரநாஸன் எப்போதும் தீனி தின்பதில் சலிக்காதவன். ஜிம்மளையோ விதம் விதமாய்த் தின்பண்டங்களை செய்து கொடுப்பதில் வல்லமை மிகுந்தவள். ஆஹா! இன்று என்ன ஏற்பாடோ தெரியவில்லையே. மோதகமோ, ஸொஜ்ஜியோ, லாடுவோ, போளியோ, அல்லது வடை முறுக்கு முதலிய உப்புப் பண்டங்களோ! நல்லது இவன் நடராஜ செட்டியின் கடை மேடையினின்று கீழிறங்கி இவ்வழியே எதிர்ப்பட்டவன், ஏதோ தடைப்பட்டவன்போல் மறுபடி அப்புறம் திரும்பி வயல்வெளிகளை நோக்கிச் செல்கிறன். ஆனல் வேடனுக்கும் என்னிடத்தில் நல்ல வேட்டையின் அறிகுறிகள் சிக்கிக் கொண்டன. இன்றைக்கு ஜிம்மளை செய்ய ஆரம்பித்திருக்கும் பக்ஷணம் ஸாதாரணமல்ல. நல்லது

அதிதிகளுக்கு கூற்ருய் விளங்கும் இவன் வருவதற்கு முன்னதாகவே இவன் வீட்டு வாயில் திண்ணையில் போய்த் தயாராக விருக்கிறேன்.

(என்று செல்கிருன்.)

மூன்ரும் களம்

கௌண் :—இதோ க்ருத்ரநாஸன் வீடு. அடே! கதவு நன்ருய் அடைக்கப்பட்டிருக்கிறது. அதிதிகளுக்குப் பயந்தல்லவா கிருபணர்கள் வாயிற் கதவு ஜன்னல் கதவுகளைமூடி வைக்கிருர்கள். நல்லதிருக்கட்டும். திண்ணையில் உட்கார்ந்து கொண்டு வீட்டு யஜமான் திரும்பி வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆஹா! ஜிம்மளை கையால் தேய்த்துச் செப்பனிட்ட இத்திண்ணை எவ்வளவு வழ வழப்பாயும் எவ்வளவு குளிர்ச்சியாகவும் இருக்கிறது. இந்த உக்ரமான வெயில் ஸமயத்தில் இத்தகைய குளிர்ந்த இடத்தில் என் போன்றவர்களுக்கு வெகு சுளுவில் தூக்க மல்லவா வந்துவிடும். தூங்கிஞல் வந்து விட்டது மோசம். தூக்கத்தை எப்படிப் போக்கடித்துக் கொள்வது. நல்லது கொஞ்சம் பாடுகிறேன்.

சிந்தை யாது மில்லை
நமக்குச் சிந்தையாது மில்லை
அதிதி யென்று வந்து
அந்நியர் போஜனம்
ப்ரதிதினமும் நமக்கு
ஏது உத்தியோகம்
பெற்றிடு மென்றே
நினையாமலே போகம்
ஆறுவிதமான
அமுதுகள் செய்து
அழைத்து உபசரிக்கும்
அன்பர்கள் புகழும்,

(அறைக்குள் பாகம் செய்து கொண்டு, ஜிம்மளை பிரவேசம்)

ஜிம் :—பாகம் அநேகமாய் முடிந்துவிட்டது. ஏலக்காய் திராக்ஷைப் பழங்கள் வாங்கிக் கொண்டு இன்னும் என் நாதர் வரவில்லை. ஆஹா! இந்த வெல்ல அவலை அமிர்தம் உண்ணும் தேவர்களல்லவோ உண்ணவேணும். ஏதோ பாட்டுக்குரல் கேட்கிறதே! ஓகோ! தெரிந்தது. அவனல்லவா வீட்டுத்திண்ணையில் சாய்ந்து கொண்டு பசியினல் வருந்திய கடைத் தெருக்காளை போல் குர் குர் என்று சப்தம் போடுகிருன். நல்லவேளை கொல்லைப் புறமாக நாதன் பிரவேசிக்கிருர்.

க்ரு :—(அப்படியே பிரவேசித்து) ப்ரியே! இந்தா பிடி இதை, அந்த வயிற்றைக் கட்டிக் கொண்டு அழும் பிசாசு, கிருஹஸ்தர்களைக் குறுக்கே நின்று வழிமறைக்கும் பிரும்மராக்ஷஸன், திண்ணையில் ஸௌக்கியமாகச் சாய்ந்து கொண்டு பாடிக்கொண்டிருக்கிருன். இதை வெகு தூரத்திலேயே அறிந்து கொண்டு கொல்லைப் புறமாகவே உள்ளே நுழைந்து விட்டேன். சீக்கிரமாக அவலைத் தயார்செய். சிற்றுண்டி அருந்திய பின்பே வாயிற் கதவைத் திறப்பேன்.

ஜிம் : ஏற்கனவே எல்லாம் தயாராகி விட்டது. ஏலமும் திராக்ஷையும் கலக்க வேண்டியதுதான் பாக்கி (என்று ஏலம் திராக்ஷைகளை கலக்குகிருள்) நாதா இதோ முடிந்துவிட்டது. ஆனல் நிரம்பக் கொதிக்கிறது. பொறுக்கும்படி சூடு ஆறுகிறவரையில் கொஞ்சம் பொறுங்கள்.

கௌண் :—ஆஹா! ஹா!! ஏலக்காய் வாசனை வீசுகிறது. ஏதோ தித்திப்பு பக்ஷணம் தான் போலிருக்கிறது. அதற்கு வேறு யாரையும் கேட்க வேண்டாம். வெகு நாள் ருசி கண்டு பழகியதும் தற்சமயம் ஊற விடுகிறதுமான என் நாக்கு ஒன்றே அதற்குச் சாக்ஷி......ஏது உள்ளே பேச்சுக் குரல் கூடக் கேட்கிறதே!

உஹூம்! இந்த கிழக்குள்ளநரி என்னை மோசம் செய்து விட்டுப் பின்புறமாக வீட்டிற்குள் நுழைந்து விட்டதுபோலும்! கௌண்டின்யனையும் இவ்விதம் ஏமாற்றி விட முடியுமா? பரமேச்வரனுக்கு உரிய தான யக்ஞபாகத்தை எப்படியோ, அவ்விதமே நித்திய பிக்ஷுவான எனக்குரிய உபாயனபாகத்தை இல்லை யென்று மறுத்து விட எவனல் முடியும்? ஆகையால் வீட்டின் பின்புறம் சென்று பார்க்கிறேன்.

(என்று வீட்டின் பின்புறம் சென்று)

நல்லவேளை என்னிடம் பிரஸன்னமாயிருக்கும் தைவத்தின் ஹிருதயம் போல் என்னுடைய காரியத்துக்குரிய மார்க்கமானது

திறந்தவண்ணமே யிருக்கிறது. உள்ளே பிரவேசிக்கிறேன். (பிரவேசித்து) சிலவிடங்களில் வாசற்படியைக் கடந்தும், சில விடங்களில் சுவரை ஏறிக் குதித்தும், சில விடங்களில் கல்தாக்களை லக்ஷியம் செய்யாமலும், சில விடங்களில் கடுஞ் சொற்களைப் பாராட்டாமலும், துணிந்து நின்றுதான் பரான்னத்தில் பிரியமுள்ளவர்கள் இருபணர்களின் இடையூறுகளைத்தள்ளி அடித்துவிட்டுத் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டியது.

க்ரு :—ஆஹ! ஹா!! கொல்லைக்கதவை நான் தாளிடவில்லை. என்ன முட்டாள்தனம்.

ஜிம் :—இதோ ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன். சற்றுப்பொறுங்கள் (என்று நடக்கிறாள்)

க்ரு :—எவ்வளவு நாழியாகிறது இன்னமும் ஆறவில்லையே. இப்பொழுதும் ஓரேபுகையாய்ப் புகைந்துக்கொண்டே யிருக்கிறது.

ஜிம் :—(பார்த்து) ஐயோ அநியாயம்! கொள்ளைபோய்விட்டதே! (திரும்பி ஓடிவந்து) அந்த மானங்கெட்ட கட்டையிலே போகிறவன் திருடனைப்போல் கொல்லைப்புறமாக வந்துவிட்டானே. நாதா நான் என்னசெய்வேன்.

(என்று பதறுகிறாள்.)

க்ரு :—வந்து விட்டானா அந்தப் படு பாவி? இதோ வெண்கல உருளியில் ஒரு அவல் திவலை கூட மிச்சம் வைக்காமல் தின்று விடுகிறேன், பார்! (என்று பரப்புடன் விரல்களை கொண்டு எடுத்து வாயில் போட்டுக் கொண்டு சூடு பொறுக்காமல், "ஹா ஹா" என்று பரிதவிக்கிறான்.)

ஜிம் :—ஹா ; நாதா ! என்ன செய்து விட்டீர்கள்! ஐயோ ! என்னுயிருக்குயிரான பர்த்தாவே! நாய்கள் திறந்தவிடம் தாமாகவே நுழைந்து அன்னியர் பிண்டத்திற்கு ஆசை கொண்டு சீர் குலைந்து நிற்கும் கேடு கெட்ட மானிடரால் தங்களுக்கு எத்தகைய விபத்து நேர்ந்து விட்டது! விழிகள் பிதுங்குகின்றனவே ! கன்னங்களிரண்டும் கிழிவது போலாகிவிட்டனவே ! ஐயோ என் அருமைக் காதலரே ! இந்த கதியை அடைந்து விட்டீர்களே! (என்று புலம்பியவண்ணமாய் முகத்தில் ஊதியும் முந்தானையால் அணைந்து மடியில் சாய்த்துக் கொண்டும் உபசரிக்கிறாள்.)

கௌண் :—(சமீபத்தில் வந்து) அம்மணி, இது என்ன இது! என்ன தீடீரென்று இப்படி நேர்ந்து விட்டது?

ஜிம் :—ஹா ! என் பிராண நாதா ! ஏன் எனக்குப் பதிலளிக்க மாட்டேன் என்கிறீர்கள்? தங்களைப் பறிகொடுத்து விட்டு நான் ஏகாங்கியாக இப்புவியில் எப்படிப் பிராணனை வைத்திருப்பேன்.

கௌண் :—அம்மணி ! பதறாதேயுங்கள். இதற்கு ஏதாவது பரிஹாரத்தைத் தேடுவோம். என்ன நடந்து விட்டதெனச் சற்றுத் தெரிவியுங்கள். போதும். அழவேண்டாம்.

ஜிம் :—ஓய் பிராமணச்ரேஷ்டரே! இவ்விதம் நான் நிர்கதியாகி விட்டேனே! (என்று கோவென்று அழுகிறாள்.)

கௌண் :—அம்மணி உங்களுக்குக் கதி ஏற்பட்டு விடும். சோகப்படவேண்டாம். இந்த கிரஹஸ்தர் தங்களுக்கு அருமை நாயகனாயிருப்பதுடன், என் போன்றவர்களுக்கு அவருடைய உதாரகுணங்களாலும் அதிதிகளைப் பூஜைசெய்யும் பெருந்தன்மையாலும் நிரம்ப ஆப்தமானவர். ஆகையால் மனதில் சஞ்சலமின்றித் தெளிவாய்க் கூறுங்கள். இப்போது இவருக்கு என்ன வியாதி? ஏன் தீடீரென்று இவ்வளவு அதிகமாகி விட்டது? சொல்லுங்கள். சிகிச்சையை உடனே தேடுவோம்.

ஜிம் :—மஹா பிராம்மணரே! பலநாட்களாகச் என் பிராணேச்வரன் கன்னங்களில் பிளவை புறப்பட்டுச் சகிக்க முடியாத வேதனைகளை அநுபவித்து வருகிறார் என்பது உமக்குத் தெரியாதா! ஏன் அறியாதவர் போல் இப்படிப் பாசாங்கு செய்கிறீர்? அதைச் சாக்கிட்டு அடிக்கும் ஜ்வரமானது பெருங்காட்டில் மண்டிய காட்டுத்தீயைப் போல் வீசுகிறதே! இன்றே தருமராஜன் என் மாங்கல்யத்தைப்பறிக்க நினைத்து விட்டான் போலும். இனிமேல் இவ்வுலகத்தில் யார்தான் எனக்கு பந்துக்கள் இருக்கிறார்கள்? (என்று சகிக்க முடியாதபடி அழுகிறாள்.)

கௌண் :—அம்மணி! நித்யபிரும்மசாரியான என் வாக்கினால் சொல்கிறேன். கேளுங்கள். உங்களுக்கு இவ்வுலகில் பந்துக்களுக்குக் குறைவு ஏற்படாது. ஆனால் பலதினங்களாகவே தங்கள் அகமுடையான் வியாதி உடைய

வரென்று சொல்கிறீர்களே. ஒரு முகூர்த்தத்திற்கு முன்னல் இவர் திடகாத்திரராய் வெளியில் கடைவீதி வழியாய்ச் சஞ்சரித்ததை நான் பார்த்தேன். அதெப்படி?

ஜிம்:—நிஜந்தான் மஹா பிராம்மணரே! நிஜந்தான். ஸஹாயத்திற்கு வேறு புருஷர்கள் இல்லாததினல் தாஞகவே பிளவைக்கு வைத்யம் செய்துகொள்ளும் பொருட்டு முத்துராமலிங்க பண்டிதர் வீட்டிற்குப் போக நினைத்து வெளிக்கிளம்பினர். ஆனல் சற்று நேரத்திற்கெல்லாம் வேதனை அதிகமாகி "ஹா" வென்று அலறிக் கொண்டு திரும்பிவந்து திடீரென்று கீழே சாய்ந்தவர் இக்கதியில் இருக்கிருர். ஆகையால் என் பேரில் தயவுகூர்ந்து வைத்யரை அழைத்து வாருங்கள், உங்களுக்கு புண்யமுண்டு.

கௌண்:—அம்மணி அவசியம் அழைத்து வருகிறேன். பயப்படாதேயுங்கள். ஆனல் ஆரம்பத்தில் நிரம்ப கடுமைபோல் தோன்றும் சிலவியாதிகள் உற்று நோக்குங்கால் பிரமை யைத்தவிர வேறில்லையென்று ருசுவாவது முண்டு. ஆகையால் முந்தானையை எடுங்கள் வியாதியின் சொரூபத்தை நான் நிசானித்துப் பார்க்கிறேன். நானும் வைத்யம் தெரியாதவனல்ல.

ஜிம்:—ஐய்யய்யோ! அனுவச்யமாக தாமதம் செய்கிறீர்களே! அங்கங்கள் நடுக்குற்று நிமிஷத்திற்கு நிமிஷம் இவர் உதறிக் கொள்வது உங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லையா? தொண்டையில் "கர் கர்" என்ற சப்தம் கேட்க வில்லையா? ஆ என் பிராண நாயகனே! இவ்விதம் துர்பாக்யவதியான என்னை விட்டு விட்டுப் போகிறீர்களா? (என்று இறுகத் தழுவிக் கொண்டு அழுகிருள்) நீங்கள் க்ஷேமமாயிருந்தால் உங்களைப் பற்பல யாசகர்கள் வந்து மொய்த்துக் கொள்வார்கள். உங்களுடைய அத்யாவஸ்தையில் வைத்தியரைக் கூப்பிட்டுக்கொண்டு வருவதற்குக்கூட மனுஷ்யாள் கிடையாது. இந்த உலகம் கருணையற்றது.

கௌண்:—அம்மாமி, தாங்கள் சொன்னது தவறல்ல. உண்மையில் இவ்வுலகம் கருணையற்றதே. பிணத்தைக் கழுகு தன் மூக்கால் கீறித் தின்பதைப்போல் பிறரை வருத்திச் சுயசுலம் பாராட்டும். ஆனல் தன் பிராணனை விட்டாலும் விடும், ஒரு திவலை பிறருக்குக் கொடுக்க மனமொண்ணுது.

ஜிம்:—ஓய் சொற் களஞ்சியமே! ஏன் வீணுக வம்புப் பேச்சுகளை வளர்க்கிறீர். இவ்வண்ணம் பிரியமுடியாமல் துடிக்கும் என் நாதனின் பிராணன்களின் மேல் ஆணையிட்டு உம்மைக் கேட்கிறேன். நீர் வைத்தியரை அழைத்துவர வெளியே போகிறீரா—இல்லையா!

கௌண்:—அம்மணி! என்னிடம் உங்களுக்கு வீண் மனஸ்தாபம் வேண்டாம். இதோ! ஒரு க்ஷணத்தில் வைத்தியரை அழைத்து வந்து விடுகிறேன் (தனக்குள்) ஆஹா! என்ன இந்தத் தேவடியாள் மகளின் சாமார்த்தியம். (என்று நடந்து சென்று வாயிற் கதவைத் திறந்து வைத்துப் பின் ரேழியில் ஒரு குதிரின் இடைவெளியில் மறைகிருன்.) ஆஹா பதார்த்தத்தின் வாசனையைக் கண்டு கொண்ட கௌண்டின்யனைக் கூட ஒருவர் வஞ்சித்து விட முடியுமா? இந்தக் கிருபண தம்பதிகளுக்கருகாமையில் உத்தரியத்தால் மூடப்பட்ட வெண்கல உருளியைக் கழுகு போன்ற கூறிய திருஷ்டியால் பார்த்து விட்டேன். இருக்கட்டும். சரியான சமயத்தில் வெளிப்படுகிறேன். (என்று கவனத்துடன் பதுங்கி நிற்கிருன்.)

ஜிம்:—(முந்தானையை எடுத்து விட்டுச் சிரித்துக் கொண்டு) நாதா!

க்ரு: தொலைந்தானு அந்தப் பாபி? (என்று கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்திருக்கிருன்.)

ஜிம்: ஆம்: தொலைந்தான். இவ்வளவு சிரமப்பட்டு அவனைத் துரத்த வேண்டியிருந்தது. புருஷர்கள் பலாத்காரத்தினல் எதை ஸாதிக்கிருர்களோ அதையே ஸ்திரீகள் வெகு லகுவில் ஸாகஸத்தினல் ஸாதித்து விடுவார்கள் அல்லவா?

க்ரு: அடி மாயக்களஞ்சியமே: உன் ஸாகஸத்தின் விமர்சையையும் பார்த்தேன்! அந்த பிரும்மசாரி சாக்ஷியாக பட்டப் பகலிலே வலுவில் வந்திழுத்து என்னை நீ ஆலிங்கனம் செய்து கொண்ட பெரும் பாக்கியத்தையும் அனுபவித்தேன்.

ஜிம்:—அதிருக்கட்டும் போங்கள். நாதா! நான் அழுததும் புலம்பினதும் எப்படியிருந்தது சொல்லுங்கள்.

க்ரு :—சொல்வதென்ன, இவ்விதமான பேரன்பைப் புகட்டும் சுயேச்சையான உன் லீலைகளை அனுபவிப்பதற்கும் நல்ல நாட்களில் கேட்பதற்கரிதான உன் இனிய ஆசை மொழிகளைச் செவியாரப் பருகுவதற்கும்—உண்மையில் சொல்லுகிறேன்—ஆயிரம் தடவை இவ்விதமே பொய்ச் சாவு செத்தாலும் என் மனதிற்குப் போதுமென்று தோன்றுது. அதிருக்கட்டும், என் கண்மணி! வாயில் சூடு பொறுக்காத வேதனையை நான் ஏதோ பெரிய வியாதியின் கொடுமையைப் போல் நடித்துக் காண்பித்தேனே. என் சாமர்த்தியத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

ஜிம் :—(சற்றுக் கவலையுடைய பார்வையுடன்) நாதா! தங்கள் கன்னங்களைப் பொசுக்கிய அந்த அவல் சமயோசிதமாய் நமக்கு உபகரித்ததானாலும் உங்களுக்கு அவ்வளவு வேதனையை உண்டாக்கியதால் அதை நினைக்கவும் எனக்கு நிஜமாகவே உள்ளம் பதறுகிறது. இங்கே வாருங்கள். வாயைத் திறங்கள், பார்க்கிறேன்.

க்ரு :—செ—அசடே, இதென்னடி பிரமாதம்—மோசம் வந்து விட்டது; கிடக்கட்டும். அந்த துஷ்ட பிரும்மசாரி வைத்தியனை அழைத்துக்கொண்டு திரும்பி வரும் முன்னே எனக்கு வெல்லவலை எடுத்துவை. அதுவும் இதற்குள் நன்றாக ஆறி யிருக்கும்.

ஜிம் :—(சரேலென நினைத்துக்கொண்டு) அப்படியானால் முதலில் இரண்டு கதவுகளையும் நன்றாய்த் தாளிட்டு வருகிறேன். (பின் கதவையும் தாளிட்டு பிறகு முன் பக்கத்துக் கதவையும் தாளிட்டு விட்டு ஜடுதியில் திரும்பி க்ருத்ரநாஸன் காதில் ரகஸியமாக இன்னபடி என்று சொல்கிறாள்).

கேள :—இந்தத் தட்டுவாணி முண்டை என்னைக் கண்டு விட்டாளா, என்ன?

க்ரு :—(கோபத்தினால் பற்களை கடகட வென்று கடித்து) ஆ! இந்த பாபி பிரும்ம ராக்ஷஸைப்போல் என்னைச் சுற்றிக் கொண்டு விடமாட்டேனென்கிறான். மூர்த்தீகரித்து வந்த எண்ணிறந்த இடையூறுகள் போல் என்னைச் சுழன்று கொண்டு கழுத்தை அறுக்கும் இந்த பாபியினிடமிருந்து எப்படி நான் விடுதலை யடையப்போகிறேன்?

ஜிம் :—நாதா, கூச்சல் போடாதேயுங்கள். யுக்தியினாலேயே இந்த மானங் கெட்ட தடியனை வெளிப்படுத்த வேண்டும். பலாத்காரம் செய்தால் நிரம்ப தோஷங்கள் ஸம்பவிக்கும். எனக்குத் தோன்றுவதென்ன வென்றால்—

க்ரு :—பிரியே! பலாத்காரமாகப் பிரவேசித்தவன் பலாத்கார மில்லாமல் வெளியே போக மாட்டான். முக்காலத்திலும் இவ்விதமே என்னை ஆயாசப் படுத்திக் கொண்டிருக்கும் இந்த தண்டப்பிண்டந் தின்னும் தடிப்பிரும்மசாரியை கோடைகாலத்தில் பித்தம் பிடித்து அலையும் நாய்களை அடிப்பது போல் உலக்கையால் நையப் புடைத்து இனி இவ்வுலகில் ஆக வேண்டிய காரியமில்லாதபடி செய்து விடுகிறேன். (என்று எழுந்திருக்க யத்தனிக்கிறான்.)

ஜிம் :—முன் கோபக்காரர்கள் பின்பு மிகவும் மனம் கலங்கிப் பச்சாத்தாபப் படும் நிலைமையை அடைந்து விடுகிறார்கள். படபடப்பு வேண்டாம். இந்த ஸந்தர்ப்பத்தில் ஒரு வியாஜத்தை முற்கொண்டே நினைத்தபடி நிறைவேற்றி விடுவோமானால் கிராம ஜனங்கள் நம்மிடம் பழி கூற இடமில்லாமல் செய்து விடலாம்.

க்ரு :—என்ன வியாஜம்?

ஜிம் :—நீங்கள் தான் அவன் பிரும்ம ராக்ஷஸ்ஸைப்போல் அடிக்கடி காலைக்கட்டிக் கழுத்தை அறுக்கிறான் என்று சொன்னீர்களே, அப்படியே அவன் பிரும்மராக்ஷஸாகவே ஆகட்டும்.

க்ரு :—அந்த அரச மரத்திலிருந்ததே?

ஜிம் :—ஆமாம்.

க்ரு :—பிரியே! நீ மிகுந்த புத்திசாலி என்பதில் சந்தேகமே யில்லை. ஆகையால் அந்தப் படி பிரஸ்தாபனையைத் துவக்கு.

கேள :—இவர்கள் இருவரும் என்ன யோசிக்கிறார்கள்? சிற்றுண்டியைச் சாப்பிடவும் ஒரு வித பிரயத்தனத்தையும் காணோம். இது என்ன என்று புரிய வில்லையே!

ஜிம் :—(உயர்ந்த குரலில்.) நாதா! நாதா! அதுதானென்றே சொல்லுகிறீர்கள்! ஐயோ எனக்குப் பயமாயிருக்கிறதே!

கேள:—இந்த மஹா மாயாவி மறுபடி ஏதோ ஜகஜ்ஜாலம் செய்வதற்கு துவக்கியிருக்கிறான். இருக்கட்டும், பார்ப்போம்.

க்ரு :—(உரத்த குரலில்) ப்ரியே, நன்றாக யோசித்துப் பார்த்ததில் எனக்குச் சந்தேகம் தெளிந்து விட்டது. கோவில் வாசலில் அரச மரத்திலிருந்து கொண்டு ஜனங்களை வெகு நாளாகவே பயமுறுத்திக் கொண்டிருந்ததே—

ஜிம் :—ஆமாம்.

க்ரு :அந்த பிரும்மராக்ஷஸ்.

ஜிம் :—ஐய்யய்யோ!

க்ரு :—அதைக் கொஞ்ச நாள் முன்னால் ஊர் ஜனங்கள் ஒன்று சேர்ந்து வெகு சிரமப்பட்டு நிரம்ப திரவியம் செலவிட்டு பற்பல மந்திர வாதிகளைக் கொண்டு க்ரியைகள் நடத்தி அந்த அரசமரத்தை விட்டு ஒட்டி விட வில்லையா?

ஜிம் :—ஆமாம்! ஆமாம்.

க்ரு :—அந்த அரசமரத்தை விட்டுக் கிளம்பிய அந்த பிரும்மராக்ஷஸ் வேறு நிரந்தரமாகக் குடியேற ஒரு இடத்தை அடையாமல் அன்று முதல் இங்கும் அங்கும் அல்லாடிக் கொண்டிருப்பதென்ற ஊர் வதந்தியை நீ கேள்விப்பட வில்லையா? அதிலும் பிரும்ம ராக்ஷஸ ஸுகளுக்கு நடுப்பகலில் கொடூரமான வெய்யில் வேளையில்தான் சஞ்சலமும் உக்கிரமும் அதிகம்.

ஜிம்:—கேள்விப்பட்டேன், அதற்குள் மறந்து விட்டேன். நேற்று தினம், கேளுங்கள். மத்யான வேளைக்கு, அடிப்புண்டக்கிற வெயிலில், அடுத்தகத்து தந்துரையிடம் ஒரு பிரும்மசாரியைப்போல் வந்து பிக்ஷை கொடு என்று கேட்டதாம்.

க்ரு :—நிஜந்தானா! அப்புறம்?

ஜிம் :—நிஜந்தான், இன்று காலே அவள் இந்த அதிசயத்தை என்னிடம் சொன்னாள். அப்படி அது பிக்ஷை கேட்டதும் அவள் பயந்து கொண்டு கூச்சலிடவே அவளுடைய புருஷன்—

க்ரு :—க்ரந்தில மிச்ரர்!

ஜிம் :—அவர் ஓடி வந்தாராம், ஒரு உலக்கையை எடுத்துக் கொண்டு. அவரைக் கண்டதும் பிரும்ம ராக்ஷஸ் ரேழியில் குதிரடியில் ஒளித்துக்கொண்டதாம்.

க்ரு :—அப்பொழுது கூட போகவில்லையா? இது என்ன பெரிய சனியனாக இருக்கும் போலிருக்கிறதே, மேலே......?

கேள :—ஓஹோ! இந்த வியாஜமாக "நீ ஓடிப்போய்விடு, இல்லாவிட்டால் உலக்கையடி நிச்சயம்" என்று எனக்கு இந்த துஷ்ட தம்பதிகள் போதிக்கிறார்கள் போலும்.

ஜிம் :—(தனியே) நாதா, நீங்கள் சொன்னது தான் சரி. இந்த வெட்கங்கெட்ட தடியன் பலாத்காரமில்லாமல் மரியாதையாக வெளியில் போகமாட்டான் போல் தானிருக்கிறது. நல்லதிருக்கட்டும் (மறுபடி உரத்த குரலில்) பின்பு தந்துரையின் அகமுடையான் உலக்கையைத் தூக்கிக்கொண்டு நாலாபக்கங்களிலும் பார்த்துவிட்டு குதிரடியில் ஸந்தேகம் கொண்டு உலக்கையால் நாலு மொத்து மொத்தினார்.

க்ரு :—நல்லது, க்ரந்திலமிச்ரா! நல்லது. சபாஷ்! ஒருதடவை அப்படிச் செய்து விட்டால் அப்புறம் அது திரும்பி வராது.

ஜிம் :—உடனே அது வெளியில் வந்து எனக்கு அபயம் கொடுங்கள் என்று காலில் விழுந்து இனி இந்தத் திக்கில் காலடி வைக்கவில்லை என்று சபதம் கூறிவிட்டு ஓடிப்போனதாம்.

க்ரு :—(உரக்க சிரித்துவிட்டு) இப்படி உதைபட்ட பிறகுகூடவா அந்த மட பிரும்ம ராக்ஷஸுக்கு புத்தி வரவில்லை. ஐயோ, பாவம். க்ரந்திலமிச்ரன் அடியை விட நூறு மடங்கு பலமாக அடிக்கக்கூடியவன் நான் என்று அப்பேதை தெரிந்து கொள்ளவில்லை. போதும் எனக்கு எதிராளியாக ஏற்பட்டவனை படாத பாடு படுத்தி வைக்கக்கூடிய சிங்கக்குட்டியல்லவோ நான்?

கௌ :—ஓஹோ! அப்படியா. பக்கத்து வீட்டுக்காரன் நேற்று பிரும்ம ராக்ஷஸை ஜயித்து விட்டான், நீ இன்றையதினம் ஜயிக்கப்போகிறாய், போடா போடா பைத்தியக்காரா. ஸ்திரீ புத்தியை நம்பி நீ நான்கு பெயர்கள் கேட்டுச் சிரிக்கக்கூடிய கதியை இப்போது அடையப் போகிறாய். க்ருத்ரநாஸா! நல்லதிருக்கட்டும். வா, ஒரு கை.

ஜிம் :—நாதா! பிரும்மராக்ஷஸ் ஆஹாரம் இருப்பதைத் தெரிந்து கொண்டு விட்டால் பிற்பாடு அந்த இடத்தை விட்டு நகராது என்று சொல்கிறார்களே, ஒருவேளை அது இங்கிருந்து வெளியில் போயிருக்காதோ, எங்கேயாவது ஒளிந்து கொண்டிருக்குமோ என்னமோ? நான் என்ன செய்வேன்? எனக்கு பயமாயிருக்கிறதே! வீட்டிற்குள் சஞ்சரிப்பதற்குக்கூட இனி முடியாமல் போய்விட்டால் என் கதி என்னவாகும். நாதா எப்படியாவது அதை வெளிப்படுத்தித் அடித்துத் துரத்தி விடுங்கள். பிறகு தான் மற்ற யோஜனை. இல்லாவிட்டால், பிரும்மராக்ஷஸ் குடியிருக்கும் வீட்டில் எப்படிக் குடியிருப்பது? தாங்கள் கையோடு இதற்கு ஒரு வழி செய்யாவிட்டால் நான் இன்றோடு தொலைந்தேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

க்ரு—ப்ரியே, நீ பயப்பட வேண்டாம். உலக்கையும் கையுமாக இப்போதே வீடு முழுவதும் பரிசோதித்துப் பார்க்கிறேன். நம் சிற்றுண்டியில் குறுக்கிடும் அந்த எதிரியானவன் கண்ணில் தென்பட்டால் அந்த விடத்திலேயே சட்னிசெய்துவிடுகிறேன் (என்று தைரியமாக நடைபோடுகிறார்.)

கௌண்:—ஓகோ! எது க்ருத்ரநாஸன் கூட பராக்கிரமசாலியாகி விட்டானே. நல்லவேளை, இந்த குதிர் நிரம்ப தவிடு இருக்கிறது. இதோ ஒரு முறம் (முறத்தில் தவிட்டை வாரி எடுத்துக் கொண்டு தயாராக நிற்கிறான்.)

ஜிம்:—சாவதானமாய்ப் போங்கள், பிரும்ம ராக்ஷஸ் பலம் பராக்கிரமும் உடையதென்று ஜனங்கள் சொல்லுவார்கள்—முதன் முதலாக ரேழியில் குதிர் மூலையைப் பரிசோதியுங்கள். ஏனென்றால், பிராணிகள் பழகிய வழிகளை இலகுவில் மாற்றிக்கொள்ள வல்லவராகார்.

க்ரு:—ப்ரியே, நீ பக்கத்தில் இரு (ரேழிக்கு வந்து) அடேடே! தயவில்லாத கொடும் பாவியே! ஜன்மாந்திரத்தில் அதிதிகளை வஞ்சனை செய்ததால் இகழத்தக்க பிரம்மராக்ஷஸ் ஜன்மத்தை அடைந்தபேதையே! ஈவிரக்கமற்ற கருமியே! நீ எங்கிருக்கிறாய்? நீ பிரும்மராக்ஷஸ் ஆனாலும் சரி, நிஜமான ராக்ஷஸனானாலும் சரி, க்ருத்ரநாஸன் கையிலிருந்து இனி தப்பிப் பிழைப்பது அரிது. (பார்த்து) அடே, படுபாவியே! நானும் உன்னைப் பார்த்தேன், எமனும் பார்த்து விட்டான். கிரந்திலமிச்ரனை நினைத்துக்கொள் இப்பொழுது. (என்று உலக்கையை ஓங்குகிறான்.)

கௌ:—(க்ருத்ரநாஸன் முகத்தில் தவிட்டை வாரி இறைத்து விட்டு) உன் உதாரகுணம் போல் அவ்வளவு சிலாக்கியமான இந்த தவிட்டை வாங்கிக்கொள். (என்று வெளியே வருகிறான்.)

க்ரு:—ஹா! ஐயோ!! அப்பா!!! போய் விட்டேனே! ப்ரியே என்னை பிடித்துக்கொள். (என்று வீறிட்டுக் கத்துகிறான்.)

ஜிம்:—ஹா நாதா! உங்களை பிரும்மராக்ஷஸ் இந்த கதியாக்கி விட்டதா? ஐயோ, என் நாதனைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! (என்று அலறிக் கொண்டு ஓடிவருகிறாள்.)

கௌ:—ஓய், கிருத்ரநாஸரே! நீர் தவிட்டைத் தின்னும், நான் வெல்லவலைத் தின்கிறேன். என்றும் குன்றாத ஆசாரத்தினால் பரம பரிசுத்தனான பிரும்மசாரியை உபாயன பாகம் கொடுக்காமல் வஞ்சனை செய்ய எண்ணிய உமக்கு இதுவே நியாயமான தண்டனை. (என்று அவல் பாத்திரத்தை கையில் எடுத்துக் கொண்டு) அம்மணி, கன்னத்தில் பிளவைக்கு வைத்தியனை அழைத்துவர வேண்டுமா?

ஜிம் :—ஆ! நாதா! கண்கள் வீங்கி விட்டனவே! தெருவில் திரியும் எச்சில்கலை நாய் உள்ளே புகுந்து உங்கள் வீட்டிலேயே உங்களை இவ்விதம் துன்புறுத்தி விட்டதா? (கௌண்டின்யன் பக்கம் விரைந்தோடி) உன் விரல்கள் ஒடிய; உன் கைகள் அறுந்து விழ. மானங்கெட்டவனே! உருளியைக் கீழே போடுகிறாயா, இல்லையா?

க்ரு :—(வேதனை பொறுக்காமல் "உங் உங்" என்று கொண்டு) ப்ரியே என்னை உள்ளே அழைத்துக்கொண்டுபோ, முதலில் என் கண்களைத் துடைதது‌ச் சிகிச்சை செய்.

ஜிம் :—அந்தப்பாழும் தைவத்திற்கன்றே கண்களைத்துடைத்து சிக்ஷை செய்யவேண்டும்! இவ்வளவு பிரயாசைப்பட்டு நாம் செய்த ஆகாரத்தை நம் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு, இந்த கரியாப்போகிறவன் குரங்கு மூஞ்சி பிரும்மராக்ஷஸின் கையில் கூசாமல் எடுத்துக் கொடுத்து விட்டதே. இந்த தைவத்திற்குக் கண் இருக்கிறதா ?

க்ரு :—தைவத்தை நிந்திப்பதில் என்ன பயன்...............ஐயோ, வேதனை பொறுக்க வில்லையே.

ஜிம் :—நாதா, இதோ என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள். (க்ருத்ரநாஸனை உள்பக்கமாய் அழைத்துச் செல்கிறாள்.)

கௌ :—அம்மணீ! என்மீது கோபம் வேண்டாம். அதிதிகளை வஞ்சனை செய்யும் மகாபாதகத்தின் பயனாகவே ஒருவன் பிரும்மராக்ஷஸாக ஜனிக்கிறான் என்ற சாஸ்திரமானது உங்கள் பர்த்தா அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். ஆதலால், இந்த பக்ஷணத்தை பலாத்காரமாய் எடுத்துக்கொண்டு புசிப்பதினால் உங்கள் பர்த்தாவுக்கு இனி ஏற்படக் கூடிய பிரும்மராக்ஷஸ ஜன்மத்திலிருந்து நான் அவரை விடுவித்தவனாகிறேன். ஆதலால் தாங்கள் என்னிடம் நன்றி பாராட்டுவதே உசிதமாகும்.

ஜிம் :—(பற்களை கடகடவென்று கடித்துக் கொண்டும் விரல்களை படபடவென்று நெறித்துக்கொண்டும், சபித்துக் கொண்டும் க்ருத்ரநாஸனுடன் போகிறாள்.)

கௌ :—க்ருத்ரநாஸன் பிரும்மராக்ஷஸ் என்றால் ஜிம்மனி பிரும்மராக்ஷஸி என்பதில் சந்தேகமேயில்லை. ஆஹா என்ன பொருத்தமான தம்பதிகள் — (புசித்துக்கொண்டு) ஆனால்மட்டும் ஜிம்மனியின் கைத்திறம் கைத்திறம்தான். அமிர்தபாகம் என்றால் அவளிடம் தான் பார்க்கலாம். ஆஹா, இந்த வெல்லவலுக்குத்தான் என்ன ருசி! ருசி மட்டுமல்ல பகுத்தறிவு கூட உண்டென்பது திண்ணம். அந்தப் பேராசை பிடித்த கருமி அதிதியை வஞ்சனைசெய்து புசிக்க நினைத்த போது அவனது நாக்கை பொசுக்கிவிட்டு இப்போது எனக்குப் பொறுக்கக்கூடிய சூட்டுடன் இந்த வெல்லவல் இருப்பதை யோசித்தால், ஆதித்ய சாஸ்திரத்தில் தனக்குள்ள பக்ஷபாதத்தை இது நன்கு உணர்ந்திருக்கிறது போலும். ஆதித்யம் செய்வதில் ஈடுபடாத ஜன்மத்தை வைத்துக் கொளுத்த வேண்டும். அக்னி என்ன, தேவர்கள் என்ன, பிதிர்கள் என்ன, இவர்களுக்கு பிராம்மணனே முகமாகிறான். இவனிடத்தில் கொடுத்தால் அவர்கள் திருப்தி அடைகிறார்கள். மேலும் ருசியான பதார்த்தத்தை ஒருவன் தானாகவே சாப்பிடலாகாதென்று உலகத்தில் சொல்லுவார்கள். நல்லது இன்றையதினம் முதலில் சிரமப்பட்டாலும் இறுதியில் தன்யனானேன்............

(உருளியைக் கீழே வைக்கிறான்.)

வாயிலே வந்தடைந்து
ஈனக் குரலெடுத்து
ஏழை என் பசியைப்போக்கும்
என்றுரைக்கும் பாதை நோக்கி

சற்றேனும் மனமிரங்கி
பசி தீர்க்க முன்வாரா
கடு நெஞ்சன் கருமியான
பாவியின் சோறதனில்

அறுசுவையும் பொருந்தி மிக
அருமையாய் ருசியிருக்க
அவன் வாயில் அது தவிடாய்
அனலைப்போல் கொளுத்துவதாய்

திண்ணமாய் மாறுபட்டு
திகைத்திடவே வருத்து மென்று
கௌண்டின்யன் ஆணையிது
பறையறைவோம் உலகதனில் !

திருமஞ்சனக் காட்சி : : : : ஒரு ப்ரேக்ஷணகம்.

(கா. வே. ராமசந்திரன் எழுதியது.)

காலம் : கி.பி. 640—643. இடம் : காஞ்சீபுரம் ; கடல்மல்லை.

பாத்திரங்கள்.

நரஸிம்ஹவர்ம பல்லவமல்லன் : சக்கிரவர்த்தி
சீராளர் சிறுத்தொண்டர் : மந்திரியும் ஸேனாதிபதியும்
சாளுவர் : ஸமுத்ரப் படைத்தலைவர்
மானவர்மன் : பல்லவன் மெய்க்காப்பாளனும் படைத்தலைவனும், ஸாமந்தனும்.
வல்லபன் : வாதாபியில் ஆண்ட சளுக்கிய அரசன்.
தண்டி, மாத்ருதத்தர் } வடமொழிப்புலவர்கள்.
கீரர், ருத்ரங்கண்ணர் } தமிழ்ப்புலவர்கள்.
லலிதாலயன் : சில்பி.
வந்தி : மங்களகரமான புகழுரை செய்பவன்.
ஸமுத்ரகோஷம் : பல்லவனது வீரரைப் போருக்கழைக்கும்முரசு.
கடுகேவாதித்ரம் : கடுவாய்ப்பறை என்ற பல்லவனது ஜயபேரிகை.

முதல் களம்

[காஞ்சீபுரத்தில் அரசன் திருமாளிகையில் ஒரு மண்டபம். அரசனும் சிறுத்தொண்டரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தூரத்தில் மானவர்மன் பட்டத்து யானையை நடத்தி வருகிறான். சிவிகைகளில் தண்டி ஆசிரியரும், மாத்ருதத்தரும், ருத்திரங்கண்ணரும் கீரரும் வருகிறார்கள்.]

மானவர்மன் :—(அரசனை நமஸ்கரித்து) தேவ! அடியேனை அங்கீகரிக்க வேண்டும். ஒருநாயகமாய் லங்கையை ஆண்டவன் நான். காலவிரோதத்தால் நாடிழந்து நலமிழந்து படாதன பட்டு இங்கு அடைக்கலம் புகுந்தேன். பூமியை வீர போக்யமாகக் கொண்ட மஹாமல்ல! தானவீர! தயாவீர! தங்கள் குணமும் என் நல்வினையுமே என்னைத் தங்களிடம் சேர்ப்பித்தன.

சிறுத்தொண்டர்:—(ஆச்சர்யத்துடன்) மலையமான் மணமகனே வருக! (அரசனிடம்) தேவ! லங்காதிலகமும், குருதேவரிடம் தங்களுடன் அணி நூல் பயின்ற மன்னவனுமான காச்யபனின் புத்திரன் இவன்.

அரசன் :— (தனக்குள்) என்னை அறியாமல் எனக்கு இவனிடம் பிரேமை ஊற்றெடுத்த தன் காரணத்தை இப்போது அறிந்தேன். தண்டநாயகனும், ராஷ்ட்ரபதியுமான இவன் 'கங்குலும் பகலும் கண் துயிலறியாது'; பல காலமாகப் பலபடியாக எனக்குத் தொண்டு செய்து வருகிறான். (வெளிப்படையாக) குருதேவரே! இவன் நமது உபகாரத்துக்குத் தகுந்த பாத்திரம் தானே?

தண்டி :—மஹாமல்ல! மஹாபலியை ஒப்ப, யாசித்தவனுக்கு உன் ராஜ்யம் முழு

வதையும் கொடுத்து, ஏற்றவனை விடப் பெரிதும் மகிழும் உனக்கு, லங்கா ராஜ்யத்தைக் கொடுப்பதும் பெரிதோ? இச்சிறுவன் உன் அனுக்ரஹத்துக்குத் தகுந்த பாத்ரமே.

கீரர் :—தேவ! யாசிப்பவர் இல்லாமையாலன்றோ தாங்கள் லங்கையை இதுவரை கொள்ளாதது. இப்போதோ, கொடைக்கு அபூர்வமான ஸந்தர்ப்பம் கிடைத்தது. இது மறுபடி கிடைக்குமோ?

ருத்திரங்கண்ணர் :— கொள்ளாவிடினும் கொண்டவர்போல, ராமன் விபீஷணனுக்குக் கொடுத்ததுபோல, லங்கையை இவனுக்குத் தந்தருளவும்.

அரசன் :—விப்ர வாக்குக்கு ஆக்ஷேபம் ஏது? ராஜ்யஸ்ரீ ஒரு விலைமகள் அல்லாவிடில், ஸர்வ லக்ஷண ஸம்பன்னனான இந்த ராஜபுத்ரனை அவள் விடுவானேன்? தோழன்மகன் என்மகன் அல்லவா? மானவர்ம! த்ரிலோகமும் எதிர்த்து வந்தாலும், உன் மனோரதத்தை நிறைவேற்றும் கடமை எனக்குண்டு. (சிறிது மனதை வேறிடத்தில் செலுத்தினவனாய்) குருதேவரே! மஹாகவிகளே! விநோதார்த்தமாகச் சிறிது தூரம் போய் வருவோமாக.

தண்டி :—மஹாமல்ல! உன்னைப்போலவே அந்த மண்டலேச்வரனான விஷ்ணுவர்த்தனன், கிராதார்ஜுனீயத்தைக் கவனம் செய்துகொண்டிருந்த எங்கள் பெரியவரான பாரவியைச் 'சிறிதுதூரம் எம்முடன் வந்து வேட்டையின் மர்மங்களைக் கவனித்துக் கொள்ளும்' என்று சொல்லி, வேட்டைக்கழைத்துப்போய், விளையாட்டாக அவருக்கு வனத்தில் மாம்ஸ போஜனத்தைச் செய்து வைத்தான். அதற்குப் பிராயச்சித்தமாக அப்பெரியவர் பன்னிரண்டு வருஷம் க்ஷேத்ராடனம் செய்தார். தீர்த்த யாத்திரையிலிருந்து, நானும் இப்போதுதான் திரும்பினவன். மறுபடி ஸ்தல யாத்திரைக்கு அனுப்பத் திருவுளமோ?

அரசன் :—(சிரித்து) நமது ஸ்தலங்கள் இரண்டே. காஞ்சிபுரம் ஒன்று. கடல்மல்லை ஒன்று. ஆகையால் பயம் வேண்டாம். ஏகம்பன் திருக்கோயிலில் கந்துகோத்ஸவம். அங்கு ஒரு நர்த்தகி அதிசயமாக ஆடுகிறாளாம். அது வியாஜமாக 'சொற்பதமும் கடந்து நின்ற அற்புதனை'த் தரிசித்து வருவோமாக.

தண்டி :—(மாத்ருதத்தரிடம்) நமது அரசனுக்கு அம்ருதமே கிடைத்த போதிலும் நம்முடன் சேர்ந்து அனுபவிப்பானே யல்லது தனியாக அனுபவிக்கவே மாட்டான்.

மாத்ருதத்தர் :—அனுபவிப்பதிலும் இவன் தர்மத்தை முன்னிட்டே அர்த்தத்தையும் காமத்தையும் தேடுவான். தர்மத்தை விட்டதால் த்ரிலோக ஸித்தியானாலும், த்ரிலோகத்தையும் விடுவானேயன்றி, தர்மத்தைக் கைவிடான்.

கீரர் :—உலகில் அரசர்கள், பிறர் பொருளையும் செங்கோலையும் கைப்பற்றுவதிலேயே ஊக்கமுடையவர்கள். இவனோ, வேண்டியவருக்குத் தன் கிரீடத்தையும் ஆபரணங்களையும் வலிந்து கொடுக்கும் மனப்பான்மையையுடையவன்! கவீச்வரர்களே! இப்போது நான் எரகம், ஆவினன்குடி முதலிய ஸ்தலங்களுக்குப் போவதால் உங்களுடன் வரக்கூடவில்லை. நீங்கள் போய் வாருங்கள். (கீரர் போகிறார்; மற்ற புலவர்கள் சிவிகைகளில் புறப்படுகிறார்கள்.)

சிறுத்தொண்டர் :—மானவர்ம! கடலிலிருந்து அமுதத்தையே தேவர்களுக்குக் கடைந்து உதவிய இறைவனுக்கு, கடல் சூழ் லங்கையை உனக்குக் கொடுப்பது அரிதோ? கொடுங் கோலனான லங்கேசனை விரலால் ஊன்றியவனுக்கு, அற்பரான உன் பகைவரைச் சிக்ஷிப்பதும் பெரிதோ? ஆகையால் அப்பிறைசூடியைத் துணையாகக்கொள். அவன் 'தொண்டுபடு தொண்டர் துயர் தீர்ப்பான் காண்!'

அரசன் :—(தனக்குள்)

அடி சேர் முடியினராகி அரசர்கள் தாம் தொழ
இடி சேர் முரசங்கள் முற்றத்தியம்ப இருந்தவர்
பொடி சேர் துகளாய்ப் போவர்கள்!

(அரசனும், மானவர்மனும், சிறுத்தொண்டரும் யானைமேல் புறப்படுகிறார்கள்.)

முதல் களம் முற்றிற்று.

இரண்டாவது களம்

[ஒரு வருஷத்துக்குப்பிறகு மாத்ருதத்தரும் ருத்ரங்கண்ணரும் ராஜ மாளிகையை நோக்கி வருகையில், ஸ்தலயாத்திரையை முடித்துத் திரும்பிய கீரரை வழியில் சந்திக்கிறார்கள்.]

கீரர் :—மஹாகவிகளே! ராஜக்ருஹத்துக்கு நானும் உடன் வருகிறேன். இவ்வளவு காலமாக ஊரிலில்லாததால், நடந்த விஷயங்களை அறிய விரும்புகிறேன். தண்டி ஆசிரியர் எங்கே?

மாத்ருதத்தர் :—அன்று கடல்மல்லைக்குப் போனவர் இன்னும் திரும்பவில்லை. போன காரியத்தைக் கேட்கிறீர்களா? கந்துகோத்ஸவத்தில் அந்த நர்த்தகி பெரிய பெருமாள் ஸிம்ஹ விஷ்ணுவை, நரஸிம்ஹாவதாரத்தோடு உவமித்துப்பாடிய பாரவியாரது ச்லோகத்துக்கு, நமது அரசனை நாயகனாகப் பண்ணி, ஆச்சரியப்படும்படி பாடி அபிநயித்தாள். அந்த ஸமயத்தில், யவன சில்பிகளை யெல்லாம் ஜயித்துக் கொடியிட்ட மஹா சில்பி ஒருவன்—லலிதாலயன் என்ற பெயருடையான்,—அரசனைக்கண்டு, பல காலமாய் உடைந்து முறிந்து பற்பல சில்பிகளால் செப்பனிட இயலாத கடல்மல்லைத் தலசயனமூர்த்தியின் கையைத் தான் சேர்த்த இடம் தெரியாதபடி சேர்த்து விட்டதாகவும், அந்த அதிசயத்தை அரசன் கண்டு இன்புறவேண்டும் என்றும் பிரார்த்தித்தான். அரசனும், சில்பத்தின் ரஹஸ்யங்களை நன்கறிந்த தண்டியைத் தனக்குப் பதிலாக அவனுடன் அனுப்பி, அவனுக்கு ஸம்மானம் செய்து, அவனைக் கொண்டு பின்னும் வேறு சில்பங்கள் செய்விக்குமாறு அஜ்ஞாபித்தார்.

ருத்திரங்கண்ணர் :—அரசன் அஜ்ஞாபித்தது பல்லவனீச்வரத்துத் திருப்பணி ஒன்று. பக்கமலையில் யானை கிடந்தாற்போல, பாம்பணையில் துயில் கொண்டு, திரையனது த்வீபாந்தரங்களையும் கடற்படையையும் ரக்ஷித்துவரும் ஜலசாயிக்குத் திரு அறையும் திருப்பீடமும், இறைவனுக்குத் திருமாளிகையும் முன் முற்றமும் பின் முற்றமும், எண்ணிறந்த ரிஷபங்களும், மலைபோன்ற மதில்களும் பிறவும் அஹோராத்ரமாகச் செய்யப்பட்டு வருகின்றன. பாரவி ஞாபகமாகவிருந்த அரசன் கிராதார்ஜுனீயத்தையும் சில்ப லக்ஷ்யமாக்கும்படி அஜ்ஞாபித்தான். இன்னும் பூவராஹமூர்த்தியென்ன, மஹிஷாஸுரமர்த்தனியென்ன, பெரிய பெருமாள் மஹேந்திரவர்மருடைய சிலாபிம்பமென்ன, இவைகளெல்லாம் பூர்த்தியானால், கடல்மல்லை அமராவதியினும் சிறப்படைந்து விடும்.

மாத்ருதத்தர் :—கீரரே! இந்த சில்பியும், இன்னும் உலகிலுள்ள சில்பிகள் எல்லாரும் சேர்ந்து ஒரு பிரதிமை செய்தாலும், அன்று கந்துகோத்ஸவத்தில் ஆடிய நர்த்தகியின் ஸௌந்தர்ய அதிசயம் வருமா? அவள் கண்ணிலிருந்த அழகு நமது காவ்யங்களிலில்லை. அவள் அரங்கில் ஏறி நின்ற அழகு ஒன்றே எல்லாரையும் பரவசப்படுத்திவிட்டது. கட்டைவிரலைக் குஞ்சித்தும் பிறவிரல்களை அன்னச்சிறகுபோல் அமைத்தும் அரை உடம்பாக உட்கார்ந்தும், எழுந்தும், பந்து ஒன்றை மாறி மாறிப் புடைத்துக் கைகளை உத்தானமாக்கியும் அதோமுகமாக்கியும் விளம்ப மத்ய லயங்களில் பந்தை ஒட்டியும் அதை அனுசரித்து ஆச்சரியமாக ஆடியும், நேராயும், கோணலாயும், சக்ரமாயும் பந்தைச் செலுத்திச் சென்ற வழியெல்லாம் வெகு அழகாகக் காலை அஞ்சித்தும், குஞ்சித்தும், நாட்டியும், உடலை பங்கித்தும், பலபல மதுரமான நிருத்த காணங்களையும், விசித்திரமான கதிகளையும் செய்தது, வர்ணித்து முடியுமா?

கீரர் :—முன் லங்கையிலிருந்து வந்திருந்தானே, ஒரு சிறுவன் அவன் மனோரதம் பலித்ததா?

மாத்ருதத்தர் :—பலிக்கும் சமயம் வந்திருக்கிறது.

கீரர் :—எப்படி?

ருத்ரங்கண்ணர் :—கதையைக் கேளுங்கள். கந்துகோத்ஸவம் முடிந்து ஐந்தாறு பக்ஷங்கள் ஆயின. அச்சமயம் சிறுத்தொண்டரும் செங்காட்டங்குடித் திருப்பணி விஷயமாகப் போயிருந்தார். அப்போது தான் அரசன் மானவர்மனைத் தன் குடும்பத்தை அழைத்து வருமாறு மலையமான் ஊருக்கு அனுப்பியிருந்தார்; ஆனால் அவன் இன்னும் புறப்படவில்லை. திடீரென்று வல்லபன் படை திரட்டித் தெற்கு வரும் செய்தி அரசனுக்குத் தெரிந்தது. மானவர்மனைப் போருக்கனுப்பி, அவன் போரிலே மாண்டானாகில், அவனுக்குத் தான் செய்த பிரதிஜ்ஞை

தவறி விடுமோ என்ற பயத்தாலும், மனைவியை அழைத்து வரப்போனச் சிறுவனை போருக்கனுப்பச் சம்மதியாமலும், அரசன் தானே வீராவாதம்ஸத்தைப் பூண்டு யுத்தத்துக்கு ஆயத்தமானான். ஸமுத்ர கோஷம் முழங்கிற்று. மானவர்மனும் அரசன் வாகை சூடியதை உணர்ந்து, அச்சமயம் தான் போக மாலையை அணியச் சம்மதியானாய், அரசன் புறப்படுமுன் தன் படையை அணிவகுத்துப் புறப்பட்டு வல்லபனைப் போரில் முதுகிடச் செய்து, அவனது பட்டத்து யானையையும், குதிரையையும், முரசத்தையும் கிரீடஆபரணங்கங்களையும் பாசறையிலிருந்த அரசனுக்குப் பாத காணிக்கையாக ஸமர்ப்பித்தான். மானவர்மனது ஸேவையால் தன்னைக் கடனாளியாகக் கருதிய அரசனும், பெரிதும் மகிழ்ந்தவனாய், மந்திரிகள் ஸம்மதத்துடன் தமது ஸமுத்ரப்படையை மானவர்மனுக்குத் துணையாக அனுப்ப உத்தேசித்திருக்கிறான். நாளை மஹோதய புண்யகாலத்தில் படை புறப்பட இருக்கிறது. உச்சிவேளையாய் விட்டது; புறப்படுவோமாக.

(எல்லோரும் ராஜசபையை அடைகிறார்கள்.)

அரசன் :—மஹா மந்திரி! கடற் படை கூடி விட்டதா?

சிறுத்தொண்டர் :—கூடிவிட்டது. நாவாய் நாயகரான சாளுவர் இதோ இருக்கிறார்.

சாளுவர் :—(வந்தனம் செய்து) தேவ! பல்லவனீச்வரத்துக்குத் தெற்கே சதுரங்கப் பட்டினம் வரையில் தோணிகளும், கலங்களும், நாவாய்களும் அணிவகுத்து இயங்குகின்றன. இவைகளின் கூபதண்டங்களும், பாய்மரங்களும் ஆகாயத்தை மறைப்பன. கதை, வாள், பிந்திபாலம், சக்ரம், தோமரம் முதலிய ஸகல ஆயுதங்களும், ஒரு வருஷத்துக்குப் போதிய ஆஹார பான வகைகளும் கலங்களில் ஏற்றப்பட்டன. யானையினங்களும், குதிரைப் பந்திகளும் ஏறி விட்டன. வருண பூஜையும், தலசயன மூர்த்திக்கும், இறைவனுக்கும் அர்ச்சனைகளும் முடிந்தன. வீரர்கள் மட்டும் அரசன் வாராது நாம் மட்டும் எப்படிக் கலம் ஏறுவது என்று முணுமுணுக்கிறார்கள்.

அரசன் :—சாளுவரே! லங்கைக்கு உம்முடன் வர எனக்கு இஷ்டமே! ஆனால் வல்லபன் மறுபடி இப்போது தலை யெடுத்திருப்பதால், சிறிது யோசிக்க வேண்டி யிருக்கிறது. (யோசனை செய்து) சாளுவரே! ஸமுத்ர கோஷத்தை நீராட்டிப் பூஜித்து மங்கள வாத்திய ஸஹிதமாக நாவாய்க்குள் செலுத்தும். இம் மானவர்மரை அழைத்துப்போய், லங்கையில் பட்டாபிஷேகம் செய்து, நமது யானை குதிரைகளையும் தென் கடலில் நீராட்டி, நமது வீரர்களுக்கும் வீராபிஷேகம் செய்து திரும்பவும். மானவர்ம! இதோ என் கிரீடத்தைத் தரிப்பாய். என் ஆபரணங்களைக் கொண்டு அலங்கரித்துக் கொள்வாய். போர்க்களத்தில் என் வேஷம் பூண்டு போர் புரியும் வீரருக்காக, கை தேர்ந்த சில்பியால் செய்யப்பட்ட எனது பிரதி சீர்ஷம் * இது! இதைப்பூட்டிக் கொள். இது மங்களகரமானதும், புண்ணியம் தருவதுமான முஹூர்த்தம். சிறுத்தொண்டரே! இவ்வரசன் புறப்பாட்டை அறிவிக்கவும்! தாங்கள் உடன் போய், அனுப்பித் திரும்பவும். மாத்ருதத்தரே, தாங்களும் கூடப்போய் வாருங்கள்.

(மானவர்மனைக் கலமேற்றி அனுப்பி மாத்ருதத்தரும் சிறுத்தொண்டரும் திரும்புகிறார்கள்.)

மாத்ருதத்தர் :—தேவா! தங்கள் வேஷம் பூண்ட மானவர்மன் பரிவாரத்துடன் கடல் மல்லையை அடைந்தான். கல மேறியவுடன் ஸமுத்ரகோஷத்தை முழக்கினான். உடனே வீரரெல்லாம் பரபரப்புடன் கலங்களில் ஏறினர். தாரையொலியும், சங்கத்வானமும், யானைத்துதிக்கை வடிவாய் அமைந்த மஹா வம்சங்களின் கோஷமும், வீரர்களது கூப்பீடும் திசைகளைத் துளைத்தன; யானைகள் பிளிறின; குதிரைகள் கனைத்தன. மாலுமிகள் வடங்களை அவிழ்த்து நீரிலுள்ள பெரிய

* முகமூடி

சிலா வலையங்களை எடுத்தவராய்ப், பாய்களை விரித்துக் கலங்களை வடக்கே செலுத்தினர். விசித்ரமான வேலைப்பாடமைந்த கலங்களின் ஆபரணங்கள் நிலவொளியில் மிளிர்ந்தன. மகரமுகமும், ஸிம்ஹமுகமும், வியாக்ரமுகமும் படைத்த நாவாய்கள் மஹா மீனங்களெனக் கடலில் மிதந்தன. மிதக்கும் பட்டிணம் போன்ற ஒவ்வொரு கலமும் பல்லவனீச்வரர் ஸந்நிதிக்கெதிரே நின்று, கப்பலிலுள்ளோர் அனைவரும் உச்சி கூப்பிய கையினராய் அங்கப் பிரதக்ஷிணம் செய்ய, கலங்களும் பிரதக்ஷிணமாகத் திரும்பி ஜலத்தைக் கிழித்துக்கொண்டு தெற்கே போயின. கப்பலிலுள்ளோர் வடக்கேயிருந்தபோது கலங்கரை *விளக்கத்து வட சுவரிலுள்ள ராவணானுக்ரஹ மூர்த்தியையும், தெற்கு வந்தபோது கீழ்ச் சுவரிலுள்ள நிருத்த மூர்த்தியையும், தெற்கேயுள்ள தக்ஷிணா மூர்த்தியையும் தரிசித்தவராய்க், கண்களை அம்மூர்த்திகளிடமே ஸமர்ப்பித்தவர்போலப் பார்த்துப் பார்த்து திருப்தி அடையாதவராகவே போயினர். போகப் போக கரையிலுள்ள எங்களுக்கு, நாவாய்களில் எழுதப்பட்ட விசாலமான கண்களும், பிறகு கூப தண்டங்களின் நுனிகளும், நமது நாகக் கொடிகளுமே புலப்பட்டன. இப்படித் தங்கள் கடற்படையான ஸேனா ஸமுத்ரம், ஜல ஸமுத்ரத்தைக் கடந்தது.

அரசன் :—ஒரு பெரிய சுமையை இறக்கியாய்விட்டது. மூன்றுதரம் பரிபவப்பட்டும் அந்த வல்லபனுக்குப் புத்தி வராமல், மறுபடி படை யெடுத்து வந்து தமது குடிகளை ஹிம்ஸிக்கிறான். நானே அவனுக்குத் தகுந்த சிக்ஷை செய்து திரும்புகிறேன்.

சிறுத்தொண்டர் :—தேவ! இந்த தரம் அவனை சிக்ஷிக்க எனக்கு அனுமதியிடவும். என் பிரார்த்தனையை மறுக்க வேண்டாம்.

அரசன் :—(அதிருப்தியுடன்) சரி! உங்களிஷ்டப்படியே அவனை வேரறுத்து வரவும்.

(இரண்டாவது களம் முற்றிற்று)

மூன்றாவது களம்

(ஒரு வருஷத்துக்குப் பிறகு; கடல் மல்லைக் காவற்காட்டிலிருந்து அரசன், கீரர், ருத்திரங்கண்ணர் மாத்ருதத்தர் ஸஹிதமாக மல்லைக்குள் பிரவேசிக்கிறான்.)

அரசன் :— கந்துகோத்ஸவத்திலிருந்து இங்கு வந்த குருதேவர், இவ்வளவு நாள் மௌனம் ஸாதித்துத் திடீரென என்னை வருமாறு ஆஜ்ஞாபித்தார், எது ரஹஸ்யமோ? அவந்தி ஸுந்தரி கதையைக் காவ்யப்படுத்தி விட்டார்போலும்! (திருவிக்ரமாவதாரச் சிலையைப் பார்த்துப் பாசுரத்தை ஞாபகப் படுத்திக் கொண்டவனாய்) ருத்திரங்கண்ணரே! வாய் கொண்டு மானிடம் பாடாத அக் கவி, அவரை எப்படி அனுபவித்தான்?

ருத்திரங்கண்ணர் :—

ஆழியெழச் சங்கும் வில்லுமெழத் திசை
வாழி யெழத் தண்டும் வாளும் எழ அண்டம்
மோழை யெழ முடிபாத மெழ அப்பன்
ஊழியெழ வுலகங் கொண்டவாறே!

தண்டி :—(வடமொழியில்)

ப்ரஹ்மாண்டச் சத்ரதண்ட:
சததத்ருதிபவனம்போருஹோ நாளதண்ட:
க்ஷோணீநௌகூப தண்ட:
க்ஷரதமரஸரித் பட்டிகா கேது தண்ட:
ஜ்யோதிச்சக்ராக்ஷதண்ட: ஸ்த்ரிபுவன
விஜயஸ்தம்ப தண்டோங்க்ரி தண்ட:
ச்ரேயஸ்த்ரைவிக்ரமஸ்தே
விதரது விபுதத்வேஷிணாம் கால தண்ட:

அரசனே! தண்டம் போன்ற த்ரிவிக்ரமனது பாதம் உனக்கு நித்தியானந்தத்தைக் கொடுப்பதாக! எந்த பாதம் பிரமாண்டம் என்ற குடையின் தண்டோ, எது பிரமன் உத்பவித்த தாமரையின் காம்போ, எது பூமி என்ற கப்பலின் கூபதண்டமோ, எது ஆகாச கங்கையின் கொடிமரமோ, எது ஜோதி

---

* இது கடலில் உள்ள கலங்களுக்கு, கரை இருக்கும் திசையைக் காட்டுமாறு, ஒருயர்ந்த பாறை மேல் மண்டபமாய் அமைந்து, மஹாதீபம் ஒன்றைச்சுமந்து நிற்பது. இது கடல்மல்லை நடுவில் உள்ளது. பல்லவனீச்வரம் கடல்மல்லையின் வட பாகத்தில் கரையோரத்தில் உள்ளது.

மண்டலத்தின் நடுத்தண்டோ, எது மூவுலகை யும் ஜயித்த பெருமானது விஜயஸ்தம்பமோ, அந்தத் திருப்பாதம் உன்னை ரக்ஷிப்பதாக!

அரசன் :—குருதேவரே! வந்தனம்.

ருத்ரங்கண்ணர் :— (வராஹவதாரத்தைக் கண்டு)

நான்றில ஏழ் மண்ணும் தானத்தவே,
பின்னும்
நான்றில ஏழ் மலை தானத்தவே பின்னும்
நான்றில ஏழ் கடல் தானத்தவே அப்பன்
ஊன்றி இடங்கெயிற்றில் கொண்ட நாளே!

அரசன் :—குருதேவரே! இந்த நூதன மூர்த்திகளைச் செதுக்கியவன் அந்த லலிதாலயன் தானே?

தண்டி :— அவனே! (அர்ஜுனன் தவம் என்ற லக்ஷ்யத்தைக் காட்டி) தேவ! இதைக் கவனியுங்கள்.

அரசன் :—அர்ஜுனர்க்குப் பாசுபதம் கொடுத்தவரோ இவர்?

லலிதாலயன் :—அன்று, தாங்கள் ஆஜ்ஞாபித்ததும், நான் செய்ய நினைத்ததும் அதுவே. ஆனால் குருதேவர் வீரரஸத்தை அத்புத ரஸமாக மாற்றி விட்டார்.

அரசன் :—இது கங்காவதரணமோ?

லலிதாலயன் :—அத்புதமான அத்தெய்வ நதியும், இதில் உடகதையே! தேவ! இது த்ரிலோகத்துக்கும் மங்களத்தையும் ஆநந்தத்தையும் தந்த குமார ஸம்பவம். இறைவனது புத்ரோத்ஸவம். இது சரவணப்பொய்கை. இது பதுமப் பாயல். ஸர்வ தேவதைகளும், கந்தர்வ, கின்னர, கிம்புருஷ, உரக, ரிஷி கணங்களுடன், மனிதரும், புள்விலங்குள்பட ஸகல ஜந்துக்களும் த்ரிலோகங்களும் இந்த அதிசயத்தைக் காணக் கூடிவிட்டன. இடது பக்கத்திலிருந்தும் வலது பக்கத்திலிருந்தும் இறைவனுள்பட எல்லோரும் பொய்கை நோக்கி வருகின்றனர். கிம்புருஷர் மங்கள கீதம் பாடுகின்றனர். தேவரும், நாகரும் புஷ்பங்களையும் காணிக்கைகளையும் எடுத்து வருவராயினர். இறைவன் கையிலுள்ள வேல் தான் கடலுள் ஒளித்த சூரபத்மனைத் தடியப்போவது. ஒவ்வொருவர் கையும் விஸ்மய முத்ரையாக அமைந்திருப்பதைக் கவனிக்கவும்.

அரசன் :—தேவ லோகாதிபதி எங்கே?

லலிதாலயன் :—குமாரக் கடவுளை இங்கு ப்ரத்யக்ஷமாக்கி விட்டால் த்வனி நஷ்டமாவதால், அது உசிதமில்லை என்று குருதேவர் தடுத்து விட்டார். (மஹிஷாஸுரமர்த்தனி மண்டபத்தில் உள்ள ஸோமாஸ்கந்த மூர்த்தியைக் குறிப்பிட்டு) தேவியார் அன்புடன் தன் மடியில் வைத்த அக்குழந்தையை அங்கு பாருங்கள். இவரைப் பல விடங்களில் அமைத்திருக்கிறேன். இறைவன் தோளில் குமரன் விளையாடுவதாகவும் ஒரு பிம்பம் செய்துள்ளேன்.

கீரர் :—இது கல்லிலே செதுக்கிய முருகாற்றுப்படை! மஹா சில்பி! இறைவனையே ஆற்றுப்படுத்தி விட்டீர்களே!

அறுவர் பயந்த ஆறமர் செல்வ!
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல் போர்க் கொற்றவை சிறுவ!

உலராத காழகத்தை உலர உடுத்து உச்சி கூப்பிய கையரான இம்முப்புரிநூலரும் உன்னை ஜபிப்பவரோ? மாதோபவாஸத்தால் மார்பெலும்பு எழுந்து இலங்கும் தோற்றத்தையுடைவரும், வலம்புரியொத்த இந்நரை முடித் தபோதனரும் உன் திருவவதாரத்தில் ஈடுபட்டனரோ?

அசரன் :—கீரரே! லலிதாலயர் சில்பம் உயர்ந்ததா அல்லது, உமது வாக் சில்பம் உயர்ந்ததா என்ற ஸந்தேஹத்தை எழுப்பி விட்டீர். மஹா கவி! தமிழில் திருமுருகாற்றுப்படையைச் செய்தருள்க!

மாத்ருதத்தர் :—தேவ! இச்சித்திரத்தில், எலியும் பூனையும், மானும் புலியும் பகைதீர்ந்து இருப்பது உன் ஆணைக்கு பயந்து தானே!

அரசன் :—(சில்பத்தில் அமைந்த கோவர்த்தனதாரரைக்கண்டு) ருத்திரங்கண்ணரே!

தருமமறியாக் குறும்பனைத்தன்
கைச்சார்ங்கமதுவே போல்
புருவ வட்ட மழகிய பொருத்த
மிலியைக் கண்டீரோ?

ருத்திரங்கண்ணர் :—

கணங்களோடு மின் மேகம்
கலந்தாப்போல வனமாலை
மினுங்க நின்று விளையாட்த்
தலசயனத்துக் கண்டோமே!

அரசன் :—

காத்த எங் கூத்தாவோ
மலையேந்திக்கல் மாரி தன்னை!
பூத்தண்டுழாய் முடியாய்!
புனை கொன்றையஞ் செஞ்சடையாய்!

[கடுகேவாதித்ரம் முழங்குகிறது. ஜயஸ்தம்பம் ஒன்றை யானைகள் இழுத்துவரப் பெருங் கூட்டம் தூரத்தில் காண்கிறது.]

வந்தி :—

மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத் துளை
நெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
யிகலரசன் முன் கொணர்ந்தார்!

தண்டி :—தேவ! இந்த ஜயஸ்தம்பம் பல்லவனீச்வரத்துப் பெருமானுக்குத் த்வஜ ஸ்தம்பமாகட்டும்

(சிறுத்தொண்டர் ஜயசின்னங்களுடன் பிரவேசிக்கிறார்.)

அரசன் :—(அவரை ஆலிங்கனம் செய்து) மஹாமந்திரி! வீராபிஷேகத்துக்கு எழுந்தருளுக!

சிறுதொண்டர் :—முப்புரத்தை எரித்த ஏக வீரனான பல்லவனீச்வரனுக்கே அபிஷேகம் உரியதன்றி, எனக்கு அபிஷேகமேன்? தேவ! வாதாபியிலிருந்து கொணர்ந்த மூர்த்திகளுள் அதி ஸுந்தரரான இந்த அஞ்சித பாதரைச் செங்காட்டங்குடியில் பிரதிஷ்டை செய்ய அனுமதிக்க வேண்டும்.

(சாளுவர் பிரவேசம்)

சாளுவர் :—தேவ! தங்கள் ஆஜ்ஞை நிறைவேறியது. ஸமுத்ர கோஷத்தைக் கோயிலில் சேர்ப்பித்து விட்டேன். கப்பல் படை திரும்பி வந்து கொண்டிருக்கிறது. மானவர்மர் அனுப்பிய காணிக்கைகள் இவை. திருக்கோணமலை இறைவரது பிரஸாதம் இது. (அரசன் திருநீற்றை அணிகிறான்)

* * * *

திருமஞ்சனக்காட்சி.

வந்தி :—(நாற்புறமும் சுற்றிப்பார்க்கிறான்.)

இன்று பல்லவனீச்வரத்து இறைவருக்குத் திருமஞ்சனம்! மலைபோன்ற மதில்கள் மேல் உயிருள்ள ரிஷபங்களைவிட விலக்ஷணமான சோபை வாய்ந்த சிலா ரிஷபங்கள் இதோ நிருமிக்கப்பட்டுள்ளன. வழிப்பந்தல்களும், சித்திரத்தோரணங்களும், தீபங்களும் தீபவிருக்ஷங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கலங்கரை விளக்கத்தின்மேல் இங்கிசியில் பால ஸூரியனைப்போல ஒளிவிடும் உற்சவதீபத்தின் ஜ்வாலை, திரும்பிவரும் கடற்படை வீரர் உள்ளங்களைக் குளிரச் செய்யட்டும்! கௌண்டின்யருள் முதல்வரான ஸம்பந்தமூர்த்தியை, காச்யபருள் முதல்வரான தண்டி, அழைத்துவர, யாழ்ப்பாணரும், சிறுத்தொண்டரும், லலிதாலயரும், கீரரும், ருத்ரங்கண்ணரும், அரசனும் உடன்வரத் திருக்கோயிலுள் போனவர்கள் இன்னும் ஏன் திரும்பவில்லை? (கோயிலுக்குள் பிரவேசிக்கிறான்) திருமஞ்சனத்தைத் தெரிவிக்கும், லலிதமான வாத்ய கோஷமோ இது? அல்லது கந்தர்வகான வெள்ளமோ? என்ன அற்புதம்! அபிஷேக தீர்த்த மன்றியும், ஸம்பந்தமூர்த்தியின் 'பரசுபாணியர் பாடல் வீணையர்' என்ற கீத தாரையுமோ இறைவனை நீராட்டியது? இம்மஹா புருஷர் நிறைந்த இச்சபையிலுள்ள மனிதரும், தம்முடன் கலந்துள்ள தேவ வித்யாதர கணங்களைக் கண்டும் ஒருவராவது அதிசயிக்கவில்லையே! என்ன ஆச்சரியம்! இதற்குள் அந்த தேவகணங்கள் மறைந்துவிட்டன! இப்போது தான், அம்மனிதர் பெரிதும் விஸ்மிதராய், அதர்சனமான தேவகணங்களைத் தேடுபவரைப்போல இங்குமங்கும் பார்க்கிறார்கள்!

உ

வாழ்த்து.

(பத்திரிகைப் பித்தன் எழுதியது.)

நீரார் வேணி நிமலன் சேவடிச்
சீரார் பேறுஞ் செல்வமு மளிக்கும்
நாவலந் தீவின் நாடாந் தொண்டை
நாவலர் போற்றும் நலமார் மயிலையில்
அலைகடல் அகங்கை கொண்டருந்தியே பொதிய
மலையுறு முனிவன் வழங்கு முத்தமிழொடு
பல்மொழிப்பல்கலை பயின்றவர் தம்மால்
சில்ப ஸ்ரீயெனுந் திருப்பெயர் பூண்டு
பரிவுகொண்டுலகிற் பாயிருள் நீக்கும்
பரிதியின் வெளிவரு பத்திரிகைதான்
அருந்தமிழ் வளர்க்கும் ஆவலுள்ளவர்க்கும்
அருந்துணையாகி யஞ்ஞானத்தோடு
விரவு சந்தேஹ விபரீதம்மெலாம்
கரந்திடப் பலநூல் கல்லார் தமக்கும்
குரவர் நால்வர் கூறிய தமிழினும்
அரவ அணையான் அன்பர் மொழியினும்
உள்ள பொருளினுண்மையு முலகோர்
உள்ளும் வள்ளுவன் உயர்கவிக்கம்பன்
அருணகிரியான் அருந்தமிழ்ச்சங்கத்து
இருந்த புலவர்சொல் இலக்கியச் சுவையும்,
முற்காலத் தமிழ் முன்னு கற்பனை, கதை,
பொற்பார் கட்டுரை, புராதனக் கொள்கையும்,
ஆரியத் தாங்கிலத் தார்ந்திடு மிலக்கியச்
சீரிய பொருளின் தெளிவும், வெள்ளி
மலையாரீசன் மகிழ்சங்கீதக்
கலையார் சிறப்பும், காட்சிக் கினிமை
யூட்டுஞ் சிற்பமும், உள்ளங் கவரும்
நாட்டிய வியல்பும், நலமார் சித்திரக்
காட்சியின் அமைப்பும் கண்டுகண்டெளிதில்
ஆட்சிபெற்றிலங்கவும், அரும்பெருங் காப்பியப்
பொருளெலாம் அங்கைபொருந்திடு கனியின்
மருளற வுணர்த்தியு மாநிலத் துற்ற
இன்பெலாங் கொடுக்கு மிருநிலம் போற்றத்
துன்பிலா வாழ்வுந் துன்னுவ ரதனால்
வாழிபத்திரிகையும் வாழி!
ஆழிசூழுலகுள்ளளவும் வாழியே!

அனுஷ்டானப் பகுதி.

பிரதக்ஷிணம் என்றால் என்ன?

வே. ராகவன்.

கீழ் நாட்டுச் சிற்பாராய்ச்சிக்காக காளீ கட்டத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையின் ஒரு இதழில் * பி. மஸ். என்ற மேனாட்டு ஆராய்ச்சியாளர் ஒருவர் "ப்ரம்மாவுக்கு நான்கு முகங்கள் உண்டா" என்ற அற்புதமான விமர்சம் ஒன்றைச் செய்திருக்கிறார்.

அதில் நாம் கோயில்களுக்குப் போனால் கடவுளிருக்குமிடத்தை வலம் வருகிறோமே (பிரதக்ஷிணம்), அதன் பொருள் என்னவென்று விளக்குகிறார். வலமாய் வருதல் ஸூரியனின் கதியை அனுகாரம் செய்வது ; அதாவது காலத்தின்போக்கை நாமே நடத்திக் காட்டிக்கொள்வது. 'பிரதக்ஷிணம், நாள், மாதம், ஆண்டு, கல்பம், காலம்' இப்படியாக உலகையே நாம் நம் நடத்தையில் நடித்துக் கொள்வது என்ற ஓர் அனுஷ்டானம் பிரதக்ஷிணம் என்பது. கோயிலே உலகின் குறிப்பு, ப்ரதீகம். நாம் ஒரு சுற்று வந்தால் உலகில் ஒரு வருஷம் சுழன்றதுபோல்.

இப்படி நாம் வருஷத்தை நடிப்பானேன்? காலத்தில் கலப்பானேன்? வருஷத்தின் கதியை நாம் நடத்திக் காட்டுவதால், வருஷத்தின் கதியை நாம் நலப் படுத்துகிறோம். ஒரு மனிதனின் உருவத்தைச் செய்து அதைக் கொளுத்தினால், அம்மனிதனைக் கொளுத்தினாற்போல் அல்லவா? அதுபோல, ஒருவன் செவ்வனே, ஒழுக்கத்துடனும் ஊக்கத்துடனும் பிரதக்ஷிணம் செய்தால், அதாவது நாட்டிய வழக்கில் வருஷத்தை கடவுளின் வலம் வருவதால் நன்கு நடத்தினால், வருஷமும் நன்றாயிருக்கும் என்பதுதானே அர்த்தம்? பிரதக்ஷிணம் நன்றாயிருந்தால், வருஷம் நல்ல வருஷமாயிருக்கும். வருஷம் நல்லதாயிருப்பதின் பொறுப்புக்கூட நாம் வலம் வரும் கடவுளைப் பற்றுகிறது.

ஆகையால் நம் பிரதக்ஷிணம் காலத்தின் போக்கினுடைய அபிநயம்.

வலம் வரும் வழியில் ஒவ்வொரு அடியிலும் கடவுள் தென்பட வேண்டாமா? ஆகையால் பிரதக்ஷிணத்தின் ஒவ்வொரு அடியிலும் கடவுளின் முகம் நமக்குத் தென்பட வேண்டும். கோயிலில் ஒரு திக்கைமட்டும் பார்த்துக் கொண்டும், அசையாமலுமிருக்கும் தைவத்தின் முகத்தை எப்படி ஒவ்வொரு அடியிலும் வலம் வருபவன் காண முடியும்? இது இருவகையில் முடியும் ; கோயிலே நகரலாம் ; அதாவது ரதோத்ஸவத்தால். ரதம் என்பது கோயில்தான். ரதம் ஊர்வலம் வந்தால் வலம் வரும் கூட்டத்துடன் ஒவ்வொரு அடியிலும் கடவுளின் முகமிருக்கும். இதே ரதோத்ஸவத்தின் தத்துவம்.

* Dr. Coomaraswami Volume of the Journal of the Indian Society for Oriental Art., Calteuta.

மற்றொரு வகையென்ன? கோயிலுக்கு உள்ளே இருக்கும் அசைவில்லாக் கடவுளுக்கே பல முகங்களை ஏற்படுத்துவது. ஒரு வலம் வரும் வட்டத்தில் ஆயிரக்கணக்கான திசை முனைகளிருக்கின்றன; அந்த ஒவ்வொரு முனையினின்றும் காண்பதற்கு ஒரு முகம் இருக்கவேண்டு மாதலால், வேதம் கடவுளை ஆயிரம் முகம் படைத்தவனென்று வர்ணிக்கிறது. ஒரு வட்டத்தின் முனைகளை வகுத்தால் மிகக்குறைவாக வரக்கூடிய எண் நான்கு; ஆகையால்தான் நான்கு முகங்கள் ப்ரம்மதேவனுக்கு வைத்தார்கள். நான்கு என்பது ஒரு குறிப்பு. பிரதக்ஷிணத்தை ஆயிரக்கணக்காக வகுத்தாற்போல் காலத்தை வகுக்கலாம்; ஆனால் பெரும் பகுதிகளாய் தேருவது நான்கு யுகங்கள்; நான்கு யுகங்களும் கடவுளின் அனுக்ரஹம் வெளிப்படும் நான்கு தருணங்கள். நான்கு வேதங்கள் இந்த நான்கு காலப்பகுதிகளைக் குறிக்கின்றன என்பதில் என்ன ஸந்தேகம்? ப்ரம்மதேவனின் ஒவ்வொரு முகத்தினின்றும் ஒவ்வொரு வேதம் தோன்றியது என்பதன் கருத்து இதுவே.

ஸிம்ஹாசலத்தில் கண்ட ஒரு நூதன சில்பம்.

வே. ரா.

விசாகப்பட்டணம் சென்று, ஸிம்ஹாசலம் போகாமல் வர முடியுமா, வரலாமா? இயற்கையின் சிறப்பையும் அழகையும் மலைகளில் அல்லாமல் வேறெங்குக் காணமுடியும்? மலையழகைப் பருகாத மனக்கல்வி பாழானதே. நம் நாட்டில் அழகை அனுபவிக்கும் வழி எப்பொழுதும் கடவுளின் வழிபாட்டுடனேயே கலந்திருக்கும். கங்கை, கோதாவரி அகண்ட காவேரி இவற்றின் அழகை, அவற்றில் ஸ்நானம் செய்தால் விசேஷம் என்று சொல்லாவிட்டால், எவ்வளவுபேர்கள் ப்ரயாணம் செய்து பார்த்து விடுவார்கள்? மலையையே தெய்வமாக நாம் கொண்டாடுகிறோம்; முருகக்கடவுள் குன்றுதோறும் ஆடுகிறாராம். மலையின் மேலே ஏற ஏற, மனம் உன்னத நிலையை அடைகிறது.

ஸிம்மாசலம் சென்று மலையருவியில் ஸ்நானம் செய்துவிட்டு, வராஹ நரஸிம்மனை தர்சனம் செய்யலாம் என்றார்கள். மலையருவியுமிருக்கிறதா என்று என் மனம் குதித்தது. சிறிது தூரம் ஏறினேன். சலசலவென்று படிகளின் ஓரத்தில் கற்களால் கட்டப்பட்ட கால்வாய் ஒன்றின் வழியே ஜலம் ஓடிவரும் சப்தம் கேட்டது. மேலும் சிறிது தூரம் சென்றவுடன் 'சோ' என்று அருவியின் வீழ்ச்சி காதில் விழுந்தது. 'மலையருவி யென்றால் அதன் அழகு தனி தான்' என்று நினைத்துக்கொண்டே போனேன். திடீரென இடது பக்கத்தில் மலையின் மேலிருந்து சாக்கடைக்கு வைத்திருப்பது போன்ற பெரும் இரும்புக்குழாய் ஒன்று; அது, 5, 6 அடி வெளியே 'என் விகாரத்தைப்பார்' என்று காண்பித்துக் கொண்டிருந்தது; அதிலிருந்து ஜலம் ஒரே முட்டாய் தலை தாங்காமல் விழுகிறது; கீழே சுண்ணாம்பு, கற்கள் இவைகளால் கட்டப்பட்ட ஒரு தொட்டி!

'ஆகா! என்ன! இயற்கையாய் விழும் நீர் வீழ்ச்சியின் அழகை, இப்படி பம்புக் குழாயாய் அடித்துக் கெடுத்து விட்டார்களே! மலைமுகட்டின் முகத்திலிருந்து பறந்து அகண்டு விழும் வீழ்ச்சியை சேர்த்துக் குழாய் மூலம் கொட்டும்படி செய்து விட்டார்களே? குழாய் தான் என்ன அழகு? ஐயோ! இது யார் கைத்திறனோ? இது எவன் மனதில் தோன்றிய கெட்ட எண்ணமோ தெரியவில்லையே! இதில் ஸ்நானம் செய்யவேண்டும் என்ற உத்ஸாகமே போய்விட்டதே' என்று என்மனம் முறிந்து போயிற்று.

நம் பழைய இந்திய சிற்பத்தைப் பார்த்தோமானால், ஏதாவது நீர் விழுமாறு கட்டவேண்டியது அவசியமானால், ஒரு மகரமுகமோ, கோமுகமோ அமைத்து அது மூலம் நீர் விழும்படி செய்திருப்பார்கள். இப்படி மொட்டைக்குழாய் வைப்பது 'மொட்டை நாகரீகத்துக்கு' ஒட்டுமே ஒழிய, தொட்டதையெல்லாம் சில்பப் பொருளாய் மாற்றும் பாரத நாகரீகத்துக்கு ஒட்டாது.

மொழி பெயர்ப்புப் பகுதி

கதைக் கடல்.

(டாக்டர் வே. ராகவன், M.A., Ph. D.)

[குணாட்யன் என்ற கவி பிருஹத் கதை என்ற நூலை பிசாச பாஷையில் எழுதினான். அதை 6 வது நூற்றாண்டின் முற்பகுதியில் கங்கராஜன் துர்வினீதன் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதினான். கி.பி. 8-வதோ, 9-வதோ நூற்றாண்டில் நேபாளதேசத்தில் புதஸ்வாமீ அந்தபிசாச பிருஹத்கதைக்கே மற்றொரு ஸம்ஸ்க்ருத ரூபத்தைக் கொடுத்தார். இதன்பின் கி. பி. 11-வது நூற்றாண்டில் காச்மீரத்தில் க்ஷேமேந்திரன், ஸோமதேவன் என்ற இரு கவிகள் பிருஹத்கதா மஞ்சரீ, கதாஸரித் ஸாகரம் என்ற இரண்டு ஸம்ஸ்க்ருத நூல்களில் பைசாச பெருங்கதையைச் சொன்னார்கள்.

க்ஷேமேந்திரன் மிகவும் சுருக்கிச் சொல்லி விட்டான் என்று ஸோமதேவன் தன் கதாஸரித்ஸாகரம், அதாவது கதைக்கடல், என்ற ஸம்ஸ்க்ருதப் பெருங்கதையை யாரம்பித்தான். கி. பி. 1028—1080 வருஷங்களில் காச்மீரத்தை அனந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய மஹிஷி ஸூர்யவதி யென்றவள் கல்வி நிரம்பியவள்; பெருநோக்கமுடைய அந்த மஹாராணி அனேக மடங்களைக் கட்டிவைத்தாள்; வித்வான்களுக்கு அக்ரஹாரங்களைத் தானம் செய்தாள். எப்பொழுதும் சிவார்ச்சனம், ஹோமம், தானம் —இப்படி நல்ல வழியில் ஈடுபட்டிருந்தாள். இடைவிடாது சாஸ்திரங்களையே கேட்பவளாயிருந்தும், ஒரு ஸமயம் மனதைத் தளர்த்திக் கொள்வதற்காக ஸோமதேவ கவியைத்தூண்ட அவர் பெருங்கதையின் சுருக்கத்தை ஸம்ஸ்க்ருதத்தில் அந்த மஹாராணிக்காக எழுதினார். சொல்லழகில்லா மொட்டைக் கதையாயில்லாமலும், காவ்யம் கதையைக் கெடுக்காமலும் எழுதிய சிறப்பே ஸோமதேவருடைய நூலை நாம் நாடியதின் காரணம்.]

நரவாஹந தத்த ஜனனம் என்ற நான்காவது லம்பகம்.

பிறகு வத்ஸராஜாவான உதயனன் தன்னால் ஜயிக்கப்பட்ட பூமியை, ஏக சக்ராதிபதியாய், கௌசாம்பியிலிருந்து கொண்டு ஆண்டு வந்தான். ராஜ்யபாரத்தை ருமண்வானோடு கூடிய யௌகந்தராயணன்மேல் போட்டு விட்டு எப்பொழுது ஸுகமனுபவிக்கவே பிறந்த உதயனன் வஸந்தகனோடு கூடி விளையாட்டொன்றிலேயே ரஸமுள்ளவனான். பட்ட மஹிஷியான வாஸவதத்தையுடனும், பத்மாவதியுடனும் சேர்ந்து இருவரும் பாட, தானே

வீணையை வாசித்துக் கொண்டு ஸங்கீதத்தை அனுபவித்து வந்தான். வாஸவதத்தையின் ஸூக்ஷ்ம மதுரமான பாட்டும் உதயனனின் வீணையின் நாதமும் இரண்டற்றிருக்க, வாசிக்கும் விரல்களின் கம்பம் பேதத்தைக் காட்டிக் கொடுத்தது. தனது கீர்த்தி போலிருக்கும் நிலவினால் வெளுத்த மாளிகையின் தலத்தில், தாரை வழியாய் வரும் மதுவை, சத்ருக்களின் மதத்தை உறிஞ்சுவதுபோல் உறிஞ்சினான் உதயனன். ஏகாந்தத்தில், தங்கக்கலசங்களில், நாட்ய மங்கையர் மன்மத ராஜ்யத்தில் அபிஷேகம் செய்வதற்கான ஜலமோ என்று தோன்றும்படியான செந்நிறம் பாய்ந்த மதுவைக் கொண்டு வந்தார்கள். வாஸவதத்தை, பத்மாவதி, இவ்விருவருக்கு மிடையில் உதயனன் தன் மனதையே நீட்டுவதுபோல், மதுவை நீட்டினான்; ராகம் (அன்பு, சிவப்பு) நிரம்பி, ரஸமானதாயும், தெளிவானதாயும், உள்ளே வாஸவதத்தை, பத்மாவதி, இருவருடைய முகங்களும் ப்ரதிபலித்து இருந்தது, உதயனனின் மனதுபோன்ற, அந்த மது ஈர்ஷை கோபம் இரண்டு மில்லாமலேயே நெரித்திருந்த புருவங்களோடு கூடியதாயும், சிவந்ததாயுமிருந்த அவ்விரு ராணிகளுடைய முகத்தில் அந்த மதுவுக்கும் போதுமென்ற த்ருப்தி வரவில்லை; அரசனின் கண்களுக்கும் போதுமென்ற த்ருப்தி வரவில்லை. மதுவோடு கூடிய அனேக பளிங்குக் கிண்ணங்கள் நிரம்பிய அந்த உதயனனின் பானபூமி, இளம் வெய்யிலினால் சிவப்புப் பாய்ந்த வெண்தாமரைகள் நிரம்பிய தாமரை ஓடைபோலிருந்தது. நடுவே வேடுவர்களோடு கலந்து, பலாசம் போன்ற ச்யாம நிறமான *உடைதரித்து வில் பிடித்து, மிருகங்கள் நிரம்பிய காடுகளை யடைந்தான். சேறேறிய பன்றிக் கூட்டங்களை, ஸூர்யன் தன் நெருங்கிய கிரணங்களால் இருளைத் தவிர்ப்பதுபோல் நெருங்கிய அம்புகளால் அடித்துத் தள்ளினான். உதயனன் குதிரையில் வேகமாய்ப் பாயும்போது, பயந்து நாற்புறமும் சிதறியோடிய புள்ளி மான்கள், முன்பு இவனிடம் தோல்வி யடைந்த திக்குகளின் பார்வைகள்போல் தோன்றின. காட்டெருமைகளை யடித்துப்போட்ட ரத்தத்தால் சிவந்தபூமியானது, தாமரைத்தலமே 'இவ்வெருமைகளின் கொம்புகளால் நமக்கு இனி அடிகள் கிடையா' தென்று நன்றிகொண்டு ஸேவிப்பதற்காக அவனடிகளை அடைந்ததோ என்று தோன்றிற்று. பிளந்த வாய்களில் ஈட்டியை நீட்டி, அவற்றில் கோக்கப்பட்ட ஸிம்ஹங்கள் உள்ளூர உருமிக்கொண்டு உயிரை விட்டதைக் கண்டு த்ருப்தி யடைந்தான். தன் ஆயுதங்களினாலேயே ஸாதித்த வேட்டை ரஸத்தில், அக்காட்டில் குகைப்ரதேசங்களிலும், பள்ளங்களிலும் தன் முன்னோடும் வேட்டை நாய்கள் வலைகள்போல் விக்னமாகவே ஆயின.

இப்படி ஸுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் அந்த உதயன மஹாராஜனை, அவன் ஆஸ்தானத்தில் இருக்கும் ஒரு ஸமயம் நாரதமுனி வந்தடைந்தார். ஆகாசத்திற்கே அலங்காரமாய், தன் தேகத்தின் காந்தியே தன்னைச் சூழ்ந்து ப்ரகாசிக்க, உதயனன் போன்ற தேஜஸ்விகளினிடம் உள்ள அன்பினால் இறங்கி வந்த ஸூர்யன்போல், இறங்கி வந்தார் நாரதர். அரசன் வணக்கமாக, மேன்மேலும் உபசரித்தான்; இன்புற்று அங்கு சிறிது நேரம் தாமதித்தவராய் நாரதர் அவனை நோக்கிப் பேசினார்: "வத்ஸராஜனே, கேள்; சுருக்கமாய் இதைச் சொல்லுகிறேன். பாண்டு என்ற அரசன் உன் முன்னோனாக இருந்தான். அந்த மஹாதேஜஸ்விக்கு, உனக்கிருப்பதுபோல், அழகான இரு மனைவிகள், குந்தீ என்றும், மாத்ரீ என்றும் இருந்தனர். கடல் சூழ்ந்த இந்த பூமியை வென்றுவிட்டு, ஸுகத்தை விரும்பினவனாய், அந்தப் பாண்டு ஒரு ஸமயம் வேட்டையிலீடுபட்டு, கானகத்திற்குச் சென்றான். அங்கு, மானுருக் கொண்டு மனைவியுடன் சுகித்திருக்கும் கிந்தமன் என்ற முனிவரை அம்பால் கொன்று விட்டான். மானுருவை விட்டு, நெஞ்சில் தடுமாறும் உயிருடன் அம்மஹரிஷி, துக்கித்து, வில்லைப் பிடித்து நிற்கும் பாண்டுவைச் சபித்தார், "இன்பத்திலிருக்கும் என்னை சற்றேனும் யோஜியாமல் நீ கொன்றதால், உன் மனைவியுடன் நீ கூடியிருக்கும்போது, எனக்கு வந்ததுபோல் உனக்கும் மரணம் வரும்," என்று. இப்படிச் சாபத்தை அடைந்த பாண்டு, ஸம்போகத்திலேயே ஆசையைவிட்டு, தன்னிரு பத்னிகளோடு, சாந்தனாகி, தபோ

*மிருக வேட்டை யாடுபவர்கள், இலைப்பச்சை நிறத்தில் உடை போட்டுக்கொண்டு, மரங்களோடுமரமாய் ஸஞ்சரித்தால் மறைவு ஏற்படும் என்றுகருத்து. இப்படியே, நிலவில் காதலனைத் தேடிப்போகும் மடந்தையர் வெண்ணுடையும், இருளில் அம்மாதிரிச் செல்பவர், கருப்பு உடையும், தரித்துப் போவர் என்று காவ்யங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

வனத்தில் தங்கி விட்டான். தபோவனத்தில் இருந்தாலும், சாபத்தால் தூண்டப் பட்டு ஒரு ஸமயம் 'தற்செயலாய் பிரியையான மாத்ரியை இச்சித்து, உடனே மடிந்தான். இப்படியாக, அரசே, வேட்டை என்பது அரசர்களின் கேடுகளில் ஒன்று; அவர்கள் வேட்டையாடும் மிருகங்களைப்போல், இந்தப் பாண்டு போன்ற வேறு பல அரசர்களையும் வேட்டை ஒழித்திருக்கிறது. கோரமான சப்தம்; மாம்ஸத்திலேயே குறி;—இப்படி ராக்ஷஸி போன்றதான வேட்டை எப்படி நலம் தரும்? ஆகையால் வீண் ச்ரமமான இந்த வேட்டை என்ற ருசியை விட்டுவிடு. காட்டு விலங்குகள், வேட்டை நாய், குதிரை முதலியன, வேட்டையாடிக் கொல்லுபவர் — இம் மூவருக்கும் வேட்டையால் ப்ராணனுக்கு ஆபத்து ஸமமாயிருக்கிறது. நீயும் உன் முன்னோரிடம் எனக்குள்ள ப்ரீதியால் எனக்கு வேண்டியவன்; சுபத்தையடைய நல்ல பாத்ர மாயிருக்கும் உதயனனே! உனக்கு காமதேவனின் அம்சமான பிள்ளை பிறக்கப்போகும் வழியைக் கேள்:

முன் மன்மதனுடைய எரிந்துபோன தேகம் மறுபடியும் தோன்ற வேண்டுமென்று ரதியினால் துதிசெய்து பூஜிக்கப்பட்ட சிவன், திருப்தியடைந்து, அவளிடம் ரஹஸ்யமாயும் சுருக்கமாயும் இதைச் சொன்னார்: 'பூமியில் தன் அம்சமாய் அவதரித்து கௌரீ தேவி, தானே பிள்ளையொன்று வெண்டி என்னை உபாஸித்து, (அதன் பயனால்) காமதேவனைப் பெற்றெடுப்பாள்.' ஆகையால், அரசே, கௌரீ தேவி சண்ட மஹாஸேனனின் பெண் வாஸவதத்தையாய் பிறந்து, உன்னுடைய பட்ட மஹிஷியாய் இருக்கிறாள். இவள் சிவனைத் தொழுது, காமதேவனின் அம்சமாய், எல்லா வித்யாதரர்களுக்கும் சக்ரவர்த்தியாகப் போகும் பிள்ளையைப் பெற்றெடுப்பாள்."

இப்படிச் சொல்லப்பட்ட அரசன் நாரதரின் வார்த்தையைப் பெருமைப் படுத்தி, தன் ராஜ்யத்தை அவருக்கு ஸமர்ப்பிக்க, அதை நாரதரும் அவனிடம் திருப்பி அர்ப்பணம் செய்துவிட்டு மறைந்தார்.

நாரதர் சென்றதும் அந்த வத்ஸராஜன் புத்ர வாஞ்சை யுண்டாகிவிட்ட வாஸவதத்தையுடன், புத்ர சிந்தையிலே அந்நாளைக் கழித்தான். மறுநாள் கொலுவில் வீற்றிருக்கும் வத்ஸராஜனை யடைந்து, நித்யோதிதன் என்ற முக்ய வாசற்காப்போன் தெரிவித்தான்: "மஹாராஜனே, இரண்டு சிசுக்களோடு, மிகவும் துக்ககரமான நிலையிலுள்ள ஒரு அந்தணஸ்த்ரீ ராஜாவின் தர்சனத்தை வேண்டினவளாய் வாசலில் நிற்கிறாள்" என்று. அதைக் கேட்டு உள்ளே நுழைய அரசனால் அனுமதிக்கப்பட்டதும், துரும்பாய்ப்போய், சோகை பிடித்து அழுக்கு ஏறிய அந்த ப்ராம்மணீ உள்ளே நுழைந்தாள். குலைந்துபோன மானம் போலிருந்தது, அவளுடைய ஆடைக்கிழிசல்; துன்பம், வறுமை இவை இரண்டையுமொத்திருந்தன அவள் இடையிலிருந்த இரு பிள்ளைகள். தக்க வணக்கத்தைச் செய்துவிட்டு, அவள் அரசனிடம் தெரிவித்துக்கொண்டாள்: 'குலத்துதித்த ப்ராம்மண ஸ்த்ரீயான நான் இம்மாதிரியான துர்க்கதியை அடைந்து விட்டேன். தைவ வசத்தால் எனக்கிந்த இரட்டைக்குழந்தைகள் பிறந்து விட்டன. எனக்கு உணவே இல்லை; இவர்களுக்கு எப்படி என்னிடம் பால் கிடைக்கும்? ஆகையால் ஏழைகளிடமும், அநாதைகளிடமும், தஞ்சமென்று வந்தவரிடமும் அன்புள்ள தங்களைச் சரணமடைந்திருக்கிறேன்; இனி யஜமானனான தங்கள் சித்தம்." இதைக்கேட்டு தயைகூர்ந்த உதயனன் அவளை வாஸவதத்தா தேவியிடம் அழைத்துக் கொண்டுபோய் ஒப்புவிக்கும்படி வாயிற் காப்போனைக் கட்டளையிட்டான். தன் நல்வினையேபோல் வாயிற் காப்போன் முன் செல்ல, அந்த ப்ராம்மணீ வாஸவதத்தா தேவியிடம் அழைத்துப்போகப் பட்டாள். அரசனனுப்பி, வாயிற்காப்போனால் அழைத்து வரப்பட்டதால் வாஸவதத்தா தேவி அந்த அந்தணஸ்த்ரீயிடம் நம்பிக்கையுள்ளவளானாள். இரட்டைக் குழந்தைகள் படைத்திருப்பதையும், அவள் இருக்கும் எளிமையையும் பார்த்து தேவி யோஜிக்கலானாள்: "அந்தோ, மக்களையாக்கும் பிரமனின் கோணலேயே பற்றிய நடத்தைகளில் ஒன்று இது! நல்ல இடங்களில் பொறுமை! கெட்ட இடங்களில் பற்று! எனக்கு ஒரு பிள்ளைகூட இன்னும் பிறக்கவில்லை; இவளுக்கு இவ் விரட்டைகள் உண்டாயிருக்கின்றன!" இப்படி எண்ணினவளாய், ஸ்நானம் செய்ய விரும்பி, சேடிகளைக் கூப்பிட்டு அந்த ப்ராம்மணிக்கு ஸ்நானம் முதலியவற்றைச் செய்து வைக்கும்படி கட்டளையிட்டாள். நீராட்டி வைத்து, உடையளிக்கப்பட்டு, அச்சேடிகளால் ருசியான போஜனம் செய்விக்கப்பட்ட

ப்ராம்மணீ, காய்ந்து உலர்ந்த பூமி தண்ணீர் தெளிக்கப் பட்டால் எப்படிப் பெருமூச்சு விடுமோ, அம்மாதிரி பெருமூச்சு விட்டாள். இப்படி ஆச்வாஸப் படுத்தப்பட்ட அந்த ப்ராம்மணீயை யுக்தியாய்க் கதைகள்பேசி பரீக்ஷை செய்ய எண்ணி, ஓய்வு நேர்ந்தவுடன் வாஸவதத்தாதேவி சொன்னாள்: 'ப்ராம்மணீ, நமக்கு ஏதாவது ஒரு கதை சொல்லுங்கள்.' இப்படிக் கேட்கப்பட்ட ப்ராம்மணீ ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

உபகதை 1.

ஸ்த்ரீ ஸாஹஸம்.

முன் ஜயதத்தன் என்று ஸமான்யமான அரசன் ஒருவனிருந்தான். அவனுக்கு தேவ தத்தன் என்ற மகன் உண்டானான். யௌவனத்தை அடைந்த அந்த மகனுக்கு மணம் செய்துவைக்க விரும்பி, புத்திசாலியான அந்த அரசன் யோஜித்தான்: "நிலையே இல்லாதவளான அரசர்களின் ஸ்ரீ, வேசிபோல், எவன் பலவானோ அவனால் அனுபவிக்கப்படுகிறவள்; வர்த்தகர்களுடைய லக்ஷ்மீயோ குலஸ்த்ரீயைப் போல் ஸ்திரமாயும் பிறரிடம் செல்லாதவளாயும் இருப்பவள். ஆகையால் என் பிள்ளைக்கு வர்த்தகர் குடியிலிருந்து பெண் எடுக்கிறேன்; பல தாயாதிகளுள்ள ராஜ்யத்தில் எவனால் ஆபத்து வருமோ?" இப்படி நிச்சயித்துத் தன் பிள்ளைக்காக பாடலிபுத்ர நகரைச்சேர்ந்த வஸுதத்தன் என்ற வணிகனின் கன்னிகையை வேண்டினான். மேலான ஸம்பந்தத்திலிருந்த வாஞ்சையால் வஸுதத்தனும் தூர தேசமாயிருந்தும், ராஜகுமாரனுக்குத் தன் மகளைக் கொடுத்தான். அவனது (அரசகுலத்துத்) தந்தையின் செல்வத்திலிருக்கும் மதிப்பு கூடக்குறைந்து போகும்படி அந்த மாப்பிள்ளையை வர்த்தகன் ரத்னங்களால் நிரப்பினான். வர்த்தக மகளோடுகூடிய தன் மகனுடன் ஜயதத்த அரசன் சுகமாக இருந்தான். ஒரு ஸமயம் மிகவும் ஏங்கினவனாய் வஸுதத்தன் தன் ராஜ ஸம்பந்தியின் அரண்மனைக்கு வந்து, பெண்ணைத் தன்னகத்திற்கு அழைத்துக் கொண்டு போனான். இதற்குப்பிறகு கொஞ்ச காலத்தில் அரசன் ஜயதத்தன் காலமானான். அவனுடைய தாயாதிகள் கிளம்பி அவன் ராஜ்யத்தைப்பற்றிக் கொண்டார்கள். தாயாதிகளின் பயத்தால், குமாரன் தேவதத்தன் தன் தாயாரால் இரவில் ஒருவராலும் பார்க்கப்படாதபடி வேறுதேசம் கொண்டு போகப்பட்டான். அங்கு ராஜபுத்ரனைப் பார்த்து தாயார் சொன்னாள்: "கிழக்கு திக்கில் நமக்கு யஜமானனான சக்ரவர்த்தி இருக்கிறார்; அவரை அடைந்தால் அவர் உன்னுடைய நாட்டை உனக்கு ஜயித்துக் கொடுப்பார்."

ஸிப்பந்திகளில்லாமல் வெறும் ஆளாய் நான் போனால் அங்கு யார் என்னை மதிப்பார்கள் என்று ராஜகுமாரன் தாயைக் கேட்டான். "உனது மாமனாரிடம் செல்; அவரிடமிருந்து பொருளைப் பெற்று, வேண்டிய ஸிப்பந்திகளை ஏற்படுத்திக் கொண்டு சக்ரவர்த்தியிடம் செல்" என்றாள் மாதா. இப்படி மாதாவினால் தூண்டப்பட்ட ராஜபுத்ரன், வெட்கித்தவனாயிருந்தும், மெள்ளப் புறப்பட்டு, இருட்டும் ஸமயம் தன் மாமனின் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். தந்தையில்லை; செல்வமில்லை; கண்ணீர் வந்துவிடுமோ என்ற பயம்: இப்படி யிருக்க, அகாலத்தில் இரவில் மாமன் வீட்டிற்குள் நுழைய அவனுக்கிருந்த லஜ்ஜை இடம் கொடுக்கவில்லை. ஆகையால் மாமன் வீட்டுக்கருகில் ஒரு சத்திரத்தின் திண்ணையில் தங்கினான். அங்கு தங்கினவன், அன்றிரவு, தன் மாமன் வீட்டிலிருந்து திடீரென கயிற்றின் வழியாய் கீழிறங்கும் ஸ்த்ரீ யொருத்தியைக் கண்டான். ஒரு நொடியில் ரத்னத்தைப்போல் பளிச்சென்றும், வானத்திலிருந்து விழும் சுடர் போலும் இருந்த அந்தப்பெண் தன் மனைவி தான் என்று தெரிந்து கொண்டான்; உடனே தபிக்கலானான். அவளோ, அழுக்கேறியும் இளைத்துமிருக்கும் அவனைப் பார்த்தும் யாரென அறிந்து கொள்ளாதவளாய், 'யார்' என்று கேட்டாள். 'நான் ஒரு வழிப்போக்கன்' என்றான் அவன். பிறகு வணிகனின் மகள் சத்திரத்தினுள் நுழைந்தாள்; ராஜபுத்ரனும் அவளை மறைந்திருந்து பார்ப்பதற்காக உள் நுழைந்தான். உள்ளே ஒரு புருஷனையடைந்தாள்அவள்; அப்புருஷன் 'நீ நாழி கழித்து வந்தாயே' என்று காலால் அவளை உதைத்தான். பிறகு மேலும்அவனிடம் காமங் கொண்டவளாய் அந்த கெட்டபெண், அவனை நல்வார்த்தை சொல்லி, அவனுடன் தன் னிஷ்டப்படி அவ்விடத்தில் இருந்துவிட்டாள். அதைப்பார்த்துக் கொண்டிருந்த புத்திசாலியான ராஜபுத்ரன்: "இது நான் கோபிக்க ஸமயமில்லை; ஆகவேண்டிய கார்யம் வேறல்

லவா இருக்கிறது? என் ராஜ்யத்தைப் பற்றிக் கொண்ட சத்ருக்களின்மேல் பாயவேண்டும் இக்கத்தி; இந்த ஸ்த்ரீயின் மேலாவது, இந்த ம்ருகத்திற்கும் கேவலமான மனிதனின் மேலாவது எப்படிச் செல்லும்? இந்த துஷ்ட ஸ்த்ரீயினுல் எனக்கினியென்ன ஆகவேண்டும்? துஷ்டவிதியின் செயல் இது. தகாத குலத்தில் செய்த ஸம்பந்தம்! இவளிடம் என்ன குற்றம்? காக்கை காக்கையைவிட்டு குயிலிடம் இன்புற்றிருக்குமா?" இவ்வாறு யோஜித்து, கள்ளக் காதலனேடு கூடிய மனைவியை உபேக்ஷித்தான். பெரிய கார்யத்தை ஸாதிக்க வேண்டும் என்ற ஆசையிருக்கும் பெரியோருடைய மனதிற்கு ஸ்த்ரீ என்ற புல் எவ்வளவு?

அச்சமயம் கேளியின் பரபரப்பால் வணிக புத்ரியின் காதிலிருந்து நல்முத்து ஆபரணம் கீழே விழுந்தது. அதை அவள் பார்க்க வில்லை. கேளி முடிந்ததும், அவஸரப்பட்டவளாய்க் கள்ளக் காதலனை விடைகேட்டுக் கொண்டு, வந்த வழியே அவ்விடத்தை விட்டுச் சென்றுள். அந்தக் கள்ளக் காதலனும் அவ்விடமிருந்து எங்கேயோ வேகமாய்ச் சென்றதும், ராஜபுத்ரன் அந்த ரத்னபரணத்தை எடுத்துக் கொண்டான். ரத்னத்தின் கிரணங்கள் பளிச்சென்றடிக்க, தனது கெட்டுப்போன ஐச்வர்யத்தைத் தேடவும், தன் துயராகிய இருளைப்போக்கவும் தைவம் கொடுத்த கைவிளக்கோ என்று தோன்றும் அந்த விலையுயர்ந்த ஆபரணத்தை எடுத்துக் கொண்டு, அந்த க்ஷணமே, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தான் வந்த கார்யம் கைகூடி விட்டதால், கான்யகுப்ஜம் சென்றுன்.

கான்யகுப்ஜத்தில் லக்ஷம் பொன்களுக்கு அந்த நகையை அடகுவைத்து, யானை, குதிரை முதலியவற்றை சேர்த்துக் கொண்டு, தன் சக்ரவர்த்தியினிடம் வந்து சேர்ந்தான். சக்ரவர்த்தி யுதவிய ஸைன்யங்களுடன் வந்து, பகைவரைத் தொலைத்து, தாய் 'நல்லது அப்பா' என்று இன்புற, கார்யத்தை செய்து முடிக்கும் தன்மையுள்ள ராஜபுத்ரன் தகப்பன் மூலம் தனக்கு வரவேண்டிய ராஜ்யத்தை அடைந்தான். கான்யகுப்ஜத்தில் அடகு வைத்திருந்த நகையை மீட்டி, வெளிவருமென்று நினைக்கப்படாத அந்த ரஹஸ்யத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று, மாமனிடம் அனுப்பினுன். மாமனும் தன்மகளின் கர்ணபரணம் அம்மாதிரி தன்னிடம் வந்ததும், தூக்கி வாரிப்போட்டதுபோலாகி, தன் மகளிடம் காட்டினுன். முதலில் நழுவிப்போன தன் நடத்தைபோல் தோன்றும் அந்த ஆபரணத்தை அவளும் உற்று நோக்கினுள்; கணவன் அனுப்பினுன் என்று கேள்விப்பட்டதும் கலங்கினவளாய் நினைவு மூட்டிக்கொண்டாள். "இது அன்றிரவு சத்திரத்தில் நழுவி விழுந்து விட்டது. அங்கு நின்று கொண்டிருந்த ஒரு வழிப்போக்கனைக் கண்டேனே, அவன் நிச்சயம் என் கணவனே; என் நடத்தையை தெரிந்து கொள்ளுவதற்கல்லவா அங்கு வந்திருந்தான்; என்னுல் தெரிந்துகொள்ள முடியவில்லையே; அவன் இந்த பூஷணத்தை எடுத்துக் கொண்டு போனுன்." இப்படி நினைத்துக் கொண்டு தனது கெட்ட நடத்தை வெளி வந்ததால் துன்புற்று பழிக்குஅஞ்சிய அவளுடைய ஹிருதயம் இரண்டாயிற்று. தன் பெண்ணின் மர்மங்களையறிந்த சேடியை யுக்தியாய்க்கேட்டு தத்வத்தை யறிந்தவனுய், வர்த்தகன் துயரைத் துறந்தான். ராஜ்யத்தை யடைந்துவிட்ட ராஜகுமாரன், இரண்டாவது ராஜ்யலக்ஷ்மீயோ என்று தோன்றும்படியான தன் சக்ரவர்த்தியின் குமாரியை, தனது குணங்களால் பெற்றுன்."

கதையை முடித்து ப்ராம்மணீ சொன்னுள்: "அரசி! இப்படி ஸாஹஸஞ்செய்வதென்றுல் ஸ்த்ரீகளின் நெஞ்சு வஜ்ரமாயிருக்கும். அந்த ஸ்த்ரீ ஹிருதயமே பயமும் ஆர்த்தும் வந்தால் பூவினும் மெலிந்ததாய் ஆகிவிடும். நல்ல குலத்திலே உதித்து, நன்னடத்தையால் பரிசுத்தமான உள்ளங்களோடு கூடிய சில பெண்மணிகளே, நல்முத்துகள்போல பூமிக்கே அலங்காரமாகிருர்கள். முன் சொன்னபடி ராஜ்யலக்ஷ்மீ, மானைப்போல் எப்பொழுதும் ஓடிப்போகும் தன்மையுள்ளவள்; சில புத்திமான்களே, அந்த லக்ஷ்மீயை தைரிய மென்கிற கயிற்றுல் கட்டிவைத்துக் கொள்ளத் தெரிந்தவர்கள். ஆகையால் நலனைக் கோருகிறவர்கள், ஆபத்திலும் தைரியத்தைக் கைவிடக்கூடாது. இவ்விஷயத்தில் மேற்சொன்ன கதையே அத்தாட்சி. என் ச்ரமத்திலும் நான் நற்குணத்தைக் காப்பாற்றி வைத்திருந்தது, தங்களைக் கண்ட நன்மையால் பலிதமாயிற்று." இப்படி ப்ராம்மணீ சொன்ன கதையைக் கேட்டு அந்த ஸமயம் வாஸவதத்தாதேவி ஆதரவுடன் யோஜித்தாள்: "இந்த ப்ராம்மண ஸ்த்ரீ

நல்ல குலத்தில் உதித்தவள்; இவளுடைய மேன்மையை இவள் தான் நன்னடத்தையுள்ளவள் என்ற விஷயத்தை த்வனிக்கும்படி சொன்ன அழகும் இவளுடைய பேச்சின் தேர்ச்சியும் நிச்சயமாய் சொல்லுகின்றன. ராஜஸதஸில் நுழைய அதனுலேதான் இவளுக்குத் திறமை யிருக்கிறது." இப்படி தனக்குள் யோஜித்துவிட்டு "அம்மணி! நீர் எவருடைய மனைவி? உம் வரலாறு என்னவோ? சொல்லும்" என்று மறுபடியும் அந்தணமாதைக் கேட்டாள். மறுபடியும் ப்ராம்மணீ பேச வாரம்பித்தாள்.

தேவி! மாளவத்தில் அக்னிதத்தன் என்று ஒரு ப்ராமணனிருந்தான். தான் லக்ஷ்மிக்கும் ஸரஸ்வதிக்கும் இருப்பிடமாயிருந்து, பல வேண்டுவோருக்குச் செல்வத்தை யளிந்து வந்தவன். அவனுக்கு ஒட்டியவாறு இருபிள்ளைகள் அவனுக்கு ஒருவர்பின் ஒருவராயுண்டானவர்: மூத்தவனுக்கு சங்கரதத்தன் என்று பெயர்; மற்றொருவன் சாந்திகரன். கீர்த்திமதி! அவ்விரு குமாரர்களில் சாந்திகரன் என்றவன் திடீரென படிப்பைக்குறித்து, சிறு பருவத்திலேயே தந்தையகத்தை விட்டு எங்கேயோ போய்விட்டான். மூத்தவன் என்னை மணந்து கொண்டான்; யக்ஞத்திற்கென்று மட்டுமே பொருள் சேர்த்த யக்ஞதத்தரின் மகள் நான். நாளடைவில், வயது முதிர்ந்த அக்னிதத்தர், என் கணவனின் பிதா, மேலுலகை யடைந்தார்; அவர் மனைவியும் காலமானுள். தீர்த்தாடனம் என்று சொல்லிப் பிள்ளையாண்டிருந்த என்னை விட்டு விட்டுப் போன என் பர்த்தா, துக்கத்தால் மதிமயங்கி, ஸரஸ்வதீ நதியின் வெள்ளத்தில் உயிரை விட்டுக் கொண்டார். பிறகு நான் துயருற்று இருக்கும்சமயம், திடீரெனத் திருடர்கள் வந்து நாங்களிருந்த அக்ரஹாரத்தை கொள்ளை யடித்தார்கள். அந்த ஸமயம் மூன்று ப்ராம்மண ஸ்த்ரீகளுடன், ஒழுக்கத்துக்குக் கேடுவரும் என்ற பயத்தால், ஒரே ஆடையுடன் ஓடிப் போனேன். வெகுதூரம் சென்று, அத்தோழிகளுடன் ஓரிடத்தில் ஜீவனத்திற்குக் கார்யஞ் செய்து கொண்டு ஒரு மாதம் தங்கினேன். 'வத்ஸராஜன் அனதைகளுக்கு சரணம் கொடுப்பவன்' என்று ஜனங்கள் சொல்லிக் கேட்டு, பிறகு அம்மூன்று தோழிகளுடன் சீலம் ஒன்றையே வழித்துணையாய்க் கொண்டு இங்கு வந்தேன். வந்ததும் அம்மூவர்கள்கூட இருக்கும் போதே இவ்விரட்டைகளைப் பெற்றேன். துயரம், அயல்நாடு, எளிமை, இரட்டைப் பிள்ளைகள், ஐயோ, ஆபத்தின் வாயிலே விதி திறந்து விட்டான். இவ்விரு குழந்தைகளுக்கும் வளர்ப்புக் கொன்றுமில்லையே யென்று பெண்களுக்கலங்காரமாயிருக்கும் நாணத்தை விட்டு ராஜஸதஸில் நுழைந்து வத்ஸராஜன் என்னுல் யாசிக்கப்பட்டான். ஆபத்திலிருந்துகொண்டு குழந்தைகளையும் பெற்றிருப்பவளின் கஷ்டத்தைப்பார்க்க யாருக்குத்தான் முடியும்? அரசனுடைய கட்டளையின்மேல் தங்களது அருகாமையை அடைந்தேன். தங்கள் இருப்பிடத்தின் வாயிலிலேயே திருப்பி யடிக்கப்பட்டவைகளாக என் துன்பங்கள் விலகின. இது என் வரலாறு. என் பெயர் பிங்களிகை; பால்யத்திலிருந்து அக்னியின் ஹோமப்புகைகளால் என் கண் சிவந்துபோனதால் அப்படி எனக்குப் பெயர் ஏற்பட்டது. தேவி, வேறு நாட்டை யடைந்த என் மைத்துனர் சாந்திகரர் எவ்விடம் இருக்கிறுர் என்பது இன்னும் தெரியவில்லை.

இப்படித் தன் வரலாற்றை உரைத்த அந்த அந்தண உத்தமியை இவள் நற்குலத்தவள் தான் என்று ஆராய்ந்து, ப்ரீதியுடன், தேவி சிறிது யோஜித்தவளாய், சொன்னுள். "இங்கு சாந்திகரர் என்ற எங்கள் புரோஹிதர் இருக்கிறுர்; அவர் அயல் நாட்டிலிருந்து வந்தவர்தான்; அவர் உமது மைத்துனராயிருக்கலாம்."

இப்படி எக்கத்துடனிருக்கும் ப்ராம்மணியிடம் சொல்லிவிட்டு, அன்றிரவை அப்படியே கழித்துவிட்டு, காலையில் சாந்திகரரை அழைத்து அவரது வம்சவரலாற்றைக் கேட்டாள் வாஸவதத்தை. அவர் வம்ச வரலாற்றைச்சொன்னதும், நன்றுய் நிச்சயம் ஏற்பட்டவளாய் மஹாராணி 'இதோ, உமது தமையன் மனைவி' என்று அவருக்கு ப்ராம்மணியைக் காண்பித்தாள். அறிமுகமானதும், தன் உறவினர் காலமானதைத் தெரிந்து கொண்டார் சாந்திகரர். பிறகு தமயன் மனைவியைத் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனுர். அங்கு காலமான தாய், தந்தை, தமயன் இவர்களுக்குத்துக்கம் கொண்டாடி, இரட்டைப்பிள்ளையுடன் இருக்கும் தமயன் மனைவியை ஆச்வாஸப்படுத்தினுர் சாந்திகரர். தேவி வாஸவதத்தையும் அவளுடைய இரு பிள்ளைகளையும் தனக்குப் பிறக்கப்போகும் பிள்ளைகளுக்குப்புரோஹிதர்களாக ஏற்பாடு செய்தாள். அவ்

விருவர்களில் முதல்வன் சாந்திஸோமன்; மற்றவன் பெயர் வைச்வானரன்; இப்படி ஏராளமான செல்வத்தை அளித்து இருவர்களுக்கும் வாஸவதத்தையே பெயரிட்டாள்.

முன்னிருந்து யாரோ பொட்டைக்கண்ணனை இழுத்துக் கொண்டு போவதுபோல, யாரோ அதற்கென்று ஏற்பட்ட தலைவர்கள் தங்கள் முயற்சியினால் பயன்படுமிடத்திற்கு மனிதனை இழுத்துக் கொண்டு போகும்போது, நம் பௌருஷம் என்பது ஒரு நிமித்தமே ஒழிய வேறில்லை. அங்கு வந்து, ஐச்வர்யமடைந்து இப்படி அவ்விரு குழந்தைகள், அந்த ப்ராம்மணீ, சாந்திகரர் எல்லோரும் சேர்ந்து கொண்டார்களே!

பிறகு, நாட்கள் பல கழிய, ஒரு ஸமயம் ஐந்து குழர்ந்தைகளுடன், சட்டியும் கையுமாக வந்து நிற்கும் குசவஸ்த்ரீ யொருத்தியைப் பார்த்து, பிங்களிகையிடம் வாஸவதத்தை சொன்னாள்: "இவளுக்கு ஐந்து பிள்ளைகள்; எனக்கு ஒன்றுகூட இல்லையே; புண்யத்திற்கு இப்படியிருப்பவள் பாத்ரம்; இவளைப் போல்கூட இல்லையே என் போன்றவர்கள்!" என்று. அதற்குப் பிங்களிகை, "தேவி, துன்பத்திற்கென்றே இம்மாதிரி வினைமிக்க மக்கட்பெருக்கு ஏழைகளிடமே தோன்றுகிறது. உன் போன்றவர்களிடமோ ஒரு மகன் தோன்றினால் அவன் மேலானவனாயிருப்பான். ஆகையால் அவஸரப்படவேண்டாம்; சீக்ரத்தில் தங்களுக்குத் தகுதியான மைந்தன் பிறப்பான்" என்று கூறினாள். இப்படிப் பிங்களிகை சொல்லியும் பிள்ளை பிறப்பதற்காக ஏங்கினவளாய் வாஸவதத்தை, பிள்ளையின் நினைவினால் ஆட்கொள்ளப்பட்ட மனதுடனேயே இருந்தாள். இப்படி இருக்கும் போது, வத்ஸராஜன் வந்து 'தேவி, பரமசிவனை வழிபட்டுப் பிறக்க வேண்டிய தாயிருக்கிறது குழந்தை' என்று நாரதர் சொன்னார்; ஆகையால் வரந்தரும் சிவன் இவ்விஷயமாய் நம்மால் ஆராதிக்கப் படவேண்டும்,' என்று வாஸவதத்தையின் மனதைத் அறிந்தவனாய்த் தெரிவித்தான்.

விரதம் செய்வதென்ற நிச்சயத்தை வாஸவதத்தை செய்து கொண்டாள். அவள் நோன்பெடுத்துக் கொண்டதும், அரசனும் மந்திரிகளுடன், நாடு முழுதும் தன்னை யனுஸரிக்க, சங்கரனை ஆராதனை செய்யும் விரதத்தை நடத்தலானான். அந்த தம்பதிகள் மூன்றிரவு உண்ணாமல் கடவுளை யண்டியே வஸித்தனர்; அதன் பிறகு ஈச்வரன் தானாகவே அருள் செய்வதற்காகத் தோன்றினவராய் கனவில் கட்டளை யிட்டார்: "இருவரும் எழுந்திருங்கள்; உமக்கு மன்மதனின் அம்சம் பிள்ளையாய்ப் பிறக்கும்; அப்பிள்ளை என்னருளால் வித்யாதரர்களுக்கு அதிபதியாக ஆவான்," என்று. இப்படி மொழிந்துவிட்டு மதிமுடி மஹாதேவன் மறைந்ததும், தம்பதிகள் விழித்து, அவ்வளவு சீக்கிரமாய் வரனைப் பெற்று, கார்யம் கைகூடினவர்களாய்த், தானாய்த்திரண்ட பெருங்களிப்பை யடைந்தனர்.

காலையில் எழுந்திருந்து, மந்திரி வர்க்கத்திற்குத் தமக்கேற்பட்ட கனவைச் சொல்லி அவர்களை மகிழ்வித்து, மஹாராணியும் மஹாராஜனும் வேண்டியவர்களுடனும் அண்டினவர்களுடனும் பெரும்விழாக் கொண்டவர் போல், தம் விரதத்தின் பாரணையை நடத்தினர். சில நாட்கள் கழிந்ததும், வாஸவதத்தையின் ஸ்வப்னத்தில் ஜடை தரித்துக் கொண்டிருந்த புருஷனொருவன் வந்து பழமொன்றை அவளிடம் கொடுத்தான். இப்படித் தெளிவாகத் தோன்றிய கனவை அவள் அரசனிடம் தெரிவிக்க, அரசன், மந்திரிகளால் போற்றப்பெற்று, வாஸவதத்தையோடு மிகவும் மகிழ்ச்சியடைந்து, சந்திரசூடன் பழ உருவாகப் பிள்ளையையே கொடுத்தாய் நினைத்துத் தனது மனோரதம் கிட்டி விட்டதென்று தீர்மானித்துக் கொண்டான்.

முதலலை முற்றிற்று.

மொழி பெயர்ப்புக் கலை.

(மும்மொழியாளன் எழுதியது.)

மொழி பெயர்ப்பு என்பது ஒரு தனிக்கலை. அதனைக் கையாளுவோர் பல வகைப்படுவார். தொல்காப்பியத்துச் சூத்திர மொன்றிலே தமிழ் நூல் இயற்றும் வகைகளுள் ‘மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்’ என்பதுவும் ஒரு நல்ல நெறியாகக் காட்டப்பட்டிருக்கிறது, இச்சூத்திரத்தின் உரையிலே “மொழி பெயர்த்து என்பது பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ் நூலாகச் செய்தது” என்றும் “அதர்ப்பட” என்பது நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழி பெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்த வாற்றானே செய்யப்படும்............மொழி பெயர்த்து எனவே, பொருள் பிறழாமை பெற்றாம்” என்றும் காணப்படுகின்றது. இவ்வுரை யாசிரியர் கருத்துப்படி, மொழி பெயர்ப்பாசிரியர் நூலாசிரியர் பிறமொழியிலே கூறியவற்றை தன் மொழியிலே அப்படியே அமைக்க வேண்டுமே யன்றி பொருளைச் சிறிதும் மாற்றி அமைக்கக்கூடாது. இம்முறை சாஸ்திரங்களுக்கும் வேதாகமங்களுக்கும் ஏற்றது; ஆயினும் கவிதை கட்டுரை முதலிய இலக்கிய நூல்களுக்குப் பொருந்தாது. தொல்காப்பியனாரோ காவிய இலக்கணம் கூறுபவர். பிறமொழிக்கு நேரான தமிழ் மொழிகளை அமைப்பதில் என்ன கவிதை இருக்கிறது. அவ்வாறு செய்யப்படும் நூலையும் ஒரு நூலாகக் கருதி மொழிபெயர்ப்பு என்பது வழி நூல் இயற்றும் நால்வகையுள் ஒன்று என்று தமது காவிய இலக்கணத்திலே சிறப்பித்துக் கூற மாட்டார். ஆதலின் ‘அதர்ப்பட’ என்னும் சொல்லுக்குப் பொருள் வேறு ஆதல் வேண்டும். தொல்காப்பியர் எந்த இலக்கியங்களை மனதிலே வைத்துக் கொண்டு இவ்வாறு இலக்கணம் வகுத்தார் என்று நாம் அறிய முடியுமானால் ‘அதர்ப்பட’ என்பதன் உண்மைப் பொருளை அறியலாகும். வடமொழி ராமாயண பாரதங்களைத் தமிழிலே அமைத்த இராம சரிதம், பாண்டவ சரிதம் முதலான நூல்களே அத்தகைய நூல்களாகும். இவற்றின் சிற்சில பகுதிகளே உரைநூல்களிலே உதாரணங்களாகக் காட்டப் பெற்று இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றை ஆராய்ந்தால் தமிழ்க்கவிகள் கையாண்ட மொழி பெயர்ப்பு முறை தெளிவாகும். இவ்வாறு ஆராய்ந்தால், ‘அதர்ப்பட’ என்பதன் பொருள் “முறையாக” “நேர்வழியிலே” என்பதும், தமிழ் மக்களின் உணர்ச்சிகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் கொள்கை கருத்துக்களுக்கும் பொருந்தியவாறு மொழி பெயர்ப்பதே “அதர்ப்பட மொழி பெயர்த்தல்” என்பதும் விளங்கும். இப்பழைய மொழி பெயர்ப்பாளர் காலத்திலே தமிழ் நாடும் தமிழ் மொழியும் புத்துயிர் பெற்று வளர்ந்தது. அவ்வாறான காலத்திலே இருந்த இலக்கிய கர்த்தாக்கள் எவ்வாறு மொழி பெயர்த்திருப்பார்கள என்பதை ஆங்கில நாட்டிலே ஷேக்ஸ்பியர் காலத்திலே நாடெங்கும் ஜீவசக்தி பரவியபோது சில இலக்கியக்காரர் லத்தீன் கிரேக்க பாஷைகளினின்றும் மொழி பெயர்த்த முறையை ஆராய்ந்தும் அறியலாம். இவ்வாறான ஆராய்ச்சியைக் கையாண்டு மத்தேசன் (Matthiessen) என்பார் “மொழி பெயர்ப்பு எலிஸபெத்திய காலத்துக் கலை” என்று ஒரு நூல் வெளியிட்டுள்ளார். அந்நூலின் முகவுரையிலுள்ள சில வசனங்களை இங்கே மொழி பெயர்த்துக் கூறுவேன்.

“மொழி பெயர்ப்பாளரின் வேலையும் தேச சேவையாகும். அவர்களும் பிறநாட்டுச் செல்வங்களை நாடிச்சென்று சேகரித்துத் தமது நாட்டினைத் தழைக்கச் செய்வர். அவர்கள் கற்றோர் சிலருக்குமட்டும் பாடுபடவில்லை. தமது தாய் நாட்டிற்கும் தாய் மொழிக்கும் சிறப்பு வேண்டி உழைத்தார்கள். அவர்களுடைய நடை பொதுஜனங்களின் மனதை வசீகரிக்கும் எளிய நடை; பாஷைக்குள் புதுச் சொற்களைப் புகுத்தி அதற்கு வளப்பம் அளித்தார்கள். அவர்களுடைய சொற்கள் பசுமரத்தாணிபோல் மனதிலே பதியும் சக்தி வாய்ந்தன; பழமொழிகள் மிகுந்து இருக்கும் அவர்கள் நடையிலே; அவர்கள் காலத்திலுள்ள கொள்கைகள் அபிப்பிராயங்கள் முதலியவை யெல்லாம் மொழிபெயர்ப்பிலே அமைந்து அதற்கு ஒரு விசேஷ வன்மையைத் தரும். கண்முன் சித்திரித்துக் காட்டும் சொற்சக்தி யுள்ளது அவர்களது நடை. காலக்கருத்துக்களுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க அவர்கள் அஞ்சமாட்டார்கள். தம் காலத்திலுள்ள ஜனங்களின் கலாஞானத்தைப் பெருக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன்

அவர்கள் தைரியமாய் தங்கள் காலத்து வழக்கங்களை முற்காலத்திலே வேறு தேசங்களிலே நிகழ்ந்த கதைகளை மொழி பெயர்க்கும்போதும் புகுத்தி விடுவார்கள். இவர்களது மொழி பெயர்ப்பினின்றும் இவர்கள் காலத்திலே வழங்கிய நாகரீகத்தின் சிறு அம்சங்களையும் நுட்பங்களையும்கூடத் தெரிந்து கொள்ளலாம். அவ்வளவு கற்பனாசக்தி விளங்கும் அவர்கள் செய்த மொழிப்பெயர்ப்புகளிலே."

இவ்வாறு 'மத்தேசன்' ஆசிரியர் செய்துள்ள ஆராய்ச்சி முறையை நாமும் கைப்பற்றிப் பயன் பெறலாம். கம்பராமாயணம் வான்மீகி செய்த ஆதிகாவியத்தின் மொழி பெயர்ப்பு. ஆனால் கம்பர் வாழ்ந்த சோழ காலத்து வாழ்க்கை நலங்களையும் நாகரீகத்தையும் பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் அக்காலத்து தமிழ் மக்களிடையே வழங்கிய கலாஞானத்தையுமே ஆராய்ந்து அறியலாமன்றோ? இதுபோலவே, நமது காலத்து அபிப்பிராயங்களும் செய்திகளும் பாரதியார் பாரதத்தினின்றும் மொழிபெயர்த்துப் பாடிய 'பாஞ்சாலி சபத'த்திலே கவிதா சக்தியுடன் விளங்குகின்றன அன்றோ?

மஹேந்திரவர்மனும் மதராஸ் கார்ப்பொரேஷனும்.

சில்பஸ்ரீ பத்திராசிரியருக்கு :

ஐயா,

"யதா ப்ரதோஷேஷு ச ஸாகரஸ்தா" என்று வால்மீகி ஸுந்தர காண்டத்தில் ஸாயங்காலங்களில் கடற்கரையிலிருக்கும் அழகை உபமானமாய் எடுத்தார். கடற்கரையை அண்டினதுமே சிறுமைகள் நழுவி, மனம் ஒரு பரப்பை அடைகிறது. குறுகிய சந்துகளில் சிறு வீடுகளிலிருந்து நடந்து வந்தவர்களின் அங்குல நோக்கங்கள் கடற்கரையை அடைந்ததும் அகண்டமான அளவின்மையைக் கண்டு ஒரு விழிப்பையும் வியப்பையும் அடைகின்றன. இங்கு ஒன்றை விட்டு மற்றொன்றைப் பிரிக்கும் தடைச்சுவர்கள் இல்லை; பெரும் வெளி; வேறெங்கே சென்றால் இப்படிப் பெருமை அதாவது ப்ருஹத்வம், ப்ரம்மத்தின் தன்மை, நம்மனுபவத்திற்கு ஏற்படும்?

நம் பண்டைத் துறைமுகங்கள் வெறும் வியாபார ஸ்தலங்கள் மட்டுமல்ல; கோயில்களாகவுமிருந்து, ப்ரம்மத்தை நினைவு மூட்டிக் கொண்டிருந்தன; மனதும் அங்கூரமிட்டு, அமைதியாயிருக்கும்படியான க்ஷேத்ரங்கள்.

பல்லவ மன்னர்களுக்கு மஹாபலிபுரத்தின் கடற்கரை அகப்பட்டது. அக்கடற்கரையை அவ்வரசர்கள் ப்ரபஞ்சத்தின் சிறு ப்ரதிபிம்பமாய்ச் செய்து ஸப்தலோகங்களையும் ஸப்த ஆலயங்களாக்கி, ஸமுத்ர ராஜனுக்குக் காணிக்கையாய் அர்ப்பணம் செய்தார்கள். நமது சென்னை நகர நிர்வாஹ ஸபையினருக்கும் நம் கடற்கரையை அழகுபடுத்த வேண்டும் என்ற ஜ்வரம் கண்டுவிட்டது. ஆனால் நம்மவர் ஸமுத்ர ராஜனுக்குக் கொடுக்கும் காணிக்கை என்ன? இரண்டு கக்கூஸ்கள்.

வே. ரா. 18—12—1938.

கீதப் பகுதி.

ச்யாமா சாஸ்திரிகள்
செய்த தமிழ்க் கீர்த்தனை
(இதுவரையில் வெளி வாராதது)

ராகம் : கௌளிபந்து — தாளம் : சாபு

பல்லவி

தருணம் ஈதம்மா என்னை ரக்ஷிக்க !

அனுபல்லவி

கருணாநிதியாகிய காமாக்ஷி ரக்ஷிக்கத் (தருணம்)

சரணங்கள்

அநுதினமும் எந்தன் வாக்கில் உன் நாமம்
அது வல்லால் மற்றொன்றும் இல்லை என் நேமம்
மனக்கவலையைத் தீர்க்க மறு தெய்வம் உன்னைப் பார்க்க
எனக்குண்டோ ? உனக்கேற்க இரங்கி உன் கண்பார்க்கத் (தருணம்)

ஆதி சக்தி என்று பேர் எடுத்தாயே !
அகிலமும் வர்த்திக்க அவதரித்தாயே !
சாதகம் போல் உன்னைச் சரணம் என்றேன்,
என்னை ஆதரிக்கப் பின்னை ஆர் உண்டு சொல், அன்னை! (தருணம்)

காமித பலத்தைக் கைமேல் தருவாயே
கண் பார்த்து ரக்ஷிப்ப தெப்போதும் நீயே
ஸோமசேகரர் பாதி ! ஸுந்தரி ! கௌமாரி
ச்யாமக்ருஷ்ண ஸோதரி ! சைலராஜ குமாரி ! (தருணம்)

இந்தக் கீர்த்தனத்தை உதவிய ச்யாமா சாஸ்திரிகள் கொள்பேரன் பிரம்மஸ்ரீ ச்யாமா சாஸ்திரிகளுக்கு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.—பத்திரிகாசிரியர்.

கானரஸமும் கவிதையும்.

(அகமர்ஷணன் எழுதியது.)

கவிதை என்பது ஒரு தனிக் கலை; கானம் வேறொரு தனிக் கலை. ஆயினும் இவை இரண்டும் ஒன்றை யொன்று போஷிப்பதினாலே இவற்றிற்குள்ள அடிப்படையான வேற்றுமையை நாம் நன்கு உணர்வதில்லை. பாட்டின் அழகோடு சேர்ந்த கவிதை நமது மனதையும் செவியையும் சேர்த்திழுக்கின்றது; கவிதையழகோடு சேர்ந்த கானமும் அவ்வாறே. ஆயினும், உண்மைக்கவிதையை நாம் உணரவேண்டுமானால் அதைக் கானத்தினின்றும் பிரித்தறிந்தே உணரவேண்டும். கவிதையின் அழகு சொல்லின் அமைப்பிலும் கருத்திலும் விளங்குவது; பாட இனியது என்பதனால் ஒன்றை நல்ல கவிதை என்று சொல்லமுடியாது. பாட்டின் அழகைக் காண இயலாதவனுக்கும் நன்கு விளங்குவது தான் நற்கவிதை. இசையறிவில்லாதவனே கவிதையை விமர்சனஞ் செய்யத் தகுந்தவன் என்று கூடச் சொல்லி விடலாம்.

இதுபோலவே கானரஸமும்; இது சிசுவையும் பசுவையும் பாம்பையும் மூர்க்கனையும் வசீகரிக்கின்றது. எவ்வளக்கெவ்வளவு ஒருவனுக்கு கவிதையில் அபிருசி இல்லையோ அவ்வளவுக்கவ்வளவு அவன் கானரஸத்தைக் கண்டறிவதில் பிராமாணிகன் ஆகின்றான். உயர்ந்த கானத்திலே நாம் சொல்லழகையோ கருத்தழகையோ கவனிப்பதில்லை. சொல்லழகும் கருத்தழகும் இருக்கும் பாட்டுகள் நம்முடைய கவனத்தை அவ்வழகுகளாலே கவரும்; அதனால் அவை உயர்ந்த பாட்டுகள் என்று நாம் நினைக்கக்கூடாது; சொல்லழகும் கருத்தழகும் விளங்காத கானமே மேலான கானம் என்று கூடச் சொல்லிவிடலாம். தியாக ராஜய்யரவர்களின் கீர்த்தனைகள் தெலுங்கு பாஷையிலே உள்ளன. அவற்றின் சொற்சுவை பொருட்சுவை தமிழருக்கு விளங்குவதில்லை. அதுவே அந்த கீர்த்தனைகளிலுள்ள கானரஸத்தை நாம் முற்றும் அனுபவிப்பதற்கு ஹேதுவாகிறது. அதுபோலவே தான் முத்துஸ்வாமி தீக்ஷிதாவர்களின் ஸாஹித்யங்களும். வடமொழி தெரியாத வரையிலே நாம் தீக்ஷிதாவர்களின் கிருதிகளின் இசையழகுகளைக் கருத்தழகிலும் சொல்லழகிலும் கலங்கி விடாமல் சுத்தமாக அனுபவிக்கத் தகுந்தவர்களாகிறோம். வடமொழிப் பயிற்சியிருந்தால் நாமும் ஸமஸ்கிருதப் பண்டிதர்களைப்போல் இவர்களின் கவிதா விமர்சனத்திலே இறங்கி, 'இவர்பாட்டு மிகவும் மட்டமானது; காளிதாஸனுக்கு ஒப்பாவாரோ இவர்? ஸமஸ்கிருதங்கூட சிற்சில இடங்களிலே பிழையாக இருக்கிறதே' என்றும் நினைப்போம். அல்லது, நமது இசைஞானம் வெற்றி பெற்று விட்டால், இவர் பாடல்களிலுள்ள இசையின்பத்திலே நம்முடைய விவேகத்தை யிழந்து, 'இவருடைய கவிதா சக்தி எவ்வளவு சிறந்துள்ளது, ஒரு காளிதாஸனும் கூட இவரை வெல்ல முடியாது' என்றெல்லாம் பிதற்றுவோம்.

ஆகையால் நாம் இசை ஞானத்தையும் கவிதா சக்தியையும் தனித்தனியே பிரித்து உணரவேண்டும். இசைப்பாடல்களிற் பல கவிதை ததும்புவனவாக இருக்கின்றன; கவிஞர் பலர் நல்லிசை நிபுணர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால் ஒருவருடைய இசைவல்லபத்தை நாம் அளவிடும்போது, கவியின்பத்தைக் கணக்கிலே சேர்க்கக்கூடாது; கவிகளின் தாரதம்மியங்களைப் பகுத்துணர விரும்புவோர் அக் கவிகளின் பாடல்களிலே யுள்ள இன்னிசைகளால் மருண்டு விடக் கூடாது. இவ்வுண்மை நம்மவரால் வேத காலம் முதல் உணரப்பட்டு வந்தது. ஸாமவேதத்தின் பெருமை அதன் இசையிலே என்பதும் ருக் யஜுஸ்களின் பெருமை அவற்றின் கவிதையிலே என்பதும் அடிப்படையான தத்துவங்கள். தமிழிலே தேவாரங்கள் ஸாமவேதம் போலே; திருவாசகம் மற்றை வேதங்கள் போலே. தேவாரங்களிலே சிவபெருமானின் லீலைகளிற் சில திரும்பவும் திரும்பவும் கூறப்பட்டுள்ளன. கவிதா விமர்சகன் இவற்றைக் கண்டு "இவை தெய்வப்பாடல் என்கிறார்களே; இவற்றிலே விசேஷமான சொல்லழகு பொருளழகு ஒன்றும் காணவில்லையே" என்று திகைப்பான், "திரும்பத் திரும்ப அதே சொற்களையும் கருத்துகளையும் பிரயோகிக்கிறார்களே இவர்கள்; இது புனருக்தி தோஷமாகாதோ?" என்று இழிவாகவும் நினைப்பான்.

இது ஏன்? விமர்சகன் இவற்றை யெல்லாம் கவிதை என்று தவறாகக் கொள்வதாலன்றோ இவ்விபரீதங்கள் விளைந்தன. உண்மையை அறிந்தோர் இவ்வாறு நினைப்பார்களா? தேவாரப்பதிகங்கள் கானவிசேஷங்கள் அல்லவா? மூவர் பாடியனவெல்லாம் பண்ணார்பாடல்கள் அல்லவா? எவ்வளவுக்கெவ்வளவு கவிதா கற்பனை குறைவு படுகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு இசைக் கற்பனைகள் செழித்தோங்குவதற்கு வசதி யுண்டாகும். அதனாலல்லவா திருப்பதிகங்கள் சாதாரணச் சொற்களிலே பல்லோரும் அறிந்த சிவலீலைகளைக் கூறுவனவாக அமைந்துள்ளன. சொற்செறிவும் கற்பனைச் செறிவு மிருந்தால் அவையே இப்பதிகங்களின் பண்ணினிமையை முற்றும் அனுபவிப்பதற்கு இடையூறுகளாவன என்று எண்ணியேபோலும் இசை மார்க்கதர்சிகளான மூவரும் தங்கள் கவிதாசக்திகளைக் கையாளாமல் கலப்பில்லாத கானரஸத்தின் பரீவாஹமாகவே திருப்பதிகங்களை ஓதினார்கள். இது பற்றியே, பிற்காலத்து அறிஞர்களும் இவர்கள் பாடிய பதிகங்கள் கவிகள் ஆகாதவாறு அறிந்து உரை யெழுதாது விடுத்தனர். எனவே, இசைப்பாட்டுகளில் அமைந்த கவிதையினும் கானத்தையே பெரிதெனக் கொண்டு, அவைகளைப்பாடி இன்புறுவதே முறையாகும்.

சங்கீதமும் சிற்பமும்.

ஸ்ரீமதி டாக்டர் C. மீனாக்ஷி அம்மாள், M.A., Ph.D.,

சங்கீதம் தென்னிந்தியாவில் எக்காலத்திலும் எச்சமயத்திலும், எல்லா மன்னர்களாலும் போஷிக்கப்பட்டு ஒரு விலையற்ற மாணிக்கத்தைப் போல் பிரகாசித்து இருந்தது.

நம் தமிழ் நாட்டின் புராதன சங்கீதத்திலுள்ள விவரங்களை எடுத்துரைக்கும் நூல்கள் சில உள. அவைகளில் சிலப்பதிகாரம் என்னும் நூலே மிகச் சிறந்தது என்று சொல்லலாம். இதில் மூன்றாவது அத்தியாயமான அரங்கேற்று காதையை நாம் கொஞ்சம் ஆராய்ந்து படிப்போமாகில், தமிழ் நாட்டில் இரண்டாவது நூற்றாண்டிலேயே சங்கீதம் இவ்வளவு சிறப்பை அடைந்திருந்ததா வென்று நமக்கு வெகு ஆச்சரியத்தை விளைவிக்கும். கீதம், வாத்தியம், நிருத்த மென்று சொல்லப்

படும் சங்கீதத்தின் மூன்று அம்சங்களையும் இச் சிலப்பதிகாரம் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

தென்னிந்தியாவில் பிராசீன காலத்தில் அநேக வாத்தியங்கள் பழக்கத்தில் இருந்தனவென்று நாம் அறிகிறோம். இவ் வாத்தியங்களின் பெயர்களையும் அவைகளின் வர்ணனைகளையும் சிலப்பதிகாரத்தைப் போன்ற நூல்களிலிருந்து அறியலாம். ஆனால் இவ்வாத்தியங்களின் சரியான உருவத்தை அறிவதற்குரிய படங்கள் இந் நூல்களில் கிடையா. ஆகவே கற்களில் செதுக்கப்பட்ட பண்டைய காலத்துச் சிற்பங்களின் மீது நம் கவனத்தைச் செலுத்தவேண்டியதாக இருக்கிறது. இவ்விதமான சிற்பங்களை எங்கு முக்கியமாகக் காண்பதென்றால், பண்டைய காலத்தில் வெகு பக்தி சிரத்தையுடன் நேர்த்தியாகக் கட்டப்பட்ட ஆலயங்களிலேயே. பாண்டிய, பல்லவ, சோழ விஜயநகர ராஜாக்கள் ஆண்ட ராஜ்யங்களில் அவரவர் காலத்தில் அமைத்த பல ஆலயங்கள் இன்றைக்கும் காணலாம். இவ் வாலயங்களின் சுவர்களிலும் கோபுரவிமானங்களிலும் மண்டபத்துத் தூண்களிலும் அழகு வாய்ந்த அநேக சிற்பங்கள் இருக்கின்றன. சங்கீத சம்பந்தமான சிற்பங்களையும் நிருத்த அபினயச் சிற்பங்களையும் சாதாரணமாக பலவிடங்களிலும், முக்கியமாகக் காஞ்சீபுரம், சிதம்பரம், கும்பகோணம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை முதலிய இடங்களிலும் காணலாம். இப்பொழுது காஞ்சீபுரத்தை மட்டும் எடுத்து ஆராய்வோம்.

மூன்றாவது நூற்றாண்டிலிருந்து ஒன்பதாவது நூற்றாண்டுவரை தென் இந்தியாவை ஆண்ட பல்லவ அரசர்கள் காஞ்சிமா நகரத்தைத் தங்கள் முக்கிய பட்டணமாகச் செய்து கொண்டார்களென்பது சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இப் பல்லவர்கள் காஞ்சியில் அநேக ஆலயங்களை எடுப்பித்ததுண்டு. இவைகளில் முதல் முதலாகக் கற்களால் கட்டப்பட்ட ஆலயங்களிலொன்றாகும், தற்காலம் கைலாசநாதர் கோயில் என்னுஞ் சிவாலயம். இக் கோயில் 'கச்சிகற்றளி' என்று தமிழ் நூல்களிலும் சாசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைக் கட்டினவன் எட்டாவது நூற்றாண்டில் ஆண்ட ராஜஸிம்ஹ பல்லவன் என்ற அரசன். இவன் சங்கீதத்தில் நிபுணனென்றும் வீணைவாசிப்பதில் நாரதனை யொத்தவன் என்றும் மேற்சொன்ன கோயிலின் சாசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, இக் கோயிலின் சிற்பங்களில் அநேக வாத்யங்கள் இருப்பது இதைக் கட்டினவனுடைய சங்கீத அபிலாஷையை வெளிப்படுத்துகிறது. கஞ்சி கைலாச நாதர் கோயிலில் சிவ பெருமானை வீணாதரனாக இரண்டு சிற்பங்களில் காணலாம். இவ் விரண்டிடத்திலும் பரமசிவன் வீணையைக் கையில் தரித்துக் கொண்டு இருக்கிறார். இச் சிற்பங்களிலுள்ள வீணைகளுக்கும் தற்காலத்தில் உபயோகிக்கும் வீணைக்கும் பலவித வித்தியாசம் உண்டு. கைலாசநாதர் சிற்பங்களிலுள்ள வீணைகளுக்கு ஒரே சுரைக்காய்தான் உள்ளது. இச் சுரைக்காயைச் சிவன் தன் இடது தோளின் மேல் சார்த்தித் தண்டத்தின் மேல் அமைத்திருக்கும் தந்திகளை மீட்டுகிறார். ஒரு சிற்பத்தில் வீணைக்கு நான்கு தந்திகளும் மற்றொரு சிற்பத்தில் ஒரே தந்தியும் செதுக்கப்பட்டிருக்கிறது.

கைலாசநாதர் கோயிலில் மற்றொரு இடத்தில் பார்வதி கையிற் ஒரு வீணையை வைத்திருக்கிறாள். இச்சிற்பத்தில் உள்ள வீணையை ஏறக்குறையத் தற்காலத்து வீணைக்கு ஒப்பிடலாம். ஆனால் இதற்கு மெட்டுகள் அமைக்கப் படவில்லை. தண்டத்தின் நுனியில் மகர முகத்துக்குப் பதிலாக ஓர் இலைபோன்ற உருவம் அமைந்திருக்கிறது. இம்மாதிரியான வீணைகள் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலின் சிற்பங்களிலும் காணலாம்.

'பின் சித்தார்' (Bin Sitar) என்று ஒரு வாத்தியம் இருக்கிறது. இது வடக்கே அபூர்வமாய் வாசிக்கும் வாத்தியங்களில் ஒன்று. இவ் வாத்தியத்தை ஒட்டிய ஒரு வாத்தியம் கைலாசநாதர் கோயில் சிற்பங்களில் தென்படுகிறது. இவ் வாத்தியம் இக் கோயிலில் மட்டுமே யன்றி புதுக் கோட்டையைச் சேர்ந்த கொடும்பாளூர் மூவர் கோயிலின் ஒரு சிற்பத்திலும் காணப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு வாத்தியம் தமிழ் நாட்டில் எட்டாவது நூற்றாண்டிலிருந்து பதினைந்தாவது நூற்றாண்டுவரையில் வழங்கி வந்ததாகத் தெரிய வருகிறது.

தமிழ் நாட்டில் முன்காலத்தில் பலவிதமான யாழ்கள் பழக்கத்திலிருந்தன. யாழ்களின் விவரங்கள் சிலப்பதிகாரத்திலிருந்து

நமக்கு ஏராளமாய்க் கிடைப்பன. திரு ஞான சம்பந்த மூர்த்தியின் ஆப்த சிநேகிதரான திரு நீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் வாசிப்பதில் வெகு திறமை வாய்ந்தவரென்று பெரிய புராணத்திலிருந்து தெரிய வருகிறது. தமிழ் நூல்களில் வர்ணித்துள்ள யாழ்களை யொட்டி இரண்டு வாத்தியங்கள் கைலாச நாதர் கோயில் சிற்பங்களில் உள. இவைகள் அக்காலத்தவர் வாசித்துவந்த ஒரு விதமான யாழ்கள் என்றே கூறலாம். தமிழ் நூல்களை ஆராய்ந்தோமாகில் யாழும் வீணையும் வெவ்வேறு வாத்தியம் என்று அறிகிறோம். "இன்னிசை வீணையர், யாழினர் ஒருபால்" என்று திருவாசகத்தில் சொல்லியிருக்கிறது:—அதாவது யாழினரும் வீணையரும் வெவ்வேறாகப் பிரிக்கப் பட்டுளர். யாழ்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த வாத்தியங்களென்றும், வீணை வடதிசையாரியர்கள் தென்னாட்டுக் கொண்டுவந்த ஓர் இசைக் கருவி எனவும் சிலர் அபிப்பிராயம். தம்புரா என்பது பக்க சுருதிக்கு உதவும் நரம்புக் கருவிகளில் ஒன்றாகும். இது ஓர் உயர்ந்த வாத்தியம். பல்லவர்கள் காலத்தில் தென்னிந்தியாவில் நிருத்தத்தைச் சேர்ந்த சங்கீதங்களுக்குத் தம்புராவை பெரும்பாலும் உபயோகித்ததாகத் தெரியவருகிறது. கைலாசநாதர் கோயிலில் மூன்றுவிதமான தம்புராவைக் காணலாம்.

"அகப்பைக் கின்னரி" என்று சொல்லப்படும் வாத்தியம் ஒன்று மேற்படி கோயிலின் சுவரில் செதுக்கப்பட்டு இருக்கிறது இந்த அகப்பைக்கின்னரி, இராமேச்வரத்திலுள்ள கோயிலில் ஓர் கின்னர ஸ்த்ரீயின் கையிலும் பார்க்கலாம்.

கைலாசநாதர் கோயிலில் எங்கெங்கு சிவனை நிருத்தமூர்த்தியாகச் சிற்பத்தில் காண்பித்து இருக்கிறதோ அங்கெல்லாம் சிவகணங்கள் வாயில் குழலை அதாவது புல்லாங்குழலை வைத்துக்கொண்டு வெகு உற்சாகத்துடன் ஊதுவதைப் பார்க்கலாம். ஒரு துளை அமைந்த குழல்களையும்,. எண் துளைகள் அமைந்த குழல்களையும் சாதாரணமாய் நாம் சிற்பங்களில் கண்டுபிடிக்கலாம்.

மேற்படி சொல்லப்பட்ட கைலாசநாதர் கோயில் சிற்பங்களெல்லாம் நாளுக்குநாள் பழுதாகின்றன, இக்கைலாசநாதர் கோயிலைத்

தவிர காஞ்சியில் பல்லவர்கள் மற்றும் அநேக கோயில்களை கட்டினார்கள். சோழராஜாக்கள் அநேக ஆலயங்கள் ஏற்படுத்தினார்கள். விஜயநகர அரசர்கள் அநேக கோபுரங்களை நிலை நிறுத்தினார்கள். இவைகளிலுள்ள சிற்பங்களில் சங்கம், டமரு, கொக்கரை, குடமுழா, பேரி மற்றும் அநேக தாளவாத்தியங்களும் செதுக்கப்பட்டு இருக்கின்றன.

இப்படித் தென்னிந்தியாவில் அநேக க்ஷேத்திரங்களுக்குப்போய் ஆங்காங்கு கற்களில் செதுக்கியுள்ள சிற்பங்களைக் கவனித்துப் பார்த்துப் புராதன நூல்களில் இருக்கும் வர்ணனைகளை ஆராய்ந்து ஒப்பிடுங்கால் நாம் பண்டை வாத்தியங்களைப்பற்றி அநேக விஷயங்களைத் தெரிந்துக் கொள்வோம் என்பதற்குச் சந்தேகமில்லை.

மேற்படி விஸ்தரிக்கப்பட்ட வாத்தியச் சிற்பங்கள் பண்டைக்காலத்து இந்து ஆலயங்களில் மட்டும் இருக்கின்றன என்று நினைக்க வேண்டாம். வெகு பிராசீன பௌத்த ஆலயங்களிலும் தென்படுகின்றன. குண்டூரைச் சேர்ந்த அமராவதியிலும் நாகர்ஜுனிகொண்டாவிலும் தோண்டி எடுக்கப்பட்ட சலவைக் கல் சிற்பங்களில் அநேக அபூர்வ வாத்தியங்கள் இருக்கின்றன. மேலும் பல்லவர் காலத்தில் தென்னிந்திய நாகரீகத்திற்குட்பட்ட ஜாவா என்று சொல்லப்படும் சாவகத்தீவிலே உலகமெல்லாம் கொண்டாடப் பொருந்திய "பொராபதூர்" என்று வழங்கும் ஒரு பௌத்த ஆலயத்தில் விசித்திரமாகச் செய்யப்பட்ட அநேக சிற்பங்களின் மத்தியில் நாம் பல தென்னிந்திய வாத்தியங்களையும் கண்டு வியப்பு அடையலாம்.*

---

* இக் கட்டுரையின் ஆரம்பத்திலுள்ள சில்பம் கொடும்பாளூர்க் கோயிலிலும், இப்பக்கத்திலுள்ளது காஞ்சீபுரம் கைலாஸநாதர் கோயிலிலும் உள்ளன.

சில்பப் பகுதி.

சிலாவதாரம்

(விசாரதன் எழுதியது)

இறைவன் யாரும் அறியாத தொல்லுருவன், ஆயினும் அவனுக்கு ஒரு குணம் உண்டு; உயிர்கள் பலவும் தன்னை வணங்கி உய்யுமாறு வணங்கும் துறைகள் பலபல ஆக்கி, சமயங்கள் பலபல ஆக்கி, அவையவைதோறும் தன் மூர்த்திகளைப் பலபலவாய்ப் பரப்பி வைக்கிறான். தன்னை வேண்டுவோர் வேண்டும் வடிவத்தை எடுத்துக் கொள்கிறான். 'தெய்வம் பொய்யானால் சாணகத்தைப்பார்' என்று சொல்வதுண்டு; அதாவது, "சாணகத்தால் ஒரு உருண்டை செய்து அதிலே தெய்வத்தை ஆவாஹனம் செய்து சிரத்தையுடன் பூசித்தால், அந்தச் சாணக உருண்டை தெய்வமாகி விடும்; அது கேடுறாது; அதில் புழு உண்டாகாது" என்பது இந்தப் பழமொழியின் பொருள். இதுபோலவே, தெய்வமானது வேண்டுவோர் வேண்டும் உருவிலே ஆவிர்ப்பவித்து அவர்கள் வேண்டும் நன்மைகளை அளிக்குஞ் சுபாவமுடையது. இராவணன் செய்த கொடுமைகளைத் தேவர்களே தாங்க முடியவில்லை. அவர்கள் பகவானைத் துதிக்கிறார்கள். "இராவணனைக் கொல்வதற்கு, பகவானே, நீ அழுக்கு மானிடச் சாதியிற் பிறக்கவேண்டும்" என்று பிரார்த்திக்கிறார்கள். பகவான் அவ்வாறே அவதாரஞ் செய்கிறான். இதுதான் அவதார ரகசியம். தேவர்கள் வேண்டியவாறு ஸ்ரீராமனாக அவதரித்ததுபோலவே, வேத புருஷன் வேண்டியவாறு பகவான் ஸ்ரீ வேங்கடேசனாக அவதரிக்கிறான். வேத புருஷன் "பகவானே, நீ கிரிஷ்டன் ஆகிறாய்" என்று துதிக்கிறான்; பகவான் கல்லோடு கல்லாய் மலைமேல் நிற்கிறான். வேத புருஷன் "பகவானே, நீ தான் பரதேவதை; இதர தெய்வங்கள் உனக்கு அங்கங்கள்" என்று பாடுகிறான்; பகவானும் அயனையும் அரனையும் திருமாமகளையும் தன் அங்கங்களாகக் காட்டிக்கொண்டு சிற்பாவதாரமாய்த் திருமலையிலே நிற்கிறான். பகவானுடைய வாக்காகப் பிறந்த ஸ்ரீ கீதாதேவியானவள் "அன்னிய தேவதைகளை அடிதொழுவோரும் பகவானையே தொழுவோராகிறார்கள்" என்கிறாள்; அவ்வாக்கின் படியே திருவேங்கடத்தானும்

ஏறனைப் பூவனைப் பூமகள் தன்னை
வேறின்றி விண் தொழத் தன்னுள்
வைத்து

விளக்குகிறான்.

எனவே, திருவேங்கடத்தானுடைய திருவுருவம் வேத புருஷனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, எத்தெய்வத்தை வணங்குவோரும் தன்னையே வணங்கினார்கள் ஆக வேண்டும் என்னும் பரம காருண்யத்தாலே பகவான் எடுத்த சிலாரூபமான அவதாரம் ஆகும்.*

* இக்கருத்தையே, 'கொண்ட சமயத்தர் தேவனாகி' என்றும், 'மாலை மகிழ்ந்தொருபால் வைத்தான் போலும்' என்றும், 'நாரணன் காண்! நான்முகன்காண்' என்றும், தேவாரம் வற்புறுத்துவது. திருவேங்கட முடையானை ஹரிஹர மூர்த்தியாகக் கொள்பவரும் உளர்.—பத்திரிகாசிரியர்.

நாட்டியப் பகுதி

நாட்டியக்கலை.

(துகளன் எழுதியது.)

நாட்டியம் என்பது ஒரு பாஷை. இப்பாஷையை உணர்ந்தோர் அபிநயங்களால் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ள முடியும். இதை ஊமையர் பாஷை என்றுஞ் சொல்லலாம். ஆனால் பேசும் பாஷைகளைவிட நாட்டியபாஷை ஒருவகையிற் சிறந்தது. பேசும் பாஷையை அறிந்துக் கொள்வதற்கு அந்த பாஷையிலே பயிற்சி வேண்டும். அபிநயங்களைக் கொண்ட நாட்டிய பாஷையிலே அடிப்படையானவற்றை யாரும் கல்விப் பயிற்சியின்றியே உணர்ந்து கொள்ளலாம். இதற்குக் காரணம் நாட்டியத்திலே அடிப்படையாக அமைந்துள்ளவை மக்களுக்குப் பொதுவான அங்கசேஷ்டைகளும் முகராகங்களும் அவயவ அபிநயங்களுமே. இது பற்றியே, நமக்குத் தெரியாத பாஷையிலே நடிக்கப்பெறும் பேசும் படங்களாகிய 'டாக்கி'களையும் பேசாப் படங்களாகிய 'சினிமா'க்களையும் நாம் கண்டு மகிழ்கிறோம். நவ ரஸங்களையும் எப்படி அபிநயித்துக் காட்டுவது என்பதை ஆராய்ந்து நாட்டிய சாஸ்திரங்களிலே நம் முன்னோர்கள் வெளியிட்டிருக்கிறார்கள், நமது சிற்பிகள் அந்த அந்த அபிநயங்களோடு நடிக்கும் மூர்த்தங்களாகவே, கல்லினும் செம்பினும் தெய்வங்களையும் அடியார்களையும் உலக வாழ்க்கையுமே சித்திரித்துக் காட்டியிருக்கிறார்கள். இவற்றினின்றும் நமது நாட்டியக் கலையின் தொன்மையையும் பெருமையையும் எளிதில் நாம் உணரலாம்.

மனதிலே நிகழும் கருத்துக்களை அபிநயித்துக் காட்டும்போது, சில பொருள்களுக்கு அபிநயம் கல்பிக்க வேண்டும். இவற்றையும் நம் முன்னோர் நமக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் ஒரு தனி பாஷையைக் கற்பது போல நாம் கற்றுக் கொண்டாலன்றி, நாம் பரதநாட்டியத்தை முற்றிலும் அனுபவிக்க முடியாது. இவற்றை அமைப்பதிலே நம்மவர் விசேஷ கவனம் செலுத்தியுள்ளார்கள். இவை பெரும்பாலும் இயற்கை அபிநயத்திற்கு ஏற்றவாறு அமைக்கப் பெற்றிருப்பதால், பரதநாட்டிய பரிபாஷையானது ஸர்வ தேசங்களுக்கும் பொதுவான பாஷையாகி அறிய எளிதாகின்றது.

இயற்கை அபிநயங்களை நம்மவர் எவ்வாறு வகுத்துக் கொண்டார்கள்? நம் நாட்டிலே வாழ்ந்த பெரியோர் நடையுடை பாவனைகளினின்றுமே இவை அமைக்கப் பெற்றன. இதனாலேதான், நாட்டியத்தைப் பார்த்தால், உண்மை யனுபவத்தையே காண்கிறோமோ என்று தோன்றுகிறது. பெரியோரின் நடையுடைபாவனைகளைப் பார்த்தால், அவர்கள் நடிக்கிறார்களோ என்று தோன்றுகிறது. பெரியோர்களுக்கு சோககோபங்கள் வந்தபோது அவர்களைப் பார்த்தால், அந்த சோககோபங்களை அபிநயித்துக்காட்டுவதுபோலத் தோன்றும். இவ்வுண்மையைக் குறிப்பதான சுலோகங்கள் இராமாயணத்திற் சில இருக்கின்றன. ஸ்ரீராம

ரும் லக்ஷமணரும் சீதாப்பிராட்டியும் காட்டுக்குப் புறப்படுகிறார்கள். அவர்கள் ஏறிச்செல்லும் தேரின்பின் கௌஸல்யை ஓடுகிறாள். அவர்களின் பொருட்டு அவள் கண்களினின்றும் கண்ணீர் பெருகுகின்றது. "அப்படி நாட்டிய மாடுவாள் போலிருந்த தாயாரை ஸ்ரீராமர் அடிக்கடி உற்றுநோக்கினார்" என்று ஸ்ரீராமாயணத்திலே கூறப்பட்டுள்ளது. ஆரண்ய காண்டத்திலே கரதூஷணாதிகளை எதிர்க்கும்போது ஸ்ரீராமர் சகல ராக்ஷஸர்களையும் கொல்வதற்கென கடுங்கோபத்தை மேற்கொண்டார் (க்ரோதம் ஆஹாரயத் தீவ்ரம்) என்று கவி பாடுகிறார். இது போன்றே, பரத நாட்டிய அபிநயங்கள் பெரியோர்களின் செயலை அனுகரிப்பன என்று சிலப்பதிகாரத்தினின்றும் அறியலாகும்.

ஆயர் பாடியில் எருமன்றத்து
மாயவனுடன் தம்முன் ஆடிய
வாலசரித நாடகங்களில்
வேல் நெடுங்கண் பிஞ்ஞை யோடாடிய
குரவை ஆடுதும் யாம் என்றாள்.

வடமதுரைக்கு அருகிலேயுள்ள இடைச்சேரியிலே ராமனும் கிருஷ்ணனும் நப்பின்னையோடு இளம் பருவத்திலே யாடிய கூத்தை அனுகரித்தே, தென்மதுரைக்கு அருகிலேயுள்ள இடைச்சேரியிலே ஆய்ச்சியர் குரவை நிகழ்ந்தது. இவ்வாறு நல்லோர்களை அனுகரிப்பனவாக பரதநாட்டிய அபிநயங்கள் அமைந்துள்ளன வாதலால், அவை அகத்திலுள்ளவற்றையெல்லாம் முகத்திலும் வேறு அங்கங்களிலும் நன்கு விளக்கிக் காட்டும் சிறப்பு வாய்ந்திருக்கின்றன. இவ்வாறு பொருள் வாய்ந்தனவாயுள்ள அபிநயங்களையன்றி, பொருளுணர்த்துங் கருத்து ஒன்று மில்லாத சுத்த நிர்த்தங்களும் உண்டு. இவற்றிலே ஒரு சில பாவனைகளை விளக்குவனவாக இருப்பினும், இவற்றின் வைசித்திரியமே இவற்றிற்குப் பெருமையளிப்பதாகும். இவ்வகைச் சுத்த நிர்த்தங்களையும் நாட்டிய நூலார் பாகுபாடு செய்திருக்கிறார்கள்.

'தேஹம் எடுத்ததின் தத்துவம் என்ன' என்ற வினவிற்கு சரீரத்தை 'வசப்படுத்தி, நம்முடைய நடையாலும் பாவனைகளாலும் அங்கசேஷ்டைகளாலும் நமது மனதிலுள்ள அழகிய கருத்துகளை விளக்குவதும் நாம் செய்வதெல்லாம் சுத்த நிர்த்தங்களாகவும் நல்ல அபிநயங்களாவும் ஆமாறு நடந்து கொள்வதுமே' என்று நாட்டிய நூலார் கூறுவர்.

தமிழ்ப் பரதம்.

(ஸ்ரீ சோமசுந்திர தேசிகர் எழுதியது.)

பரதம் என்ற வடமொழிச் சொல் தமிழில் கூத்து என்ற பொருள்படும். இக்காலத்திலே கூத்து என்ற சொல் தெருவில் ஆடும் ஒரு வகைக் கூத்தைக் குறிக்கும். ஆனால் முற்காலத்தில் கூத்து என்ற சொல் நடனம் என்ற சொல்லை யொத்து நடிப்பதைக் காட்டும். நடராஜப் பெருமானுக்குக் கூத்தன் என்பது பெயர்; தியாகப் பெருமானுக்கு ஆடவல்லான் என்பது பெயர்.

இக்காலத்திலே பரத நாட்டியம் என ஒரு சொல் வழங்குகிறது. இச்சொல்லின் பொருள் விதி தவறாத நடனம் என்று 'தமிழ் லெக்ஸிக'னில் காணப்படுகிறது. இந்தப் பரத நாட்டியம் சிறிது காலத்திற்கு முன்னர் சதிர் என்ற பேரால் வழங்கிவந்தது. சதிர் என்ற பதம் சதரா என்ற உருது மொழியின் சிதைவாகும்.* சதிர், பரதம், நாட்டியம் என்பன ஆடுதல் என்ற ஒரு பொருள் குறித்த சொற்களே யாகும்.

தமிழ் நாட்டில் கூத்தான பரதம் தொன்று தொட்டு, நடந்து வந்த தொரு காரியம் எனத் தெரிகிறது. சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதையின் உரையில் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் ஆதிவாயிலார் செய்த பரத

* சதி என்னும் சொல்லின் திரிபு என்று கூறுவாருமுளர். ப—ர்.

சேனாபதீயம், பாண்டியன் மதிவாணனார் செய்த மதிவாணர் நாடகத்தமிழ் நூல்போன்ற நூல்களைக் கூறுகின்றார். பதிப்பாசிரியராகிய மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் சுத்தானந்தப் பிரகாசம் என ஒரு நூல் குறித்துள்ளார்கள். இந்த நூல் தமிழும் வடமொழியும் விரவி யெழுதப்பட்ட நூல். முதலில் ஷோடச கணபதிகளுக்கு நமஸ்காரம் கூறப்பட்டுள்ளது. பின்னர்,

சுத்தானந் தப்பிரகா சமிகவே சொல்லியிச்
சத்தான தாளத் தமிழ்தனக்கு—மெத்தியசீ
ரைந்துநிறத் தோந்திவயிற் றைந்துகரத் தந்தி முகக்
கந்தமதக் கற்பகமே காப்பு.

நூறுமுக மாய்ப் புகழ்ந்து நூறாயிரம்பேரை
வேறுமுகம் பார்த்திரக்க வேண்டாமே—ஆறு முகச்
சுத்தனைச்சத் திப்படைக்குச் சொற்றமிழ்ச்சித் ரக்கவிக்குக்
கர்த்தனைச்சற் றுத்துதித்தக் கால்

என்ற காப்புச் செய்யுள்கள் காணப்படுகின்றன. பின்னர் 'பரத லட்சணங்களைப் படித்துக் காட்டி நிருத்தம் பண்ண வேண்டியிருக்கும்' என்று கூறப்பகிசிறது. ஆயினும் இந் நூல் பல நூல்களின் தொகுப்பாகக் காணப்படுகிறது. தாளசமுத்திரம், பரத சாஸ்திரம் போன்ற நூல்களிலுள்ள செய்யுள்கள் இச் சுத்தானந்தப் பிரகாசத்தில் காணப்படுகின்றன.

பரத சாஸ்திரம் என்ற தமிழ் நூல் திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயிலில் வாழ்ந்த அரபத்த நாவலரால் செய்யப்பட்டது. அது சோமராயனாணைப்படி சாரங்க தேவரால் வடமொழியில் செய்யப்பட்ட பரதத்தைப் பின் பற்றி அகஸ்தியர் (6000) ஆறாயிரஞ் சூத்திரமாகச் சொன்னதை இவ் வாசிரியர் சுருக்கிச் செய்ததாகும். அந்த நூலுள் பாவம், இராகம், தாளம் மூன்றும் அடங்கியுள்ளன.

பரதம் என்று ஒரு ஏடு உண்டு. அதுவும் வடமொழி நூலின் வழி வந்ததென்றே தோன்றுகிறது. அதனில் பரதம் சொன்ன பேர்கள் என்ற தலைப்பின் கீழ்

சிவனுமையாள் பிரமராதியாம் விட்டுணுமூர்த்தி
ஐங்கரன் சுப்பிரமணிய ரானதோர் நந்திகேசன்
துங்க வெள்ளானை யிந்திரன் சோதிசே ரகத்தி யன்றான்
நாரதர் சோமராயர் நலந்திகழ் சாரங்கதேவர்
பாரினில் வசிட்டர் வியாழ பகவானும் பரதர் தாமும்
அருச்சுனன் கோகனன்றா னல்லனுமான யாக்கின வர்தாமும்
உச்சித வாணா சுரன்றன் னுஷா தேவி ராவணன்றான்
எத்தலம் புகழ்சங் கீதரத்னாகரர் தன்னோடிந்தத்
தேயத்திலிவர்கள் தன்னைத் தினந்தினம் வணங்கல் செய்வாம்

என்ற பகுதி காணப்படுகிறது. இதனால் இந் நூலுடையார் பரதர்செய்த பரதமும் சங்கீத ரத்னாகரர் செய்த சங்கீத ரத்னாகரமும் அறிந்தவர் என்று காண்கிறது. இந்த நூலில் நாட்டிய வகைகளே கூறப்பட்டுள்ளன. இந் நூலின் விரிவைப் பின்னொரு முறை விவரிப்பேன்.

சித்திரப்பகுதி.

சித்திர சக்தி.

(கௌசிகன் எழுதியது.)

நன்ருக எழுதப்பெற்ற சித்திரங்களுக்கு ஒரு விசேஷ சக்தி உண்டு. உயிரற்ற சுவரிலோ துணியிலோ காகிதத்திலோ எழுதப்பெறும் 'சித்திரங்கள்' உயிருள்ளன போன்று விளங்குகின்றன. இவ்வுண்மை பற்றியே இவை 'சித்திரங்கள்' அதாவது 'ஆச்சரியப்படத்தக்கவை' என்று பெயர் பெற்றன. இவ்வுண்மையை விளக்குங் கதையொன்று உண்டு. ஒரு சித்திரக்காரன் சுவரிலே ஒரு மதயானையை வரைந்து அதன் அருகிலே ஒரு சிங்கக்குட்டியை வரைந்தாளும். அந்தச் சித்திரத்துச் சிங்கக்குட்டி அந்த மதயானையின் மஸ்தகத்திலே பாய்ந்ததாம்.

அன்று ஒருபெண் சிங்கம் ஒரு கன்றீனும்
பாவனைபோலே யெழுதிப் பக்கத்தில்—ஓவியமாக்
காரானை யோன்றெழுதிக் காட்ட அரிக்கன்று துள்ளிப்
போராடிப் பாய்ந்தீ கதை பொய்யலவே

என்று இக்கதையை விறலிவிடுதூது என்னும் நூல் குறிக்கின்றது. நமது நூல்களிலே தெய்வங்களின் சித்திரங்களையும் மக்களின் சித்திரங்களையும் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 'ரத்நாவளி' என்னும் வடமொழி நாடகத்திலே ஸாகரிகை என்னும் தென்னுட்டு மாதரசி "நம்மூரிலே காமனைப் படத்தில் எழுதியும் சிலையாக அமைத்தும் தொழுவார்கள். வடநாட்டார் காமனை எவ்வாறு தொழுகின்றார், பார்ப்போம்" என்று மறைந்து காண்பதாகச் சொல்லப் பட்டுள்ளது. பொய்கையாழ்வாரும் "சுவர் மிசைச் சார்த்தியும் வைத்தும் தொழுவர்" என்பதனுல் சித்திரப் படத்தையே குறிக்கிருர். ஆண்டாளும், காமனை வழிபடும்போது, "காமதேவா! நின் பெயரைச் சுவரில் எழுதினேன்" என்று பாடுகிருள். பெரியாழ்வாரும் "இராம நம்பீ! உன்னுடைய விக்கிரமம் ஒன்ருெழியாமல் எல்லாம் என்னுடைய நெஞ்சகம் பால் சுவர்வழி எழுதிக் கொண்டேன்" என்று பாடுகிருர். பழைய கோவிற் சுவர்களிலே தெய்வங்களின் லீலைகளைச் சித்திரித்திருப்பதை இன்றும் காண்கிருேம். வரலக்ஷ்மி தேவியைச் சுவரிலே எழுதிப் பூஜிக்கும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது. இதுபோலவே, பண்டைக்காலத்தார் தங்கள் காதலர் காதலிகளை சித்திரத்தில் எழுதிக்கண்டு பிரிவாற்ருமையா லுண்டாம் வருத்தத்தைத் தணித்துக் கொள்வர். துஷ்யந்தன் சகுந்தலையின் பட்த்தை எழுதிக் காண்பதும், ஸாகரிகை அரசனின் படத்தை எழுதியபின் அதன் அருகே அவள் தோழி அவள் படத்தை யெழுதுவதும், நாடக நிகழ்ச்சிகளாம். இது போன்றே, தெய்வங்களைக் காதலிக்கும் பக்தர்களும் நாயகி பாவத்தை யடைந்து, தங்கள் தெய்வங்களின் 'எழுதரிய' ஸௌந்தர்யங்களைப் படத்திலெழுதி ஒருவாறு ஆசுவாஸமடைவதாகப் பாடுவது மரபு. இம்மரபை அனுசரித்தே பாரதியாரும்

> கண்ணன்முக மறந்து போனல்—இந்தக்
> கண்களிருந்து பயனுண்டோ?
> வண்ணப் படமுமில்லை கண்டாய்—இனி
> வாழும் வழி யென்னடி, தோழீ?

என்று பாடுகிருர்.

புஸ்தக விமர்சனம்.

திருவாரூர்ப் பள்ளு—கமலை ஞானப் பிரகாசர் பாடியது—[மயிலாப்பூர் நாச்சியப்பச் செட்டி தெரு 16. நெ. வீட்டிலிருக்கும் இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை. திரு. சோமசுந்திர தேசிகர் பதிப்பித்தது. டிசம்பர் 1938—விலை அணு 4.]

'பள்ளு' என்பது நாடகநூல்களுள் ஒரு வகை. அது தெய்வத்தையோ தனவானையோ சிறப்பித்துப் பாடும் முறையிலே அமைந்திருக்கும். இப் பள்ளு திருவாரூரிலே கோயில் கொண்டுள்ள தியாகப் பெருமானையும், ஆசிரியரின் காலமாகிய பதினாறும் நூற்றாண்டிலே நாலொத்தொன்று என்னும் ஊரிலே அப் பெருமானுக்குக் கைங்கரியஞ் செய்த பூமிநாதரையும் சிறப்பித்துக் கூறுவது. ஆசிரியர் காலத்திலேயே நடிக்கப் பெற்ற இந் நாடகத்தை காலக்கிரமத்தில் நேர்ந்த பல மாறுபாடுகளோடும் சில புதுக் கீர்த்தனங்களோடும் திருவாரூர் பவித்திரோத்ஸவ காலத்தில் ஆடுவது வழக்கம்.

இந் நாடகவகை பண்டைத் தமிழ் காலத்திலே இருந்ததாகத் தோன்றவில்லை. பன்னிரு பாட்டியல் என்னும் இலக்கணத்திலே இதற்கு இலக்கணம் கூறப்படவில்லை. ஆனால் வீரமாமுனிவரின் சதுரகராதியிலே இது ஒரு பிரபந்த வகையாகக் கூறப்பட்டுள்ளது. பள்ளுப் பிரபந்தங்களிலே கடவுள் வாழ்த்துக்குப் பின்னர், பள்ளன் பள்ளிகள் வரவு, ஆற்று வெள்ளம், பண்ணைக்காரன் வரவு, கணக்கு விவரம், மூத்தபள்ளியின் முறைப்பாட்டால் பள்ளன் தொழுவிலிருத்தல், அவனை மீட்டல், உழவு, நடுகை, பள்ளிகள் ஏசிக் கொள்ளுதல் இவை முக்கிய அம்சங்களாம்.

ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் இடையே வேறு பாடல்கள் அமைந்திருக்கின்றன. நாடகமாடும்போது, இவை இடையிடையே திரைக்குப் பின்னிருந்து பாடப் பெற்றன போலும். இவற்றிற்கு உதாரணமாக ஒரு பாடலைக் காட்டுவேன்.

வாடுகின்றாள் நின்மாலை வாங்கக் கிளியொன்று
தேடுகின்றாள் ஆரூர்த் தியாகரே—நாடி
அனங்கன் அம்பு சோரிய வேந்தனலை மொண்டு வீச வெம்பி
மனது நொந்து கலையிழந்த மான்.

பள்ளு நாடகத்திலே வரும் பாத்திரங்கள் கட்டியக்காரன், பள்ளன் அவன் மனைவியார் இருவர், பண்ணைக்காரன் ஆகிய ஐவரே. பாடி அபிநயிப்பதற்குரிய எளிய நடையிலே பாடல்கள் அமைக்கப்படுவன. திருவாரூர்ப் பள்ளிலே, மூத்தபள்ளி ஆரூர்ச்சிவபிரானை வணங்குபவள் என்றும் இளையபள்ளி ஸ்ரீரங்கப்பெருமாளை வணங்குபவள் என்றும் அமைத்து அவர்கள் ஏச்சிலே இருமூர்த்திகளின் லீலைகளும் வருணிக்கப் பெற்றுள்ளன. உதாரணமாகச் சில ஏச்சுக்களை எடுத்தெழுதுவேன்.

(1) வசமாக்க உன்னைப் போல் மருந்தார் வல்லார்?
மருந்திட்டான் வானவர்க்கு மாயன் அல்லோடி?
மருந்திட்டான் மாயனென்றாய்; உங்கள் ஆண்டைபோல்
வஞ்சநரிபரியாக மாயஞ் செய்தானோ?

(2) ஈசனன்று பாச மெறிகாலனைக் காலால்
எற்றினாற்போல் உன் மார்பில் எற்ற வேணடி.
ஓசைகோள் சகடுதன்னைக் கேசவன் முன்னாள்
எற்றினாற்போல் உன்மார்பில் எற்ற வேணடி.

பிறகு, இருவரும் தத் தமது தெய்வத்தைப் புகழ்கிறார்கள்.

வழிபயின்ற கல்லைப் பெண்ணாக
வகுத்தவனெங்கள் மாயனல்லோடி!
அழிதரும் அங்கத்தைப் பூம்பாவை
ஆக்கினான் எங்கள் அண்ணலல்லோடி!

புகழுரைகள் சைவ வைஷ்ணவ ஸம ரஸத்திலே முற்றுப் பெறுகின்றன:

கேசவனை ஏசுவது ஏது சொல்லடி?
கிட்டிப் பார்க்கில் அவர்க்கிவர் இட்டர் அல்லோடி?
ஈசனை நீ யேசுவது ஏது சொல்லடி?
இருவருக்கும் உறவன்றிப் பகையு முண்டோ?

இப் பள்ளு சென்ற ஆண்டிலே மூன்று பகுதிகளாக தமிழ்ப்பொழிலிலே வெளிவந்துள்ள தெனினும், அதனிற் காணும் சிற்சில பிழைகளை ஆசிரியர் குடும்பத்திலுள்ள சிறந்த பிரதிகளைக் கொண்டு திருத்தஞ் செய்து புஸ்தக வடிவிலே அச்சிட்டது பேருபகாரமாகும். இந்நூலே இப்பொழுது கிடைக்கும் பள்ளுப் பிரபந்தங்களுள் காலத்தால் முற்பட்டது என்றும் குருகூர்ப்பள்ளு இதனை அடுத்துத் தோன்றியது என்றும் பதிப்பாசிரியர் கருதுவர். ஆயினும், குருகூர்ப்பள்ளே முந்தியது என்று கொள்வதற்கு இடம் உண்டு.

அகஸ்திய தாஸன்.

சொல்விளக்கம்: ஆசிரியர் மயிலை சே. சோமசுந்தரம் பிள்ளை; விலை அணா 3; தமிழ்க்கடல் ஆபீஸ், 130 கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.

தமிழ் போதிப்பதிலும், மாணவர்கள் பிழைகளைத் திருத்துவதிலும் பலவருஷ அனுபவம் பெற்றவரும், தமிழ்ப் புலவருமான நண்பர் சே. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தொகுத்த இச் 'சொல் விளக்கம்' மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், தமிழைப் பிழையின்றி எழுத விரும்பும் எழுத்தாளர்களுக்கும் பயன்படும் என்பதில் ஸந்தேஹ மில்லை. அவர் தொகுத்த சொற்களுள் சிலவற்றை வேறு வகையாக இங்கு விவரித்துக் காட்டுவோம்.

யாசகன் வேண்டுவது அணுவில் அரையேயன்றி, அறை அல்ல. சோறி துர் நீர் சோரிவது இயல்பு. துரைகள் இறங்கும் துறைகளும் பிரஸித்தமே. பரி என்பது இட்ட பாரத்தைத் தாங்கும் ஒரு பாவமுமறியாத குதிரை; பறிப்பது, சில மஹா ஜனங்களது குல தர்மமாகும். புழுகு என்பது, ஒரு வகைப் பூனையிடமிருந்து சிறிது சிறிதாய் சிரமத்துடன் சேகரிக்கப்படும் பரிமள திரவியம்; புளுகு என்பதோ, மனிதன் என்ற ஜந்துவிட மிருந்தே யாதொரு சிரமமுமில்லாமல் ஏராளமாய் உற்பத்தியாவது. கோளை என்றால் இசைப் பாட்டு; இதைப் பாடுவதால் சில சமயம் ஏற்படுவதே கோலை ஆகும். மாயாவாதத்தில் பூர்ண பக்தி யுடையவரும் போளியைப் போலி எனத் துணியார். வேல் என்பது ஒரு ஆயுதம்; அதைத் தரித்தவனே வேள்.

பார்க்கவன்.

பத்திரிகாசிரியர் குறிப்புகள்

இவ்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ள 'தமிழ் நங்கையின் தங்கையர்' என்ற கட்டுரை, ஸ்ரீமான் R. P. ஸேதுப் பிள்ளையவர்களால், சென்னை அகில இந்திய ரேடியோவில் டிஸெம்பர் மாதம் 30 தேதி யன்று உபன்யாஸம் செய்யப்பட்டது. அதை எமக்குதவிய, ஸ்ரீமான் பிள்ளை யவர்களுக்கும், அதை பிரசுரிக்க அனுமதி கொடுத்த சென்னை அகில இந்திய ரேடியோ நிர்வாஹகர்களுக்கும் எமது மனமார்ந்தத வந்னம்.

வருஷா வருஷம் கூடும் ஸங்கீத மஹாநாடு, இவ் வருஷமும், உற்சாகத்துடன் நடந்தேறியது. அன்றன்று நடைபெறும் கச்சேரிகளை அவ்வப்போது, 'ஹிந்து' பத்திரிகையில் நாமே விமர்சனம் செய்திருப்பதால், அவைகளை மறுபடி இங்கு பிரஸ்தாபிப்பது அனுவசியமெனக் கொண்டோம். ஆனால் ஒரு விஷயம் மட்டும் விவரிக்கத் தகுந்தது.

மைஸூரிலிருந்து வந்த வாத்ய கோஷ்டியார் இரண்டு நாள், வாத்யக் கச்சேரி செய்த

னர். நமது கானமானது, சாரீரத்தைப் பிரதானமாகவும், வாத்யங்களை உபகாரமாகவும் கொண்டு ஸ்வர கமக ஸஞ்சாரங்களால் ராகங்கள் என்ற சித்திரங்களை கற்பனைசெய்வது. ஐரோப்பிய கானமோ, வாத்யங்களைப் பிரதானமாகக் கொண்டு ஏககாலத்தில் ஜனிக்கும் ஸ்வர ஸமூஹங்களின் ஸஞ்சாரங்களால், கோஷரூபமான சித்திரங்களை கற்பனைசெய்வது. இவ்விரண்டு கான முறைகளும் இப்படி வேறு வேறு மார்க்கங்களை அனுசரித்தவை. நமது கானத்தையும் மேனாட்டாரை அனுசரித்துக் கோஷரூபமாக்க முடியாதா என்று சிலர் கருதுவாராயினர். அவர்களுள் ஒருகக்ஷியார், இம் மைஸூர் கோஷ்டியார்.

இவர்கள் செய்திருப்பது என்னவென்றால், சாரீரம் என்ற அரசனை நீக்கி விட்டு, சாரீர ஸ்தானத்தில் குழல், திமிரி முதலியவற்றின் நாதத்தையுடைய துளைவாத்யங்களையும், பிடில்களையும் அமைத்திருக்கிறார்கள். அரசு போய்விட்டது; ஆனால் குடியரசு இன்னும் ஏற்பட வில்லை. ஏனென்றால், இவர்கள் வாசித்த பாட்டுகளெல்லாம், சாரீரத்துக்கென்று அமைக்கப்பட்ட பாட்டுகளே. மேலும்,சாரீரத்தை எப்படிப் பக்கவாத்யங்கள் அனுசரிப்பனவோ, அப்படியே, குரலின் ஸ்தானத்திலுள்ள குழல், பிடில் முதலியவைகளைப் பிற வாத்யங்கள் அனுசரிக்கின்றன. ஆகையால் இது ஒரு வாத்ய பஜனையேயல்லது, கோஷ முறையாகாது.

ஸ்தாயி என்பது ஏழு ஸ்வரங்களடங்கியதொரு ஸப்தகம்; வலிவு, சமம், மெலிவு எனப்பட்ட, மந்த்ரம், மத்யம், தாரம் என்ற ஸ்தானங்கள் மூன்றே சாரீரத்திற்குக் களம் அல்லது ஸஞ்சார பூமியாகும். தாரத்துக்கு மேலோ, மந்த்ரத்துக்குக் கீழோ சாரீரத்தால் எட்டிப் பாட முடியாது. ஆனால், வாத்யத்திலே, பல பல மந்தரமத்ய தார ஸ்தானங்களைக் கற்பித்துக் கொள்ளலாம். இப்படி ஒன்பது ஸ்தானங்களைக் கற்பித்துக் கொண்டால், ஒவ்வொரு ஸ்தானத்திலும், ஸ்வரங்கள் தனித்தனி அழகைப் பெறுவதால் ஒன்பது வகையாக ஸ்வரங்களை அனுபவிக்க ஹேதுவாகிறது. இப்படிப் பல பல ஸ்தானங்களின் பழக்கம் ஏற்பட்டால், ச்ருதி ஸ்வரஞானத்தைப் போல, இந்த நூதன ஸ்தானஞானமும் நமக்கு ஏற்பட்டுவிடும்.

சாரீரத்துக்கு ஒரே விதமான நாதமே உண்டு; திமிரி, குழல், பிடில் முதலிய வாத்யங்களுள் நாதவேறுபாடுகள் உள. இவை தனியாக வாசிக்கப் பட்டபோது, ஒன்றுக்கொன்று பரபாகமாகி, ஒன்றையொன்று நன்றாகப் பிரகாசிக்கச் செய்வன; கலக்குங்கால், நாத வைசித்ரியத்தைத் தருவன. பரபாகமாவதும், நாத வைசித்ரிய சித்தியும் லாபங்களே.

கோஷத்தை விரும்புவோர், இனிச் செய்ய வேண்டியதென்ன வென்றால்; ஸ்தானங்களை விருத்தி செய்து கொண்டு, எல்லா ஸ்தானங்களிலும் ஸஞ்சரிக்கத் தக்க வாத்தியப் பிரபந்தங்களைக் கற்பித்துக் கொள்ள வேண்டும். இவைகளுள், ஒவ்வொரு வாத்யத்துக்கும் ஒவ்வொரு ஸ்தானத்தைத் தரலாம்.

வாய்ப்பாட்டை அனுசரித்து வாசிப்பது, சாரீர கான முறையல்லவா? கோஷ வாத்யத்தில் வாத்யங்கள், முக்ய வாத்யத்தை அனுசரிப்பது போதாது; பற்பல இடங்களில் விபரீதமாகவும் வாசித்து, பற்பல விதமாக முக்ய வாசிப்பைப் போஷிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் பலபல விசித்ரமான கான க்ரியைகள் ஏற்படும். இவைகளும் லாபங்களே. ஆனால், எந்த வழியானாலும், ராக நஷ்டமோ, கமக நஷ்டமோ சம்பவிக்கக் கூடாது. இது ஸாத்யமா என்பதை இன்னொரு சமயம் ஆராய்வோம். இன்னும், சங்கீத மஹா நாட்டில் நடந்த லக்ஷண சர்ச்சைகளைப்பற்றியும், லக்ஷியங்களைப்பற்றியும் மற்றொரு சமயம் விவரிக்கலாம்.